REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 21 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்

வரு. 92 இல. 120 | Tuesday 21, May, 2024 | 16பக்கங்கள் | 50/-




## ஹெலிகொப்டர் விபத்தில்
# ஈரான் ஜனாதிபதி உயிரிழந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவிப்பு
## ஈரானில் ஐந்து நாட்கள் துக்கதினமாக பிரகடனம்
### இலங்கையிலும் இன்று துக்கதினம் பிரகடனம்; உலக தலைவர்கள் அனுதாபம்

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளிநாட்டமைச்சர் அமீர்அப்துல்லாஹியன் உள்ளிட்ட முக்கிஸ்தர்கள் பயணித்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில், சகலரும் உயிரிழந்ததாக ஈரான் அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது. ஈரானின் எட்டாவது ஜனாதிபதியாக கடந்த 2021 இல், இப்ராஹிம் ரைசி பதவியேற்றிருந்தார். நாட்டின் வளர்ச்சியில் முக்கிய 06



# காலநிலை மாற்றம் நீர் பிரச்சினை; ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்



## யுத்த அழிவுகளுக்கு உதவியளிக்கும் நாடுகள் காலநிலை அழிவுகளைத் தடுப்பதற்கு உதவ வேண்டும்; –ஜனாதிபதி

உக்ரைனில் ஏற்படும் உயிர் அழிவுகளுக்கு நிதியளிக்க தயாராகவுள்ள உலகளாவிய வட துருவ நாடுகள், காலநிலையால் ஏற்படும் அழிவுகளை தடுக்கும் பணிகளுக்கு நிதியளிக்க பின்வாங்குவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இந்தோனேசியாவில் பாலி சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுவரும் 10ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்விலேயே, ஜனாதிபதி நேற்று இதனை தெரிவித்தார்.

இம்மாநாட்டில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகளாவிய வரி ஏய்ப்புச் சொத்துக்களின் வருடாந்த இலாபம் 1.4 டிரில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த இலாபத்தின் மீது, காலநிலை மாற்ற நிதியத்திற்காக பத்துவீதம் வரி விதிப்பதற்கான யோசனையையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

"பொது செழுமைக்கான நீர்" என்ற தொனிப்பொருளில் உலக நீர் உச்சி மாநாடு மே (18) இந்தோனேசியாவின் பாலியில் ஆரம்பமானது. உலக நாடுகளின் தலைவர்கள், நிபுணர்கள், கல்வியியலாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. 06

## இப்ராஹிம் ரைசியின் திடீர் மறைவுக்கு ஜனாதிபதி அனுதாபம்



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளிவிவகார அமைச்சர் அமீர் அப்துல்லாஹி ஆகியோரின் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுதாபம் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் அதிகாரபூர்வ ட்விட்டரில் இந்த அனுதாபம் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்பாராவிதத்தில் ஏற்பட்ட ஈரான் ஜனாதிபதி ரைசியின் 06

## ஈரான் புதிய ஜனாதிபதியாக மொஹமட் முக்பர் தெரிவு



ஈரான் பதில் ஜனாதிபதியாக மொஹமட் முக்பர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஹெலிகொப்டர் விபத்தில் ஜனாதிபதி இப்றாஹிம் ரைசி உயிரிழந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே பதில் ஜனாதிபதி நியமிக்கப்பட்டுள்ளார். இவ்விபத்தில் ஈரான் வெளிநாட்டமைச்சர் ஹுஸைன் அமீர் அப்துல்லாஹி உட்பட முக்கியஸ்தர்கள் ஒன்பது பேர் உயிரிழந்தனர். ஈரானின் கிழக்கு அசர்பைஜான் 06

## டயனாவுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபர் பணிப்பு
### நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவும் ஆலோசனை

லோரன்ஸ் செல்வநாயகம்



பாராளுமன்ற பதவியை இழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபர், குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார். இவ்விசாரணைகளின் பின்னர், குற்றவியல் சட்டக்கோவை சட்டத்தின் கீழ், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. 06

## சு.கவின் தலைவராக விஜேயதாச செயற்படுவதற்கு நீதிமன்றம் தடை

லோரன்ஸ் செல்வநாயகம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவும் அந்த கட்சியின் பொதுச் செயலாளராக கீர்த்தி உடவத்தவும் செயற்படுவதற்கு, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முறைப்பாட்டு மனுவை, நேற்று 06

## இ.தொ.காவின் கோரிக்கைக்கு உதவுவேன்: ரவிசங்கர் குருஜி



வாழும் கலை அறக்கட்டளை நிருவக செயற்பாடுகளை மலையகத்தில், ஆரம்பிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த வேண்டுகோளுக்கு உதவ உள்ளதாக, ஆன்மீக குரு அமைதித் தலைவரும் வாழும் கலை பயிற்சி அறக்கட்டளை நிலையத்தின் ஸ்தாபகருமான ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் குருஜி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார். இங்கு கருத்து தெரிவித்த அவர்:

வாழும் கலை அறக்கட்டளை அமைப்பின் செயற்பாட்டை மலையகத்திலும் பலப்படுத்த ஒத்துழைப்பு வழங்கப்படும்.

பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க இடங்கள் உள்ளிட்ட வசதிகளை எதிர் பார்க்கிறோம்.

இதற்கான உதவிகள் எமது அறக்கட்டளை நிறுவகம் ஊடாக வழங்கப்படும்.

ஆன்மீக கற்கை நெறி பாடசாலைகள் ஆரம்பித்தல், வாழும் கலை பயிற்சிகள், பெண்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்புகள், உள்ளிட்ட பல்வேறு உதவிகளையும் தமது அறக்கட்டளை நிறுவனம் வழங்கும் என்றும் குருஜி தெரிவித்தார். நுவலியா சீதாஎலிய ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வில் பங்கேற்க மூன்று நாள் 06

## சீரற்ற காலநிலை: 35,000 பேர் பாதிப்பு சிவப்பு எச்சரிக்கை பகுதிகளில் விழிப்பு


லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் நிலவும் சீரற்ற காலநிலையால் நேற்று வரை 3518 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 35,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது. மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் இருவர் காயமடைந்துள்ளதுடன், சில வீடுகளும் சேதமடைந்துள்ளதாக அந்நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் மழை, காற்று காரணமாக அநுராதபுரம் கிழக்கு 06

## ISIS பயங்கரவாதிகள் நால்வர் அஹமதாபாத்தில் அதிரடிக் கைது
### இந்திய ஊடகங்கள் செய்தி வெளியீடு



இலங்கையைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் நால்வரை, கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அஹமதாபாத் விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ள மேற்படி சந்தேக நபர்களை, குஜராத் தீவிரவாத தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கைது செய்யப்பட்டுள்ள சந்தேக 06

## குற்றச் செயல்களிலிருந்து நாட்டை மீட்க பொலிஸாருக்கு முழு அதிகாரம்
### யுக்திய நடவடிக்கைகளால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது



போதைப்பொருள் பாவனை மற்றும் பாதாள குழுக்களின் செயற்பாடுகளை ஒழிப்பதற்கு பொலிஸாருக்கு முழு அதிகாரங்களையும் வழங்கியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான்அலஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலே அவர், இதனை தெரிவித்தார். இங்கு பேசிய அமைச்சர்; குற்றச்செயல்களை தெரியப்படுத்த தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தி உள்ளோம். தகவல்கள் 06

## போதைப் பொருளுடன் வெளிநாட்டு பெண் கைது
### ஏழு கோடியே 35 இலட்சம் ரூபா பெறுமதியென மதிப்பீடு

லோரன்ஸ் செல்வநாயகம்



ஏழு கோடியே 35 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன், வெளிநாட்டுப் பெண்ணொருவர் கைதானார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்ட இப்பெண், பாகிஸ்தானைச் 11



03 கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 பேருக்கு மீண்டும் விளக்கமறியல்!

## சஜித், அனுர: விவாதத்துக்கு புதிய திகதிகள் பரிந்துரை



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையிலான விவாதத்துக்கு, புதிய திகதிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியே இப்புதிய திகதிகளை பரிந்துரைத்துள்ளது. இதற்கு முன்னர், தேசிய மக்கள் சக்தி சில திகதிகளை பரிந்துரைத்திரு ந்த போதிலும், உரிய பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலையிலே, 06

## சிங்கப்பூரில் கொரோனா 250 பேர் நாளாந்தம் பாதிப்பு
### அவசரத் தடுப்பூசி செலுத்த ஆராய்வு



கொரோனா புதிய அலை மிக வேகமாக பரவி வருவதாக சிங்கப்பூர் சுகாதார அமைச்சர் ஒங் யே குங் தெரிவித்துள்ளார். சிங்கப்பூரில் இம்மாதத்தில் மாத்திரம் 25,000க்கும் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 06

## பிறந்தநாளன்று விபத்தில் சிக்கிய யுவதி உயிரிழப்பு




பிறந்தநாளில் இராணுவ வாகனம் மோதி யுவதி ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று (20) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

வாதரவத்தையைச் சேர்ந்த சுதாகரன் சாருஜா என்ற 23 வயதான யுவதியே இவ்விபத்தில் உயிரிழந்தார். வீதியை கடப்பதற்காக வீதியோரம் நின்ற யுவதி மீது, எதிர்த்திசையில் வந்த இராணுவ வாகனம் மோதியது.

இதில் காயமடைந்த யுவதி, வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். யுவதியின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் 06

## வெசாக்; மதுபானசாலைகளை மூட முடிவு, மாத்தளையில் 04 நாட்களுக்கு மூடப்படும்




நாடு முழுவதுமுள்ள சகல மதுபானசாலைகளும் எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் மூடப்படவுள்ளன.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இவ்விரு தினங்களிலும் மதுபானசாலைகளை மூடுவதற்கு கலால்வரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதேவேளை, 2024 தேசிய வெசாக் தின நிகழ்வு இம்முறை மாத்தளை 06

# நகர்வலம்



# தேசிய படைவீரர்கள் நினைவேந்தல் நிகழ்வு



பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் தேசிய படைவீரர் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் (19) பத்தரமுல்ல படைவீரர் நினைவு ஸ்தூபிக்கு அருகாமையில் இடம்பெற்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க, முப்படைகளின் பிரதானி, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், முப்படைகளின் முன்னாள் தளபதிகள், படை வீரர்கள் மற்றும் படைவீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்திக்கு ரூ. 517 மில். அரசினால் நிதி ஒதுக்கீடு

### இதுவரை 91 திட்டங்கள் பூர்த்தி





**திறப்பனை தினகரன் நிருபர்**

அரசாங்கத்தின் பன்முக வரவு செலவுத் திட்டத்தின் அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் அநுராதபுர மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

கடந்த வரவு செலவு திட்டத்தின் மூலம் அநுராதபுரம் மாவட்டத்திற்கு 517 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், பிராந்திய ரீதியாக மேற் கொள்ளப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை 1713 ஆகும். இவற்றில் தற்போது 961 பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இதுவரை 91 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டப்பணிகள் அனைத்தும் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அநுராதபுரம் மாவட்டத்தின் ஏனைய வீதி அபிவிருத்தித் திட்டங்கள், அதன் முன்னேற்றங்கள், கிராமப்புர வீதி அமைத்தல் போன்ற வளர்ச்சி நடவடிக்கைகள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயானந்தா உள்ளிட்ட திட்டமிடல் துறையினரால் இத் திட்டத்தின் செயலாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. இக் கூட்டத்தில் தலைமை கணக்காளர் இ.எம்.சி. ஹேரத், பிராந்திய செயலாளர்கள், பிராந்திய செயலகங்களில் பணிபுரியும் உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், செயற்குழு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட திட்டமிடல் திணைக்கள அதிகாரிகள்ஆகியோர் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வான்சாகசம் மற்றும் பாதுகாப்பு கண்காட்சியின் திகதி மாற்றம்





இலங்கை விமானப்படையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கொழும்பு வான் சாகசம் மற்றும் பாதுகாப்பு கண்காட்சி இம்மாதம் 29 முதல் ஜூன் இரண்டாம் திகதி வரை காலி முகத்திடல் மற்றும் துறைமுக நகரத்தில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் வெளிநாட்டு விமானப்படைகள் இதில் பங்கேற்க விருந்த சர்வதேச விமான தொழில் நுட்ப மற்றும் பாதுகாப்பு பங்குதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் பங்கேற்பதற்கான பரந்த வாய்ப்பினை வழங்கும் நோக்கில் கொழும்பு வான் சாகசம் மற்றும் பாதுகாப்பு கண்காட்சி எதிர்வரும் 2025 பெப்ரவரி 26 ஆம் திகதி முதல் மார்ச் 2ஆம் திகதி வரை இலங்கை விமான படையின் 74 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# மீடியா போரத்தின் 27 ஆவது வருடாந்த மாநாடு ஜூன் 30

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27 ஆவது வருடாந்த மாநாடு ஜூன் மாதம் 30 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கொழும்பு தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இரு அமர்வுகளாக மாநாடு நடைபெற உள்ளதோடு பிற்பகல் நடைபெறும் அங்கத்தவர்களுக்கான அமர்வின் போது 2024,25 இற்கான புதிய செயற்குழு தெரிவும் இடம் பெறவுள்ளது.

### காதிரிய்யதுன் நபவிய்யா;

# ஆன்மீகத்தலைவரின் தாயார் காலமானார்

**பேருவளை விசேட நிருபர்**

காதிரிய்யத்துன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவரும் பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் புகாரி தக்கியாவின் ஷேகு நாயகம் சங்கைக்குரிய அஷ்செய்க் அஹம்மத் ஆலிம் பின் அஷ்செய்க் முஹம்மத் ஆலிம் (காதிரியத்துன் நபவி) அவர்களின் தாயார் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காதிரியத்துன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவராக இருந்து இறையடி சேர்ந்த மர்ஹூம் அஷ் செய்ஹ் முஹம்மத் ஆலிம் பின் அஷ்செய்க் அப்துல் ஸமிஹ் ஆலிம் காதிரிய்யத்துன் நபவி (ரஹ்) அவர்களின் மனைவியுமாவார்.

அன்னாரின் ஜனாஸா பேருவளை எலந்தகொடை அஷ் செய்ஹ் முஸ்தபா ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் 19ஆம் திகதி மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.ஜனாஸா நல்லடக்கத்தில் ஸாதாத் மார்கள், உலமாக்கள், அரசியல்வாதிகள், காதிரிய்யத்துன் நபவிய்யா தரீக்காவின் முக்கியஸ்தர்கள், முரீத்தீன்கள் உட்பட பெருமளவிலானோர் பங்குபற்றினர்.

# ஈரான் ஜனாதிபதியின் திடீர் இழப்பு இஸ்லாமிய உலகுக்கு பேரிழப்பு

### அனுதாபச் செய்தியில் மர்ஜான் பளீல் எம்.பி



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைஸி மற்றும் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அமீர் அப்துல்லாஹ் உள்ளிட்ட 09 பேர் சென்ற ஹெலிகொப்டர் விபத்துகுள்ளாகி அனைவரும் உயிரிழந்த செய்தி கேள்விப்பட்டு தான் அதிர்ச்சியும் கவலையும் அடைந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார். அவர்களின் திடீர் மறைவு இஸ்லாமிய உலகுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்றும் அவர் தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர்; நேற்று முன்தினம் (19) ஈரானின் அஸர்பைஜான் மாநிலத்தில் இடம்பெற்ற இந்த அதிர்ச்சிச் சம்பவம் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் பெரும் கவலையையும் மன வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. அன்னார் 2021ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்ற நிகழ்வில் இலங்கை ஜனாதிபதியின் பிரதிநிதியாக நான் கலந்துகொண்டேன். அப்போது கூட நான் அவரை சந்தித்தபோது, மிகவும் துணிச்சல்மிக்க ஒரு தலைவராக காணப்பட்டார். இலங்கையின் ஒரு நண்பராக அவர் செயற்பட்டார். அந்த சந்திப்பில்கூட முஸ்லிம் நாடுகள் ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டுமென்ற சிந்தனையில் அவர் இருந்ததை என்னால் காண முடிந்தது. முஸ்லிம் நாடுகள் பிரிந்து செயற்படுவதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இலங்கை தொடர்பில் ஜனாதிபதி ரைஸியிடம் நீண்ட எதிர்பார்ப்பு இருந்ததோடு, இலங்கை ஈரானின் நீண்டகால நண்பன் என்றும் அவர் என்னிடம் தெரிவித்ததை இன்றும் மறக்க முடியாதுள்ளது. அவர் அண்மையில் இலங்கைக்கு வந்தபோது கூட நான் அவரை சந்தித்து சுகம் விசாரித்தேன். மிகவும் துணிச்சல் மிக்கவராக காணப்பட்ட அவர், பலஸ்தீன விடயத்தில் மிகவும் கவலையுடன் இருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. இப்படியானதொரு சிறந்த தலைவர் இன்று முஸ்லிம் உலகிலிருந்து பிரிந்து செல்வது மிகவும் கவலையாக இருக்கிறது. ஜனாதிபதி ரைஸி, ஈரான் மற்றும் இஸ்லாமிய உலகின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர். பலஸ்தீன மண்ணுக்காகவும் மக்களின் உரிமைக்காகவும் துணிச்சலுடன் செயலாற்றியதில் அவருக்கு நிறைய பங்களிப்புள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார் .

# ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்த உலகின் அதிசொகுசு பயணிகள் கப்பல்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறைக்கு பிரசித்திபெற்ற கப்பல் கம்பனியான ரோயல் கரிபியன் சர்வதேச கப்பல் கம்பனிக்குச் சொந்தமான செரெனடே ஒப் த சீ (serenade of the sea) அதிசொகுசு கப்பல் முதல் தடவையாக ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை அண்மையில் வந்தடைந்தது.

இந்தக் கப்பலினுடாக 1950 சுற்றலாப் பயணிகளும் 890 ஊழியர்களும் துறைமுகத்தை வந்தடைந்தனர். இந்த வருடத்தில் மொத்தம் இதுவரை பத்து சுற்றுலாப் பயணிகள் கப்பல்கள் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தினை வந்தடைந்துள்ளன.

2023 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தகப்பல் ரோயல் கரிபியன் சர்வதேச கப்பல் கம்பனிக்குச் சொந்தமான கப்பல்களில் ஒன்றாகும். இது விசேடமாக நீண்டநாள் நீண்டதூர பயணத்திற்கென வடிவமைக்கப்பட்ட விசேட கப்பல்களில் ஒன்றாகும். இந்தக் கப்பலின் வருகையை முன்னிட்டு நினைவுச் சின்னமும் பரிமாறப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் வருகையினூடாக ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் மாத்திரமின்றி ஹம்பாந்தோட்டை பிரதேச மக்களும் பல்வேறு பயன்களை பெற்று வருகின்றனர்.

# மோ. சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கெக்கிராவ பொலிஸ் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.குறித்த விபத்து கெக்கிராவ ஸாஸ்ரவெளி பகுதியில் (17) இரவு இடம்பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பயணித்த நால்வரும் சிகிச்சைக்காக கெக்கிராவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

# வியட்நாம் முன்னாள் ஜனாதிபதியின் 134ஆவது பிறந்தநாள் கொழும்பில்

**ருஸைக் பாரூக்**





கொழும்பிலுள்ள வியட்நாம் தூதரகம் ஒழுங்கு செய்த வியட்நாம் நாட்டின் முன்னாள் மறைந்த ஜனாதிபதி Ho Chi Minh அவர்களின் 134ஆவது பிறந்தநாளை நினைவு கூரும் வைபவம் கொழும்பு நூலக வளாகத்தில் வியட்நாமின் இலங்கைத் தூதுவர் Ho Thi Thanh Truc தலைமையில் நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

தாய்லாந்து, மலேசியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பங்களாதேஷ், பாகிஸ்தான், ருமேனியா, ரஷ்யா, கியூபா, ஐக்கிய இராச்சியம், மியான்மர், கொரியா, ஈராக், நெதர்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, ஆஸ்திரேலியா, ஈரான் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் கொழும்புத் திட்ட பொதுச் செயலாளர் நாயகம் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, இலங்கை வியட்நாம் ஒற்றுமை சங்கத்தின் செயலாளர் நாயகம் சுதசிங்க சுகதபால, கொழும்பு பொது நூலகத்தின் பிரதம நூலகர் வருணி ககபதாராச்சி மற்றும் மொஹமட் இக்பால் ஆகியோருக்கு தூதுவர் பாராட்டுச் சின்னத்தை வழங்கி வைத்தார்.

முன்னாள் அமைச்சர் டி.டபிள்யூ. குணசேகர, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, கொழும்பு மாநகர சபை ஆணையாளர் ஜே.எம்.பத்ராணி ஜயவர்தன, வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், வியட்நாம் தூதரக கவுன்சிலர் Le.Van Huong மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் மனதை ஒருநிலைப்படுத்தும் நிகழ்ச்சி





தற்போதைய சந்ததியினருக்கு தியானம் தொடர்பான புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில், “புத்த ரஷ்மி” தேசிய வெசாக் பண்டிகையுடன் இணைந்ததாக ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் கல்வி அமைச்சு என்பன இணைந்து ஏற்பாடு செய்த மனதை ஒருநிலைப்படுத்தி, வலுப்படுத்தும் நிகழ்ச்சி நேற்று (20) காலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

வணக்கத்திற்குரிய கலாநிதி கிரிந்தே அஸ்ஸாஜி தேரரின் ஆலோசனையின் கீழ், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டுதலில் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகங்கள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் தொழிநுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 500 பேர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மீதிரிகல ஆரண்ய சேனாசனவாசி வணக்கத்திற்குரிய ஹோமாகம தம்மகுசல தேரர் மாணவர்களுக்கு "தியானம்" மேற்கொள்வது பற்றிய நடைமுறை பயிற்சிகளை வழங்கினார்.

இங்கு சிறப்புரையாற்றிய கங்காராம விகாராதிபதி கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர், நாட்டின் எதிர்காலம் சிறுவர் தலைமுறையைச் சார்ந்தது எனவும், சிறுவர்களின் அறிவு, கல்வி, திறமை, திறன் என்பவற்றிலே நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.


ஒழுக்கமும் திறமையும் கொண்ட சிறுவர் தலைமுறையை உருவாக்கு

06






## தினகரன் 92 வருடங்களுக்கு முன்
## தினகரன் இன்று 21 மே 1932




### 55 வயதில் இளைப்பாறுதல்

சிக்கனக் கமிஷன் இடைக்கால அறிக்கை

### படிச் செலவுகளில் வெட்டு

வாடகைப் பண வீதமும் ஜாகை வீதமும் குறைக்கப்படலாம்

உத்தியோகஸ்தர்களைக் குறித்துக் கூறுமிடத்து 55 வயதில் கட்டாயமாக வேலையினின்றும் இளைப்பாற வேண்டும் என்றும், 50 வயதில் இஷ்டமானால் இளைப்பாறலாம் என்றும் கமிஷன் சிபார்சு செய்யக்கூடும்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 பேருக்கு மீண்டும் விளக்கமறியல்!

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மாளிகாகந்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் (20) திங்கட்கிழமை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதி சம்பவம் தொடர்பான வழக்கிலேயே முன்னாள் சுகாதார

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 8 சந்தேக நபர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மழையுடனான சீரற்ற காலநிலை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலை, மேலும் சில தினங்களுக்கு தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், சில மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு கடும் மழைக்கான சிவப்பு எச்சரிக்கையையும் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி இடம்பெறும் என்றும் திணைக்களம் நேற்று தெரிவித்தது.

மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களுக்கும் மற்றும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்குமே இந்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பருவமழைக்கு முன்னரான காலநிலையின் தாக்கத்தால், கடும் மழை மற்றும் கடும் காற்று வீசலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. நூறு மில்லி மீற்றருக்கும் அதிகளவான மழை வீழ்சி நாட்டின் பல பாகங்களிலும் பதிவாகலாம்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் 30க்கும் 40க்கும் இடைப்பட்ட கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.தென்மேற்கு பருவப்பெயர்ச்சியின் பாதிப்பு நாடு முழுவதும் நிலவுவதால், மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை வேளைகளில் குறித்த பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 08ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 12

### குறள் தரும் சிந்தனை

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு

அன்பு என்னும் அகத்து உறுப்பு
இல்லாதவர்க்குப் புறத்து உறுப்புக்கள்
அழகாக இருந்து என்ன பயன்?

## சீரற்ற காலநிலையின் விளைவான அனர்த்தங்கள்

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலையினால் சில பிரதேசங்களில் வெள்ளநிலையும் இன்னும் சில பிரதேசங்களில் மண்சரிவு அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளன. மக்கள் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புடனும் செயற்பட்டால் இவற்றின் ஊடாக ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்த்தும் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அந்த வகையில் தற்போதைய சீரற்ற காலநிலையினால் புத்தளம் மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தின் தாழ்நிலப் பிரதேசங்கள் பலவற்றில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் பிரதேச மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு இருக்கின்றது.

அதேநேரம் இச்சீரற்ற மழைக் காலநிலையினால் இம்மாவட்டத்தில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள புத்தளம் மாவட்டச் செயலாளர், பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 537 குடும்பங்களைச் சேர்ந்த 1775 பேர் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான 10 நலன்புரி நிலையங்களில் தங்கி வைக்கப்பட்டுள்ளனர் என்றுள்ளார்.

இச்சீரற்ற காலநிலையின் விளைவாக புத்தளம் மாவட்டப் பாடசாலைக்களுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டதோடு இன்றும் நாளையும் கூட இப்பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு இருக்கின்றது. இதற்கான உத்தரவை வடமேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நஸீர் அஹ்மட் வழங்கியுள்ளார்.

இதேவேளை இச்சீரற்ற காலநிலையின் விளைவாக நாட்டின் வேறு சில பிரதேசங்களிலும் வெள்ள நிலையும் ஏற்பட்டுள்ளது. அத்தோடு கடும் காற்றின் விளைவான பாதிப்புக்களும் மண்சரிவு அச்சுறுத்தலும் கூட தற்போதைய மழைக் காலநிலையினால் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக நாட்டின் ஏழு மாவட்டங்கள் இப்பாதிப்புகளுக்கு முகம்கொடுத்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. புத்தளம், இரத்தினபுரி, கேகாலை, அநுராதபுரம், கண்டி, காலி, களுத்துறை ஆகிய மாவட்டங்களே தற்போதைய சீரற்ற காலநிலையின் பாதிப்புகளை எதிர்கொண்டிருக்கின்றன.

இந்த சீரற்ற காலநிலை அடுத்துவரும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.அதன் காரணத்தினால் மக்கள் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவது இன்றியமையாததாகும்.

கடும் வரட்சி ஏற்பட்டிருந்ததைத் தொடர்ந்து ஆரம்பமாகியுள்ள மழைக் காலநிலையின் தொடக்கத்தியே சில பிரதேசங்களில் இவ் வெள்ள நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் முன்பு இவ்வாறு வெள்ள நிலை ஏற்படுவதில்லை. தற்போது சிறிதளவு மழை பெய்தாலும் வெள்ள நிலை ஏற்படுகிறது. இதற்கு பிரதேச மட்டத்தில் காணப்பட்ட சதுப்பு நிலங்களிலும் மழைநீர் வழிந்தோடவென இயற்கையாகவே அமைந்திருந்த வடிச்சல் நிலங்களிலும் கட்டடங்கள் அமைக்கப்பட்டிருப்பதும், பல இடங்கள் மண் கொண்டு நிரப்பப்பட்டிருப்பதும் சில இடங்கள் திண்மக்கழிவுகள் கொட்டப்படும் இடங்களாக மாறி இருப்பதும் காரணமாக விளங்குகின்றன. இவற்றின் விளைவாக மழைநீர் சீராக வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் தான் சிறுமழை பெய்தாலும் பல இடங்களில் வெள்ள நிலை ஏற்படக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கிறது.

அதேநேரம் காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் தாக்கங்களும் குறுகிய காலப்பகுதியில் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறக்கூடிய நிலைமையும் ஏற்படுத்தி உள்ளது. அதுவும் வெள்ள நிலைக்கு காரணமாக அமைந்துள்ளது. ஏனெனில் குறுகிய காலப் பகுதியில் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் போது அந்த மழைநீர் வழந்தோடவோ நிலத்தினால் உறிஞ்சப்படவோ வசதி இல்லாத நிலையும் காணப்படுகிறது. இவையே சிறுமழை பெய்தாலும் வெள்ள நிலைமை ஏற்படக் காரணமாக விளங்குகிறது.

அதேநரம் மலைநாட்டிலும் மலைசார்ந்த பிரதேசங்களிலும் நிலத்தை தவறான முறையில் கையாளுவதை தவிர்க்க வேண்டிய தேவையும் உணரப்பட்டிருக்கிறது. ஏனென்றால் மரக்கறி செய்கை உள்ளிட்ட பல்வேறு தேவைகளின் நிமித்தம் நிலத்தை பயன்படுத்தும் போது பெரும்பாலும் தவறுகள் இடம்பெறுகின்றன. அவ்வாறான இடங்களில் மழைநீர் தேங்கியும் அந்த இடங்கள் மழைநீரை உறிஞ்சுவதாலும் மண்சரிவுக்கான வாய்ப்புக்கள் உருவாகின்றன.

இவை அனைத்தையும் பொதுவாக எடுத்து நோக்கும் போது மழைக் காலநிலையுடன் சேர்த்து வெள்ள நிலையும் மண்சரிவு அச்சுறுத்தலும் ஏற்ப மனிதனின் தவறான செயற்பாடுகளே முக்கிய காரணமாக அமைந்து விடுகின்றன என்பது தெளிவாகிறது.

ஆகவே மழை நீர் வழிந்தோடுவதற்கு இயற்கையாகவே அமைந்துள்ள சதுப்பு நிலங்களையும் வடிச்சல் நிலங்களையும் பேணிப் பாதுகாப்பதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு மலைநாட்டிலும் மலைசார்ந்த பிரதேசங்களிலும் நிலத்தைக் கையாளுவதில் தவறுகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளவும் தவறக்கூடாது. இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக சீரற்ற மழைக் காலநிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை குறைத்தும் தவிர்த்துக் கொள்ளலாம். அதற்கு மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ள ஈரான் ஜனாதிபதியின் விபத்து மரணம்!



ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி இப்ராஹீம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் அமீர் அப்துல்லாஹின் உள்ளிட்ட பிரதிநிதிகள் பயணித்த ஹெலிகொப்டர் நேற்றுமுன் தினம் பிற்பகல் விபத்துக்குள்ளானதில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். ஈரான் ஜனாதிபதியின் இழப்பு ஈரானிலும் உலககெங்கிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானும் அதன் அயல்நாடான அசர்பைஜானும் இணைந்து அசர்பைஜானில் ஜிஸ் கலஸி மற்றும் குதாபரின் நீர் மின்னுற்பத்தி மற்றும் விவசாயிகளுக்கு நீர் வழங்கும் திட்டமொன்றை அமைத்துள்ளன. இத்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் வைபவத்தில் அசர்பைஜான் ஜனாதிபதி அலியோவில் அழைப்பில் ஈரான் ஜனாதிபதி இப்றாஹீம் ரைசி தலைமையிலான உயர்பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் பங்குபற்றினர். ஈரான் ஜனாதிபதியும் அசர்பைஜான் ஜனாதிபதியும் இணைந்து இத்திட்டத்தை வைபவ ரீதியாக தொடக்கி வைத்தனர்.

ஈரான் ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் மூன்று ஹெலிகொப்டர்களில் பயணித்திருந்தனர். அவர்கள் வைபவம் நிறைவுற்று திரும்பிக் கொண்டிருந்த போது, ஈரானின் உள்ளூர் நேரம் பி.ப 3.00 மணியளவில் ஈரான் ஜனாதிபதி பயணித்த ஹெலிகொப்டர் தொடர்பை இழந்தது. அது ஈரானின் கிழக்கு அசர்பைஜான் மாகாணத்திலுள்ள மலைப்பாங்கான டிஸ்மர் பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். ஆனால் ஏனைய இரண்டு ஹெலிகொப்டர்களும் பாதுகாப்பாக ஈரானின் தப்ரீஸை வந்தடைந்தன.

ஈரான் ஜனாதிபதி பயணித்த ஹெலிகொப்டர் தொடர்பை இழந்தமை ஈரானில் பதற்றத்தை ஏற்படுத்தியதோடு, உலகெங்கிலும் பெரும் பேசுபொருளாகியது. உலகின் கவனமே ஈரானின் பக்கம் குவிந்தது.

இந்த ஹெலிகொப்டர் தொடர்பை இழந்த பகுதி ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் இருந்து 600 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பிரதேசமாகும். அச்சமயம் அப்பகுதியில் கடும் பனிமூட்டமும், கடும் மழைப்பொழிவாகவும் காணப்பட்டது. அது மிகவும் பின்தங்கிய மலைப்பாங்கான வனப்பிரதேசமும் ஆகும்.

அப்பிரதேசத்தை நோக்கி, ஈரானின் அவரச மீட்புப் படையினரும், ஈரான் இஸ்லாமிய குடியரசு காவல் படையினர் உள்ளிட்ட விஷேட படையினரும் விரைந்தனர். 70 இற்கும் மேற்பட்ட மீட்பு குழுக்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. விபத்து நடந்த இடத்தைக் கண்டுபிடிப்பதிலும் அந்த இடத்தைத் துரிதமாக அடைவதிலும் மீட்புக் குழுக்களுக்கு சீரற்ற காலநிலை பெரும் சவாலாக அமைந்திருந்த போதிலும், அவர்கள் தொடர்ந்து முன்னேறினர்.

அதேநேரம் ஈரான் ஜனாதிபதியினதும் ஏனையவர்களதும் பாதுகாப்புக்காக ஈரானி லுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் விஷேட துஆப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.



இதேவேளை ஈரான் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாஹ் அலி காமெய்னி, "மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அவர்கள் நாட்டுக்குத் தீங்கு விளைவிக்காதவர்கள்" என்று குறிப்பிட்டதோடு, அவர்களது பாதுகாப்புக்காக பிரார்த்தனையும் செய்தார்.

இந்நிலையில் ஈரானிய ஜனாதிபதி பயணித்த ஹெலிகொப்டரை தேடும் பணிகளை முன்னெடுக்கவென துருக்கி, சவுதி அரேபியா, கட்டார், துபாய், ஈராக், குவைத் உள்ளிட்ட நாடுகள் அவசர மீட்புக் குழுவினரை அனுப்பி வைக்கத் தயாராக இருப்பதாக அறிவித்தன.

### மலைப்பாங்கான, பனிமூட்டம் நிறைந்த பகுதியில் ஹெலியில் பயணித்த போது இடம்பெற்ற துயர சம்பவம்!

ஈரான் ஜனாதிபதியின் ஹெலிகொப்டர் தொடர்பை இழந்த பகுதியில் கடும் பனிமூட்டத்துடன் சீரற்ற காலநிலை நிலவுவதால் துருக்கியிடம் இரவில் தேடுதல் நடத்தக்கூடிய ஹெலிகொப்டர் மற்றும் ஆளில்லா ட்ரோன் உதவியை வழங்குமாறு ஈரான் கேட்டுக் கொண்டதோடு, துருக்கி அந்த உதவியை வழங்கியது.

நேற்றுமுன்தினம் பின்னேரமும் முதல் கடும் முயற்சியுடன் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நேற்று அதிகாலைதான் குறித்த ஹெலிகொப்டர் மலையில் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அந்த ஹெலியில் பயணித்த அனைவரும் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என முதலில் அறிவிக்கப்பட்டது.



ஈரான் அசர்பைஜான் எல்லையிலுள்ள டிஸ்மர் பாதுகாப்பட்ட பகுதியில் ஜுல்பா நகருக்கு அருகில் மலைப் பிரதேசத்தில் இவ்விபத்து ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விபத்தினால் ஈரான் ஜனாதிபதி இப்றாஹீம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் ஹுஸைன் அமீர் அப்துல்லாஹியான், கிழக்கு அசர்பைஜான் மாகாண ஆளுநர் மாலிக் ரஹ்மதி, ஆன்மீகத் தலைவர் அலி காமெனெய் இன் கிழக்கு அசர்பைஜானுக்கான பிரதிநிதி முஹம்மத் அலி அலே ஹாசெம், தப்ரீஸ் இமாம் உட்பட ஹெலிகொப்டரின் பிரதான விமானிகளான கேர்ணல் தாஹிர் முஸ்தபாவி, கேர்ணல் மோசென் டியானொஷ் அடங்கலாக 09 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களது உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தையிட்டு ஈரான் முழுவதும் சோகமயமாகியுள்ளது.

ஈரானின் மஸ்ஹட் மாவட்டத்தின் நொகானில் 1960 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி சமயப்பற்றுமிக்க குடும்பத்தில் பிறந்த ரைசி, சமயப்பற்றுமிக்க கொம்மில் கல்வி பெற்றார். ஈரானின் சட்டத்துறையில் பல உயர்பதவிகளையும் வகித்த இவர், 2004 முதல் 2014 வரையும் பிரதி நீதியரசராகவும் 2014 முதல் 2016 வரை சட்ட மா அதிபராகவும், 2019 முதல் 2021 வரையும் பிரதம நீதியரசராகவும் பதவி வகித்துள்ளார்.

2017 இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்படாத போதிலும், 2021 இல் போட்டியிட்டு 62.9 சதவீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார். அவர் விபத்தில் உயிரிழக்கும் போது 63 வயதாகும்.

இவரது மறைவையொட்டி ரஷ்யா, உண்மையான இரண்டு நண்பர்களை இழந்து விட்டதாக குறிப்பிட்டுள்ளது. அத்தோடு உலக பல நாடுகளும் அனுதாபங்களைத் தெரிவித்துள்ளன. லெபனான் மூன்று நாட்களுக்கு துக்க தினம் பிரகடனப்படுத்தியுள்ளது.



மர்லின் மரிக்கார்...

### இலங்கையின் முதல் குடியரசு அரசியல் சட்டம்:

# நாளையுடன் 52 ஆண்டுகள் நிறைவு

1972ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி இலங்கை சுதந்திர இறைமையுடைய குடியரசாக பிரகடனம் செய்யப்பட்டது. பிரகடனம் செய்யப்பட்டு நாளை 52 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி அமுலாக்கப்பட்ட சோல்பரி அரசியல் சட்டம் பற்றிய விமர்சனங்கள் அதன் ஆரம்பத்திலிருந்தே முன் வைக்கப்பட்டிருந்தன. இவற்றினுள் முதன்மையானது இவ்வரசியற் சட்டம் சட்டத்துறையினது சட்ட ஆக்க அதிகாரங்கள் மீது விதித்திருந்த வரையறைகள் பற்றியதாகும் . 1948 ஆம் ஆண்டிலிருந்து 1970 வரையிலான இரு தசாப்தங்களில் பிரித்தானியாவின் பிரிவுக்கவுன்சிலின் முன் சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக்களை உற்று நோக்குவது அவசியமானது.

"இலங்கைப் பாராளுமன்றத்திற்கு குறித்த விடயத்தில் சட்டம் ஆக்கும் அதிகாரம் இல்லாமையால் , அதனால் ஆக்கப்பட்ட சட்டம் செல்லுபடியாகாது" என்று பிரிவு கவுன்சில் தீர்ப்புக் கூறியது. "இலங்கைப் பாராளுமன்றம் அரசியல் சட்டத்தின் விதிகளுக்கு அமைய ஆக்கப்பட்டதாக சபாநாயகரால் அத்தாட்சிப் படுத்தப்படவில்லை" என்றும் பிரிவுகவுன்சில் தெரிவித்தது.

1965 ஆம் ஆண்டில் டட்லி சேனநாயக்கா தலைமையிலான கூட்டணி அரசாங்கம் முன்னெடுத்த முதல் சட்ட ஆக்க நடவடிக்கைகளில் ஒன்று, நியாயமான தமிழ்மொழி உபயோக மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமையாகும். இம்மசோதாவிற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பௌத்த பிக்குகளும் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகள், பௌத்த பிக்கு ஒருவர் பொலிசாரது துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகும் அளவிற்கு வலுத்திருந்தது.

இவ்வாறான அரசியல் பின்புலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி , சமசமாஜக் கட்சி , கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளை உள்ளடக்கிய அரசியல் முன்னணி 1970 ஆம் ஆண்டு தேர்தலின் போது புதிய குடியரசு அரசியற் சட்டத்தையும், பௌத்த சமயத்திற்கு முதன்மை என்ற இரண்டையும் முன்வைத்தது.



சிங்களமொழிப் பிராந்தியங்களில் மேற்கண்டவாறான அரசியல் சூழ்நிலை நிலவுகையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக்கட்சி சமஷ்டி ஆட்சி முறையிலான அரசியல் சட்ட நீதியைக் கோரும் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன் வைத்தது.

1970 ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகளின் வரைபடம் இலங்கைத் தீவில் இரு மொழிப் பிராந்தியங்களை உள்ளடக்கிய இரு மொழி பேசும் தேசிய இனங்களின் குடிப்பரம்பலை வெளிப்படுத்தி நின்றது.

1947 ஆம் ஆண்டு பிரித்தானிய பொது மக்கள் சபையில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் மசோதா விவாதிக்கப்பட்ட வேளையில், இலங்கை இரு மொழி பேசும் வலயங்களைக் கொண்ட நாடு என்றும் அங்கு ஒற்றை ஆட்சி முறை அறிமுகப்படுத்துவது ஜனநாயக ஆட்சி முறை தோல்வியடையவே வழிவகுக்கும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையை இல்லாதொழிக்க தமிழர்களுக்கு நியாயமான நிலைக்கும் மேலாக நாட்டின் நிருவாகத்தில் பங்களிக்கப்பட வேண்டும் என்ற காரணங்களும் வலியுறுத்தப்பட்டன .

அமைச்சர் கொல்வின் ஆர்.டி.சில்வாவினால் வரையப்பட்டு, அரசியல் அமைப்பு நிர்ணய சபையிலும் மக்கள் பிரதிநிதிகள் சபையிலும் அங்கீகாரம் பெறப்பட்டு, 1922 ஆம் ஆண்டு மே மாதம் பிரகடனப்படுத்தப்பட்ட அரசியல் சட்டம் இலங்கைத் தீவைக் குடியரசு ஆக்கியது.

இலங்கை ஒற்றையாட்சி அமைப்பு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. மக்கள் தேசியப் பேரவை அரசின் சட்ட சபையாக அறிவிக்கப்பட்டு, அரசின் நிர்வாகத்துறையும் நீதித்துறையும் முன்னையதின் அதிகாரங்களுக்கு கீழ்ப்பட்ட இரண்டாம் தர நிலைக்குத் தள்ளப்பட்டன .

இந்த ஏற்பாடு சட்டவாக்கத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை என்பவற்றிற்கிடையிலான சமநிலையினைக் குலைத்தது. மக்கள் இறைமை பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாட்டிற்கு முதலிடம் வழங்கியது. முந்தைய அரசியற் சட்டம் கொண்டிருந்த பொது சேவைகள் ஆணைக்குழு, நீதி சேவைகள் ஆணைக்குழு என்றிருந்த ஆணைக்குழுக்கள் அகற்றப்பட்டன.

அவற்றிற்குப் பதிலாக பின்வரும் நான்கு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன .

1. நிருவாக சேவை ஆலோசனைச் சபை .
2. நிருவாக சேவை ஒழுங்காற்றுச் சபை.
3 . நீதி சேவை ஆலோசனைச் சபை.
4 . நீதி சேவை ஒழுங்காற்றுச் சபை .

பாராளுமன்றத்தின் அதிகாரம் ஓங்கியிருக்கக் கூடிய விதமாக இந்த நான்கு சபைகள் நிறுவப்பட்டன .

ஒட்டுமொத்தமாக இவ்வரசியற் சட்டத்தை அவதானிக்கையில் பின்வரும் முக்கிய அம்சங்கள் நம் கவனத்திற்குள்ளாகின்றன.

இலங்கையின் பாராளுமன்றம் ஓரங்க சட்டத்துறையாக தேசிய மக்கள் பேரவை நிறுவப்பட்டது. இப்பேரவையின் மசோதாக்களது சட்டங்கள் செல்லுபடியானவையா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு, இதற்கென சிறப்பாக உருவாக்கப்பட்ட அரசியற் சட்ட நீதிமன்றத்தைத் தவிர வேறு எந்த நீதிமன்றங்களுக்கும் பாரப்படுத்தப் படவில்லை.

(07ஆம் பக்கம் பார்க்க)

கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கம்...
(சட்டத்தரணி), லண்டன்

# அன்னை மரியாள் திருச்சபையின் தாய் திருவிழா






## திருச்சபை நேற்றைய தினம் சிறப்பிப்பு

கத்தோலிக்கத் திருச்சபை புனித கன்னி மரியாள் திருச்சபையின் தாய் என்ற பெருவிழாவை நேற்றைய தினம் கொண்டாடியது.

திருச்சபையின் தாய் என்பது இயேசுவின் தாய் மரியாவுக்கு வழங்கப்படும் அடைமொழியாகும். நான்காம் நூற்றாண்டிலேயே முதன்முதலில் அம்புரோஸ் பயன்படுத்திய இந்த அடைமொழிஇ இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் திருத்தந்தை 6ம் பவுலால் அதிகாரப்பூர்வமானதாக அறிவிக்கப்பட்டது. திருத்தந்தை பிரான்சிஸ் மரியாள் திருச்சபையின் தாய் என்ற விழாவை பெந்தகோஸ்து விழாவுக்கு அடுத்த நாள் சிறப்பிக்கும் வகையில் 2018ஆம் ஆண்டில் அறிமுகம் செய்தார்.

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேளையில் இயேசு தம் தாய் மரியாவையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம்இ “அம்மாஇ இவரே உம் மகன்” என்றார். பின்னர் தம் சீடரிடம்இ “இவரே உம் தாய்” என்றார். இந்த நிகழ்வின் வழியாக இயேசு தம் சீடர்களான கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் தாயாக மரியாவை வழங்கினார் என்பது கத்தோலிக்க திருச்சபையின் நம்பிக்கை.

சீடர்கள் அனைவரும் சில பெண்களோடும் இயேசுவின் சகோதரர்களோடும் இயேசுவின் தாய் மரியாளின் அரவணைப்பில் ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள். பெந்தகோஸ்து என்னும் நாள் வந்தபோதுஇ அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர் என்று திருத்தூதர் பணிகள் நூலில் வாசிக்கிறோம்.

முதல்முறை தூய ஆவியார் நிழலிட்ட வேளையில் இயேசுவைப் பெற்றெடுத்த மரியாள்இ இரண்டாம் முறை அவர் இறங்கி வந்தபோது திருச்சபையின் பிள்ளைகளைப் பெற்றெடுத்தார் என்பது கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாடு. இவ்வாறுஇ அவர் திருச்சபையின் தாயாக திகழ்கிறார். நமது தாய் திருச்சபை அன்னை மரியாளின் மகத்துவத்தை ஐந்து பெருவிழாக்கள்இ மூன்று திருவிழாக்கள் பதினேழு நினைவு நாட்கள் மூலம் பறைசாற்றி குதூகலிக்கிறது. “அன்னை மரியாவை நாடாமல் இறையருளை பெறுவதற்கான விருப்பம் என்பது சிறகுகளின்றி பறக்க விரும்புவதைப் போன்றது.” என்றார் திருத் தந்தை 12ம் பத்தி நாதர்.

அமல உற்பவியாய் இ அழகின் முழுமை கொண்டவளாய்இஅலகையின் தலை மிதிக்க முன் குறிக்கப் பட்டவளாய்இ அகிலம் உருவாகும் முன்னரே ஆண்டவரின் திட்டத்தில் இடம் பெற்றவளாய்த் திகழ்ந்தவள் நம் அன்னைஇ

'' அருள் நிறைந்தவரே வாழ்க “ என்று ஆண்டவரின் தூதராலும் '' பெண்களுக்குள் பேறு பெற்றவர் நீரே “ என்று அன்பு உறவினர் எலிசபெத்தாலும் அன்னை புகழ்ந்தேற்றப் படுகிறார்.

தாழ் நிலை நின்ற தன்னைஇ தலைமுறைகள் போற்றும் பேறுடையாளாக உயர்த்திய இறைவனின் கருணையை எண்ணி இதயம் களி கூர்ந்து அன்னையின் இதழ்கள் உதிர்த்தவையே இவ்வார்த்தைகள். “ என் ஆன்மா ஆண்டவராம் கடவுளை ஏற்றிப் போற்றுகிறது.”

தாழ்ச்சியையும் நன்றி உணர்வையும் நமக்கு உணர்த்தும் இவ்வார்த்தைகளை நாமும் நமது உள்ளத்தில் இறுத்தி ஆவியிலும் உண்மையிலும் அதனை தியானிப்போம்.

**எல்.எஸ்.**

## மருதமடு அன்னை கரவெட்டியில் திருப்பவனி






மருதமடு அன்னையின் நூறாவது முடிசூட்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் அன்னையின் திருச்சுரூபம் வடக்கின் அனைத்து மறை மாவட்டங்களிலுமுள்ள பங்குகளை தரிசித்து அங்குள்ள விசுவாசிகளுக்கு ஆசீரளிக்கும் நிகழ்வுகள் கடந்த ஒரு மாத காலமாக இடம்பெற்று வந்துள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாணம் கரவெட்டி புனித மரியாள் ஆலயத்திற்கு மடுமாதா திருப்பவனியாக சென்றபோது அங்கு பங்குத்தந்தை உள்ளிட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் விசுவாசிகள் அளித்த வரவேற்பின்போது பிடிக்கப்பட்ட படங்கள்.

## இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இணைப்புப் பாலமாக தூய ஆவியானவர்

நமது அன்றாட வாழ்வில் பல இன்ப துன்பங்களைச் சந்திக்கிறோம். மனித வாழ்வு வளர்ச்சியை நோக்கிப் பயணம் செய்யும்போது அவ்வப்போது தடுமாற்றம், மேடு பள்ளங்களைச் சந்திக்கின்றது.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மை வழிநடத்த ஒரு துணை தேவைப்படுகிறது. அந்த துணையாளர்தான் தூய ஆவியானவர். படைப்பின் தொடக்கமே தூய ஆவியின் செயல்பாடுதான். தூய ஆவியானவர் தண்ணீரின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார் (தொ.நூ. 1:2). அவரால் படைப்பாற்றல் உருவானது.

மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்பதை அறிந்த கடவுள் அவனுக்கு சரி நிகராக ஒரு துணையை உருவாக்கினார். துணை இருக்கும்போது நம்பிக்கை பிறக்கிறது. விரக்தி, வேதனைகளைப் பகிர்ந்து கொள்ள முடிகிறது. உள்ளத்திற்கு உறுதி கிடைக்கிறது. இக்கட்டான சூழ்நிலையில் தூய ஆவியின் ஆற்றலையும், செயலாக்கத்தையும் நாம் புரிந்துகொள்கிறோம்.

தடுமாறும் மனிதனை, பாதை மாறிச் செல்லும் மனிதனை இயேசுவிடம் அழைத்துச் செல்லும் மகத்தான பணியைச் சிறப்பாகச் செய்பவர் தூய ஆவியானவர். தூய ஆவியானவர் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலம், ஒருங்கிணைப்பாளராக செயற்படுகிறார்.

தந்தையின் விருப்பங்களை இம்மண்ணுலகில் நிறைவு செய்வதற்கு, அனைத்துத் துன்பங்களையும் தாங்கிக்கொள்ள பக்குவப்பட்ட மனநிலையை தூய ஆவியின் வழியாகவே இறைமகன் இயேசு பெற்றுக்கொண்டார்.

விண்ணகம் சென்ற இயேசு, தூய ஆவியானவரை அனுப்பினார். ஆவியானவர் மிகுந்த வல்லமையோடு இறங்கி வந்தார். பயந்து நடுங்கிய திருத்தூதர்கள் துணிவோடு போதிக்கவும் பல மொழிகளில் பேசவும் தொடங்கினர். வலுவற்ற நிலையில் இருந்த அவர்களுக்கு தூய ஆவியானவர் துணை நின்றார் (உரோ. 8:26).

தூய ஆவியின் கொடைகளைப் பெற்றவர்கள் சோதனைகளைக் கடந்து, சாதனைகள் படைப்பார்கள். இயேசுவின் திருமுழுக்கு, பாலைவனச் சோதனை, கலிலேயாவில் பொதுப்பணி தொடக்கம் ஆகியவை இதை தெளிவாக்குகிறது (லூக். 3:2145).

குழப்பம் வரும்போதெல்லாம் இயேசுவைத் தந்தையிடம் அழைத்துச் சென்றவர் தூய ஆவியானவர். பணி வாழ்வின் வழியாக, தான் பெற்ற அனுபவத்தைத் தனது சீடர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார். உயிர்த்த இயேசு இரண்டு முறை உங்களுக்குச் சமாதானம் என்று . கூறி, தூய ஆவியானவரை அனுப்பினார் (யோவா. 20:1921).



இந்த சமாதானத்தை நமக்கு அளிப்பவர் தூய ஆவியானவரே. நானும் தந்தையைக் கேட்பேன். அவர் மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருவார். அவர் உங்களோடு என்றும் இருப்பார், அவர் உண்மையின் ஆவியானவர் (யோவா. 14:1617) என்றார்.

கிறிஸ்து வாக்களித்த தூய ஆவியை நாம் திருவருட்சாதனங்கள் வழியாகப் பெற்றுக் கொள்கிறோம்.

ஆதிக் கிறிஸ்தவர்களிடம் ஒரே மனம், ஒருமித்த உள்ளத்துடன் கூடி செபித்தல், தேவைக்கு ஏற்ப பகிர்தல் இவைகள் அனைத்தையும் செயலாக்கம் பெறச் செய்தது தூய ஆவியின் ஆற்றலே. அவர்களின் அகத்திலிருந்து தூய ஆவியின் ஆற்றல் வெளிப்பட்டதால்தான் பல இடங்களுக்குச் சென்று போதித்தனர். பொதுவுடைமை நோக்கில் உறவுகளில் மேம்பாடு கண்டனர். குடும்ப உறவுகளில் தடுமாறும் மனிதனை, நல் வழிப் படுத்துவது தூய ஆவியே. அந்த ஆவியால் செயலாக்கம் பெறும்போது அங்கே அமைதி பிறக்கிறது. உறவுகள் அனைவரையும் ஒரு முகப்படுத்துகிறது. கடவுளின் ஆவியானவர் தண்ணீரின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார். உலக தொடக்கமே ஆவியின் செயல்பாடாக அமைந்தது (தொ.நூ. 1:2).

ஒரு தாய் கருவுறும்போது தாயின் சுவாசத்திலேயே குழந்தை உயிர் வாழ்கிறது. அந்த சுவாசம், ஆதியிலே ஆவியானவர் மனிதன் மேல் ஊதிய சுவாசமே. இன்றைக்கும் அது தலைமுறை தலைமுறையாக, பிள்ளைகளின் பிள்ளைகளாகத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. வயிற்றுக்குள் தாயினுடைய சுவாசத்தினால் உயிர் வாழ்கின்ற குழந்தை, உலகத்தில் பிறக்கும்போது தானாகவே சுவாசிக்க ஆரம்பித்துவிடுகிறது. இது எத்தனை ஆச்சரியமான செயல்.

இந்தக் காட்சியை சற்றே கற்பனை செய்து பார்த்தால் நமக்கு ஆவிக்குரிய நுரையீரல் இருக்கிறது என்றால் கிறிஸ்து நம்மீது ஊதி தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லும்போது அந்த ஆவிக்குரிய சுவாசப்பைகள் இயங்கத் தொடங்குகின்றன. அப்போது நாம் அனைவரும் இறைவனுக்குச் சொந்தமானவர்களாக முத்திரையிடப்படுகிறோம்.

"நாம் கூடி செபிக்கும்போது அங்கே இறைவன் இருக்கிறார். தூய ஆவியால் நிரப்பப்படுகிறோம். எனக்கு உறுதியூட்டும் இறைவனின் துணையால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு (பிலி, 4:13)

உலகத் தொடக்கத்தில் மனித இதயத்தில் குடிபுகுந்த ஆவியானவர் இன்றும் நம்மை வழிநடத்தி வருகிறார். துன்பத்தில் தோள் கொடுக்கிறார். நமது போராட்ட வாழ்வுக்கு மத்தியில் சமாதானத்தின் தூதுவராக நமக்குள் இருந்து செயல்படுகிறார். நமக்கு ஆற்றல் தந்து ஆன்மீக வாழ்வில் வளமை காண தூய ஆவியின் துணை வேண்டுவோம்.

**அருட்பணி முனைவர் ம.அருள்**

## வாழ்க்கை எப்போதும் வாழத் தகுந்தது

### -திருத்தந்தை பிரான்சிஸ்



வாழ்வில் எல்லாமே நீர்த்துப் போய்விட்டதுஇ இனி வாழ்க்கையில் ஒன்றுமில்லை என்று தோன்றினாலும்இ வாழ்க்கை எப்பொழுதும் வாழத் தகுந்தது என்பதை கூற விரும்புகின்றேன். காரணம்இ எதிர்காலத்திற்கான நம்பிக்கை அதில் எப்பொழுதும் இருக்கும். நம் ஒவ்வொருவரின் இருப்பும் முக்கியமானது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இத்தாலியின் வெரோனா நகருக்குத் திருப்பயணம் மேற்கொண்டதிருத்தந்தைபிரான்சிஸ்கடந்த சனிக்கிழமை மொந்தோரியோ சிறைச்சாலையில் உள்ள சிறை உயர் அதிகாரிகள்இ சிறைக்கைதிகள் மற்றும் தன்னார்வலர்களைச் சந்தித்து அவர்கள் மத்தியில் மறையுரை யாற்றினார் திருத்தந்தை.

சிறைக்குள் நுழைவது என்பது எப்போதுமே ஒரு முக்கியமான தருணம். ஏனென்றால் சிறை என்பது மனிதநேயத்தின் ஓர் இடம். சில வேளைகளில்இ மனிதநேயம் சோதிக்கப்படும்போதுஇ அது சிரமங்கள்இ குற்ற உணர்வுகள்இ தீர்ப்புகள்இ தவறான புரிதல்கள் மற்றும் துன்பங்களால் சுமையானதாக இருக்கிறது.

அதேவேளை வலிமைஇ மன்னிப்புக்கான மற்றும் தன்னை மீட்டுக்கொள்ளும் விருப்பத்தால் அது நிறைந்துள்ளது. இந்த மனிதநேயத்தில்இ இன்றுஇ இங்கே நம் அனைவரிடமும்இ கிறிஸ்துவின் முகம்இ இரக்கமும் மன்னிப்பும் கொண்ட கடவுளின் முகம் பிரசன்னமாயிருக்கின்றது.

சிறைச்சாலைகளின் நிலைமை, அடிக்கடி நெரிசல், அதன் விளைவாக பதட்டங்கள் மற்றும் இன்னல்களால் நிறைந்திருப்பதை நாம் அறிவோம். இந்த சூழ்நிலையிலும் உங்களுடன் நான் மிகவும் நெருக்கமாக இருக்கிறேன் என்பதை கூற விரும்புகிறேன். மேலும் சிறை வாழ்க்கையில் கைதிகள் எதிர்நோக்கும் குறைபாடுகளை களைய அதிகாரிகள் முன்வரவேண்டும்.

இச்சிறைச்சாலையில் சிலர் எதிர்பாராதவிதமாகஇ தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொண்டதை அறிந்து நான் மிகவும் கவலையடைந்தேன். இது ஒரு கொடுமையான செயல். இது தாங்க முடியாத விரக்தி மற்றும் வலியை மட்டுமே ஏற்படுத்தும். எனவேஇ நான் உங்கள் குடும்பத்தினருடனும் உங்கள் அனைவருடனும் இறை வேண்டலில் ஈடுபடும் போதுஇ மனச்சோர்வுக்கு ஆளாகாமல் இருக்க உங்களை கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

எல்லாமே நீர்த்துப் போய்விட்டதுஇ இனி வாழ்க்கையில் ஒன்றுமில்லை என்று தோன்றினாலும்இ வாழ்க்கை எப்பொழுதும் வாழத் தகுந்தது என்பதை உங்களுக்குக் கூற விரும்புகின்றேன். காரணம்இ எதிர்காலத்திற்கான நம்பிக்கை அதில் எப்பொழுதும் இருக்கும். நம் ஒவ்வொருவரின் இருப்பும் முக்கியமானது. இது நமக்கும் மற்றவர்களுக்கும்இ அனைவருக்கும் ஒரு தனித்துவமான கொடை. கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடாதவர். உண்மையில் நமக்குச் செவிசாய்க்கவும்இ நமக்காக மகிழ்ச்சியடையவும்இ அழவும் தெரிந்தவர். அவர் நமக்காக நம் அருகில் இருப்பதால்இ நாம் விரக்தியைக் கடந்துஇ ஒவ்வொரு கணமும் மீண்டும் புதிதாக வாழ முடியும்.

எனவே, மோசமான தருணங்களில்இ நாமே நமக்குள் முடங்கிவிடாமல் நம் வலியைப் பற்றி கடவுளிடம் பேசுவோம். இந்தச் சிறை வாழ்வில் நமது தோழமை பயணத்தின் மத்தியில் நம் அருகிலிருக்கும் நல்ல மனிதர்களுடன் இணைந்து அந்த வலியைத் தாங்கிக்கொள்ள ஒருவருக்கொருவர் உதவுவோம். உதவி கேட்பது நமது பலவீனம் அல்ல. ஆகவே அதைப் பணிவுடனும் நம்பிக்கையுடனும் செய்வோம்.

**அருட்பணி செல்வராஜ் சூசைமாணிக்கம்**

# கொட்டாஞ்சேனை ராதா கிருஷ்ண ஆலயத்தில் நரசிம்ம ஜெயந்தி



சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தின் இலங்கை கிளையின் ஏற்பாட்டில் கொழும்பு ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயத்தில் நாளை புதன்கிழமை நரசிம்ம ஜெயந்தி வெகு சிறப்பாகக்கொண்டாப்பட விருக்கிறது. நாளை மாலை 5.00 மணிமுதல் 6.00 மணிவரை ஹரிநாம சங்கீர்த்தனமும், தொடர்ந்து 7.00 மணிவரை மஹா அபிஷேகமும், நரசிம்ம பகவான்பற்றிய விஷேட வகுப்பும் அதனைத்தொடர்ந்து பிரசாதம் வழங்கலும் இடம்பெறும்.

அனைவரும் இவ் விழாவில் கலந்து கொண்டு பகவான் நரசிம்மரின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு பக்தர்களுக்கு ஆலய நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்து இருக்கின்றனர்.

# ஸ்ரீ கண்டி கதிர்காம ஆலய வருடாந்த வைகாசி விசாக தேர்த்திருவிழா

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

இலங்கை திருநாட்டின் மத்திய மாகாணத்தில் எழில் கொஞ்சும் கண்டி மாநகரில், புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு ஸ்ரீ கண்டி கதிர்காம ஆலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் வருடாந்த வைகாசி விசாக தேர்த்திருவிழா விஞ்ஞாபனம் நாளை (22.05.2024 ) புதன்கிழமை வைகாசி விசாக தினத்தில் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் முருகப் பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் வண்ணம் தனது புத்தம் புதிய சித்திரத் தேரில் எழுந்தருளி கண்டி மாநகர் முழுவதும் பவனி வரத் திருவருள் கூடியுள்ளது.

22.05.2024 காலை 7.00 மணிக்கு பால்குட பவனி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும். காலை 9.30மணிக்கு அபிஷேக ஆராதனை, பூஜை வழிபாடு, கணபதி ஹோமம் நடைபெறும்.

பகல் 12.00 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். மாலை 4.00மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெறும். மாலை5.04 மணிக்கு இரதோற்சவம் வெளி வீதி ஊர்வலம் நடைபெறும்.

# இன்றைய பலன்கள்
## (21.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
படித்து முடித்து உத்தியோகத்தில் நல்ல நிறுவனங்களில் இருந்து வரும் அழைப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாமா என்று யோசிப்பீர்கள்.

**ரிஷபம் :**
பிரபல்யமானவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து பல காரியங்களை முடித்துக் கொடுப்பர். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

**மிதுனம்:**
பெரிய அளவில் சொத்துக்கள் வாங்கி அதை விரிவாக்கம் செய்ய முன் வருவீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்து முயற்சி வெற்றி பெறும்.

**கடகம்:**
நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும். உடன்பிறப்புகளின் திருமண நிகழ்வுகள் உள்ள மகிழும் விதம் நடைபெறும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும் .

**சிம்மம்:**
புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மனதிற்க்கு நிறைவு தரும் விதத்தில் நல்ல ஊதியம் கிடைக்கும்.

**கன்னி:**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்தவர்கள் உங்களை விட்டு விலகுவர். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து போதிய ஊதியம் தருவதாக சொல்லி அழைப்பார்கள்.

**துலாம்:**
உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள்.

**விருச்சிகம்:**
அரசாங்க வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அந்த முயற்சி கைகூடும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு தலைமை பொறுப்புக்கள் வரலாம்.

**தனுசு:**
உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தொலைதூரத்தில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா என்று சிந்திப்பீர்கள்.

**மகரம்:**
தந்தை வழி உறவிலிருந்த விரிசல் அகலும். உங்கள் தொழில்முன்னேற்றத்திற்கு பெற்றோர் உறுதுணையாக இருப்பர்.

**கும்பம்:**
கருத்து வேறுபாடுகள் அகலும். வியாபாரத்தில் உள்ள நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். மனக்கவலை மாற மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மீனம்:**
வெளிநாடு சென்று படிக்க வேண்டும் என்று அல்லது பணிபுரிய வேண்டும் என்று விரும்புவர்களுக்கு அதுவும் கைகூடும். தொழில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும்.

## ஈரான் ஜனாதிபதி...

மைல்கல்லாக கருதப்படுபவர் இப்ராசிம் ரைசி. இவரது பதவிக் காலத்தில் அயல்நாடுகளுடனான ராஜதந்திர உறவுகள் பலப்படுமளவுக்கு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில் கடந்த (19) ஞாயிற்றுக்கிழமை ஈரானின் வடமேற்கு மாகாணமான அஸர்பைஜானுக்குச் சென்ற வேளை அவர் பயணித்த விமானம் விபத்தில் சிக்கியது. சீரற்றகாலநிலை மற்றும் அடர்ந்த பனிமூட்டங்களால் ஹெலிகொப்டரை அவசரமாக தரையிறக்கிய வேளையிலே, விபத்து நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

இருட்டு,கடும் குளிர் மற்றும் மழையால்

மீட்பு பணிகளில் பெரும் தடங்கல்கள் ஏற்படும் அளவுக்கு காலநிலை மிக மோசமாக இருந்தது.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வரை 40 மீட்புக் குழுக்கள் ,காடு மற்றும் மலைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.வான்வழி அணுகுமுறைகள் சாத்தியமற்றதாக இருந்ததால், தரைவழியிலான குழுக்களால் மட்டுமே இப்பகுதியை அணுக முடிந்தது. மலைப்பாங்கான நிலப்பரப்பு மற்றும் இயற்கை தடைகளும் ஜனாதிபதியுடனான குழுவினருடன் தொடர்புகொள்வதை சாத்தியமற்ற தாக்கியதாக ஈரான் அரச தொலைக்காட்சி அறிவித்தது.

ராய்ட்டர்ஸ் செய்தி ஸ்தாபனம் ஈரானிய அதிகாரியை மேற்கோள் காட்டி, விபத்தில் ஹெலிகாப்டர் 'முற்றிலும் எரிந்துள்ளதாக குறிபிட்டது.

ஹெலிகாப்டர் விபத்தில், ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோர் உயிரிழந்தது குறித்து இஸ்லாமிய புரட்சிப்படையின் தலைவர் இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

இதையடுத்து ஈரானில் ஐந்து நாட்கள் துக்க தினமாக அரசாங்கம் அறிவித்துள்ளது.இந்த இழப்புக்கள் குறித்து இந்தியா, சவூதிஅரேபியா கட்டார், குவைத், லெபனான், துருக்கி, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகள் அனுதாபம் தெரிவித்துள்ளன. இலங்கையிலும் இன்று துக்க தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், ஈரான் ஜனாதிபதியின் உயிரிழப்புக் குறித்து அமெரிக்கா இதுவரை உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்கவில்லை. ஜனாதிபதி ஜோ பைடனுக்கு ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உயிரிழந்தமை குறித்து தெரிவிக்கப்பட் டதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இதன் பின்னணியில், மத்திய கிழக்கு பிராந்தியத்தின் அமைதியை உன்னிப்பாக அவதானித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் ஜனாஸா நல்லடக்கம் இன்று (21) தலைநகரில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னாரின் ஜனாஸா நல்லடக்கத்தில் பங்கேற்க உலகின் பல நாடுகளிலிருந்தும் தலைவர்கள் சென்றுள்ளனர். இந்நிலையில்,ஈரான் பதில் ஜனாதிபதியாக மொஹமட் மொக்பர் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இன்னும் ஐம்பது நாட்களுக்குள் நடைபெறும் வரையில்,இவர் பதில் ஜனாதிபதியாக பதவி வகிக்கவுள்ளார்.

மத்திய கிழக்கில்,நிலைப்படும் ஈரானின் முயற்சிகளை அயல்நாடுகள் சில கடுமையாக எதிர்த்துள்ள நிலையிலும்,அரபு நாடுகள் பல, இப்ராஹிம் ரைசியின் இழப்புக்கு அனுதாபம் தெரிவித்துள்ளன. சிரியா உள்ளிட்ட ஈரானின் நேச நாடுகள் துக்க தினங்களையும் பிரகடனப்படுத்தியுள்ளன.ஈரானியர்கள் பெரும் கவலையுடனும் வீதிகளில் அழுதவாறும் நிற்பதை காணக்கூடியதாக உள்ளது.பல பள்ளிவாசல்களில் அன்னாருக்காக விசேட துஆப்பிரார்த்தனை களும் ஏற்பாடு செய்யப்பட்டன.

## குற்றச் செயல்களிலிருந்து...

கிடைத்ததும் பொலிஸார் உரிய இடத்துக்கு விரைந்து உரிய நடவடிக்கை எடுப்பர்.போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளவர்கள் பற்றிய தகவல்களையும் தைரியமாக இந்த தொலைபேசி இலக்கத்துக்கு வழங்க முடியும். இவ்வாறானவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி அவர்களை மீட்டெடுப்போம்.போதைப்பொருள் விற்பனையாளர்களை ஒழிப்பதற்காகவே

யுக்திய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தோம்.போதைப்பொருள் பாவனையாளர்களை விரட்டுவது அல்லது தண்டிப்பதை விடவும் அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

நாம், அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால், போதைப்பொருளிலிருந்து எமது கிராம், நகரம் மற்றும் நாட்டை வெகு விரைவில் மீட்டெக்க முடியும். எனவே இப்பணிக்கு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பது மக்களின் பாரிய பொறுப்பு.

இவ்விடயத்தில் எவ்வாறான அச்சறுத்தல்கள் வந்தாலும், தவறு நடக்கக்கூடாதென, பொலிஸ்மா அதிபருக்கும் பொலிஸாருக்கும் உறுதியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவும், இந்த விடயத்தில் எனக்கு முழுமையான அதிகாரத்தை வழங்கியுள்ளார்.

யுக்திய நடவடிக்கைகளில்,ஒரு போதும் ஜனாதிபதி தலையிட்டது கிடையாது.

போதைப்பாவனையிலிருந்து நாட்டை காப்பாற்ற வேண்டிய தேவை ஜனாதிபதிக்கும் உள்ளது.

யுக்திய இராணுவ நடவடிக்கையில் கைதானவர்களை விடுதலை செய்யுமாறு அதிகமான அழைப்புக்கள் வருவதாக பொலிஸ்மா அதிபர் என்னிடம் தெரிவித்தார்.

நான், இந்த அமைச்சுப் பதவியில் இருக்கும் வரை இதற்கு இடமளிக்கமாட்டேன்.

பொதுமக்கள் எம்முடன் இணைந்து நேர்மையாக செயற்பட்டால் மாத்திரமே, போதைப்பாவனையிலிருந்து நாட்டை, மீட்டெடுக்க முடியும் என்றார்.

## காலநிலை மாற்றம்...

1997 முதல், மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் உலக நீர் உச்சி மாநாடு, உலகின் அனைத்து நாடுகளுக்கும் நீர் முகாமைத்துவம் தொடர்பான அனுபவங்களையும் அறிவையும் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது.

மேலும் தண்ணீர், சுகாதார சவால்கள், நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலும் இம்மாநாட்டில் கலந்தாலோசிக்கப்படும்.

கூட்டு செழுமைக்கான நீர்" என்ற தொனிப்பொருள் அனைத்து உயிரினங்களினதும் உயிர்நாடியான நீர் வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை முகாமைத்துவம் செய்வதற்கான கூட்டுப் பொறுப்பை வலியுறுத்துகிறது.

மேலும், இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் மாநாட்டின் ஐந்தாவது அமர்வில் இந்தோனேசியாவால் முன்மொழியப்பட்ட "நிலையான ஏரி முகாமைத்துவம்" யோசனைக்கு அமைவானதாக காணப்படுகிறது.ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் பேரவையின் ஆறாவது அமர்வில், ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையுடன் இணைந்து, "6/13 காலநிலை மாற்றம், உயிர் பல்வகைத்தன்மை குறைவடைதல், சுற்றுச்சூழல் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய நிலையான அபிவிருத்திக்கான நீர்க் கொள்கைகளைப் பலப்படுத்த தேவையான முழுமையான தீர்வுகள்" என்ற திட்டத்தை சமர்ப்பித்தது.

G20 தலைமையின் கீழ் உலக கூட்டு நிதியத்தை ஸ்தாபிக்க முன்வந்தமைக்காக இந்தோனேசிய அரசாங்கத்துக்கு வாழ்த்து தெரிவிக்கிறேன்.

இதன் முன்னோடி உறுப்பினராக இணைய இலங்கையின் விருப்பத்தையும் தெரிவிக்கிறேன்.

காலநிலை மாற்றமும், தண்ணீர் பிரச்சினையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகும்.

தற்போதைய நீர்வள நெருக்கடிக்கு காலநிலை மாற்றத்தின் விளைவுகளே முக்கிய காரணம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

காலநிலை மாற்றத்தால் நீர் மூலங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கு பாரிய நிதி வசதிகள் தேவைப்படுகின்றன.

காலநிலை மாற்றத்திற்கான நிதியளிப்புத் திட்டங்களுக்கு ஏற்ப, உலகளாவிய வட துருவ நாடுகள் துரதிஷ்டவசமாக தோல்வியடைந்துள்ளன. கிளாஸ்கோவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாடு முடிவடைந்த பின்னர் இதற்கான அரசியல் ரீதியான விருப்பத்தில் குறிப்பிடத்தக்க வரையறைகளை அவதானிக்க முடிகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈரான் புதிய ஜனாதிபதியாக...

மாகாணத்தில் இவ்விபத்து இடம்பெற்றது. பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள மொஹமட் முக்கபர் ஐம்பது தினங்களுக்கு பதில் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். இதையடுத்து நடைபெற உள்ள தேர்தலில் புதிய ஜனாதிபதியை அந்நாட்டு மக்கள் தெரிவு செய்யவுள்ளனர்.

## சஜித், அனுர:...

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜெயமஹா கட்சி சார்பாக இப் புதிய திகதிகளை பரிந்துரைத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸவிற்கு எழுதிய கடிதத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய திகதிகள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இவ்விரண்டு கட்சி தலைவர்களுக்கும் இடையிலான விவாதம் ஜூன் 3, 4, 5, 6, 7ஆம் திகதிகளிலும், பொருளாதார நிபுணர்கள் இடையேயான விவாதம் மே 27, 28, 29, 30 அல்லது 31ஆம் திகதிளிலும் நடத்தப்படலாம் என்று நளின் பண்டார குறிப்பிட்டுள்ளார். இந்த பரிந்துரைகளுக்கான பதில்கள் தேசிய மக்கள் சக்தியிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## இப்ராஹிம் ரைசியின்...

மரணம், இலங்கைக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது. முக்கிய தலைவர்கள் உயிரிழந்த இந்தச் சம்பவத்தால், இலங்கையர்கள் ஆழ்ந்த வருத்தமடைந் துள்ளனர்.

ரைசியின் குடும்பத்தினருக்கும், ஜனாதிபதியை இழந்து வாடும் ஈரான் மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதாக ஜனாதிபதியின் ட்விட்டரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீரற்ற காலநிலை:...

நுவரகம் பலாத்த பகுதியில் மரங்கள் முறிந்து விழுந்தன. இதில், இருவர் காயமடைந்தனர். இரத்தினபுரி மாவட்டத்தில் நிவித்திகலை, கொடகவெல மற்றும் பலாங்கொடை ஆகிய பகுதிகளில் வீசிய பலத்த காற்றினால் மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதமடைந்ததா கவும் அந்நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காரணமாக களுத்துறை மாவட்டம் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது . இதற்கிணங்க அத்தனகளுஓயா, களுகங்கை ஆகிய ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது.மேற்படி நீர் நிலைகளை அண்டிய தாழ்ந்த பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் வெள்ளப்பெருக்கு தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் பொதுமக்களை அந்நிலையம் எச்சரித்துள்ளது.

## சிங்கப்பூரில் கொரோனா...

சிங்கப்பூர் சுகாதார அமைச்சரை மேற்கோள்காட்டி, சர்வதேச ஊடகங்கள் இச்செய்தியை வெளியிட்டுள்ளன. இதையடுத்து சகலரையும் முகக்கவசம் அணியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மே, மாதம் 05 முதல் 11 வரை மாத்திரம் சிங்கப்பூரில் 25,900 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

“கொரோனா புதிய அலை பரவும் ஆரம்பத்தில் இருக்கிறோம். அடுத்து வரும் வாரங்களில் கொவிட் வைரஸ் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக சிங்கப்பூர் சுகாதார அமைச்சர் ஒங் யே குங் தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் 250 க்கும் அதிகமானோர்கொ ரோனா வைரஸால் பாதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.முன் ஏற்பாடுகளுக்காக அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு அவசரமாக மேலும் ஒரு கொரோனா தடுப்பூசியை செலுத்தவும் சிங்கப்பூர் ஆராய்ந்து வருகிறது.

## இ.தொ.காவின் கோரிக்கைக்கு...

விஜயம் மேற்கொண்டு இந்தியாவிலிருந்து குருஜி வந்திருந்தார்.

இச்சந்திப்பில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸின் தவிசாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பி.இராஜதுறை,பாரத் அருள்சாமி உள்ளிட்ட இ.தொ.கா உயர்பீட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## டயானாவுக்கு எதிராக...

இதன்பிரகாரம்,போலி ஆவணங்களை சமர்ப்பித்தமை, அரசியலமைப்பை மீறியுள்ளமை, தேர்தல் சட்டங்களை மீதியுள்ளமை, போலியான ஆவணங்களை மூலப் பிரதிகளாக சமர்ப்பித்தமை, போன்றவற்றுக்கு எதிராக டயானா கமகே மீது விசாரணை நடத்தப்படவுள்ளது.

பிரிட்டிஷ் பிரஜையாகவிருந்தும் இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்தமை தொடர்பிலான வழக்கு ஆவணங்கள் மற்றும் விசாரணைகளில் வெளிவரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தின் பணிப்பாளர் சட்டமா அதிபரிடம் ஆலோசனைகளை கோரினார்.

இதையடுத்தே,இந்த உத்தரவு பிறப்பிக்கப்ப ட்டுள்ளது. டயானா கமகேவுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கிடைக்கப் பெற்றுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் குற்றவியல் வழக்கு சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறும் சட்டமா அதிபர் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்திற்கு பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

## வெசாக்;...

யில் நடைபெறவுள்ளது. இதையடுத்து, மாத்தளை நகரிலுள்ள மதுபானசாலைகள் நாளையும் (21), நாளை மறுதினமும் (22) மூடப்படவுள்ளன.

இதன்படி, மாத்தளை நகரிலுள்ள சகல மதுபானசாலைகளும் நான்கு தினங்களுக்கு மூடப்படவுள்ளதாக கலால்வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பிறந்தநாளன்று...

வைக்கப்பட்டுள்ளது. இவ்விபத்து தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கொழும்பு சுதந்திர... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

வதற்கு மனதை ஒருநிலைப்படுத்துவது தொடர்பான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது மிகவும் முக்கியமானதாக இருக்கும் என்று குறிப்பிட்ட அவர், இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய வணக்கத்திற்குரிய கிரிந்தே அஸ்ஸஜி தேரர்,2002 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தில் என்ற பெயரில் மதப் பல்வகைமை தொடர்பான ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதில் உலகெங்கிலும் உள்ள பல்வேறு மதங்களைச் சேர்ந்த ஏராளமான அறிஞர்கள் கலந்து கொண்டனர். அதில் கலந்து கொண்ட ஒரு அறிஞர் இவ்வாறு தெரிவித்தார்.

"சில தசாப்தங்களில், உலகின் எதிர்காலம் வேறு பரிமாணத்திற்கு நகரக்கூடும். உலக மக்கள் தொகை அதிகரிப்பு இயற்கையானது. உலகில் கிடைக்கும் வளங்கள் விகிதாசாரமாக அதிகரிக்காது. அவை படிப்படியாக குறைந்து வருகின்றன. எல்லையற்ற மக்கள் மத்தியில் வரையறுக்கப்பட்ட வளங்களை விநியோகிப்பதில் பெரும் ஆர்வம் உள்ளது.

இதற்காக தலைமைகள் கடினமாக உழைக்கின்றன . இதன் விளைவாக போட்டி அதிகரிக்கிறது. போட்டி அதிகரிக்கும் போது, மக்களின் நடவடிக்கைகள் வேறு பாதையில் செல்கின்றன. எழுச்சி பெறும் இந்த முயற்சியால் பெறுவதை விட, அதிகமாக நாம் இழக்கிறோம். முதலில் இழப்பது மனிதநேயம். மனிதநேயம் இல்லாத சமூகம் பயனற்றது என்றார்.

## சு.கவின் தலைவராக...

பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி, கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தாக்கல் செய்த மனு தொடர்பான தடையுத்தரவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஏற்கனவே அனுமதி வழங்கியது.

மேற்படி நியமனம் தொடர்பில் கடுவெல மாவட்ட நீதிமன்றம் ஏற்கனவே தடையுத்தரவு பிறப்பித்திருந்தது. இந்நிலையில், அந்த வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாது என அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நீதிமன்றத்தில் ஆட்சேபனை வெளியிட்டிருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சந்தன ஜயசுந்தர, நீதிமன்றத்திற்கு விடயங்களை முன்வைக்கையில் கடுவலை மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவு இந் நீதிமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தாது என்றும் குறிப்பிட்டார்.

அந்த வகையில் இருதரப்பினரதும் விடயங்களை கவனத்திற்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சந்துன் விதான, கடுவலை நீதிமன்ற உத்தரவிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த வழக்கின் முறைப்பாட்டாளரால் கோரப்பட்டுள்ள தடையுத்தரவு தொடர்பில் பரிசீலிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அன்றைய தினம் குறிப்பிட்டார்.

அதற்கிணங்கவே பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முறைப்பாட்டு மனு நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.இதன்போதே

கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## ISIS பயங்கரவாதிகள்...

நபர்கள் நால்வரிடமும் நீண்ட நேர விசாரணை நடத்தப்பட்டதாகவும் இந்திய பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

ISIS பயங்கரவாதிகள் எதற்காக அஹமதாபாத் விமான நிலையத்திற்கு வந்துள்ளனர் என்பது தொடர்பில், இதுவரை தெரியவரவில்லை எனவும் அது தொடர்பில் தீவிர விசாரணை முன்னெடுக்கப்படும் என்றும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# ஜனாதிபதியின் இந்தோனேசிய விஜயம்












### கண்டி தனியார் நிறுவனத்திற்கு

## தெடிகம என்ற பெயரைப் பயன்படுத்தி அடகு வியாபாரத்தில் ஈடுபட தடையுத்தரவு

"தெடிகம" என்ற பெயரைப் பயன்படுத்தி பொதுமக்களை தவறாக வழிநடத்தும் வகையில் தங்க அடகு வியாபாரத்தில் ஈடுபட்ட கண்டியிலுள்ள தனியார் நிறுவனமொன்றுக்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி. பெர்னாண்டோ நேற்று (20) தடை உத்தரவு பிறப்பித்தார்.

தெடிகம வர்த்தக முத்திரை போன்ற பெயர்களைப் பயன்படுத்தி நியாயமற்ற போட்டியைத் தடுப்பதற்காக, கண்டி கட்டுகஸ் தோட்டை, குருநாகல் வீதியில் அமைந்துள்ள டி.ஏ.சி.பி. தெடிகம அடகு நிறுவனத்திற்கு இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

தெடிகம அடகு நிலையம் (Dedigama pawning sentre), தெடிகம தங்கக் கடன் நிலையம் (Dedigama gold loan sentre), தெடிகம அடகு தரகர்கள்(Dedigama pawn Brokers) , போன்ற பெயர்களுக்கு சமமான பெயர்களைப் பயன்படுத்தல், தெடிகம வர்த்தக முத்திரையைப் பயன்படுத்தல், தெடிகம என்ற பெயரில் விளம்பரம் செய்தல், புதிய கடைகளைத் திறத்தல் என்பவற்றைத் தடுக்கும் வகையில் இந்த தடையுத்தரவு வழங்கப்பட்டது.

தெடிகம குரூப் பிரைவேட் லிமிடெட் மற்றும் அதன் தலைவர் ரஞ்சன் மலின் தெஹனகம ஆகியோர் புலமைச்சொத்துரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்ததன் பின்னர், இந்த தடையுத்தரவு விதிக்கப்பட்டது.

சுதத் பெரேரா அசோசியேட்டின் ஆலோசனையின் பிரகாரம், மனுதாரர் சார்பில் சட்டத்தரணி மனோஜ் பண்டார நீதிமன்றில் ஆஜரானார். தெடிகம தொடர்பில் மக்கள் மத்தியில் உள்ள நம்பகத்தன்மையையும் நற்பெயரையும் பயன்படுத்தி பிரதிவாதி மோசடியான வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

1950 இல் ஸ்தாபிக்கப்பட்ட தெடிகம குரூப் தனியார் நிறுவனம் இலங்கை முழுவதும் 281 கிளைகளை நிறுவியுள்ளதாகவும், 2023 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துரிமைச் சட்டத்தின் 144 ஆவது பிரிவின் படி பிரதிவாதி அந்த பிரபலமான பெயரை மோசடியாகப் பயன்ப



டுத்துவதாகவும், இது சட்ட விரோதமான செயலாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்ற மனுதாரரின் நற்பெயரைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்க தடை உத்தரவு வழங்குமாறும் அவர் கோரினார்.

மனுதாரர் தரப்பு நியாயத்தை பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி, பிரதிவாதி நிறுவனத்திற்கு தடை உத்தரவு விதித்ததுடன் எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றில் விளக்களிக்குமாறும் பிரதிவாதிக்கு உத்தரவிட்டார்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி மனோஜ் பண்டார, சட்டத்தரணி சமத்கா த சில்வா, சட்டத்தரணி லக்சனி உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

## 'RPSL' கூட்டமைப்பின் 2ஆவது பொதுக்கூட்டம்

**கொழும்பு தினகரன், தெஹிவளை, கல்கிசை தினகரன் நிருபர்**





இலங்கையில் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்தும் கூட்டமைப்பு (RPSL) இன் இரண்டாவது வருடாந்த பொதுக்கூட்டம் தெஹிவளை கல்கிஸ்ஸை பெர்ஜயா ஹோட்டலில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் செயலாளர் டொக்டர் சாமிலா தாவூத், பொருளாளர் எம்.எம்.என். முனவ்வரா, பிரதித் தலைவர்களான பேராசிரியர் எம்.எஸ்.எம்.அஸ்லம், வஸீர் முக்தார், சாயிப் ஹனீபா ஆகியோர்கள் உட்பட நாடளாவிய ரீதியிலான அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

புதிய ஆண்டுக்கான அங்கத்தவர்கள் இதன்போது தெரிவு செய்யப்பட்டதுடன் இலங்கையில் எதிர்காலத்தில் சமாதானத்தை ஏற்படுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டமைப்பின் கடந்த வருட செயற்பாடுகள் குறித்த அறிக்கையை பொதுச் செயலாளர் டொக்டர் சாமிலா தாவூத் சமர்ப்பித்தார்.

இக்கூட்டமைப்பில் அங்கத்தவர்களான பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், மாநகர சபை முன்னாள் மேயர் ஒமர் காமில் ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.




## நாளையுடன் 52 ஆண்டுகள்... (04ஆம் பக்கத் தொடர்)

1956 ஆம் ஆண்டின் சிங்கள உத்தியோக மொழிச் சட்டத்திற்கு அரசியற் சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டு, இதன் திருத்தம் மாற்றம் என்பவற்றிற்கு 2/3 பெரும்பான்மை பலம் சேர்க்கப்பட்டது.

சி ங்க ள மொழி உத்தியோகச் ச ட்ட மசோதா நிறைவேற்றப்பட்ட வேளையில் , 'ஒரு மொழி இரு நாடு; இருமொழி ஒரு நாடு எனப் பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித்த கொல்வின் ஆர்.டி.சில்வா, 1972 இல் அரசியற் சட்ட விவகார அமைச்சராக இருந்து அரசியற் சட்டம் இயற்றியமையை தமிழ் மக்கள் என்றென்றும் நினைவில் வைத்திருப்பர் .

ஆனால், இவ்வரசியல் சட்டம் ஆறு வருடங்கள் மட்டுமே நீடித்திருந்தது.

1952 ஆம் ஆண்டிலிருந்து சமஷ்டி அரசியல் அமைப்பு, தன்னாட்சி போன்ற கோரிக்கைகளை முன்வைத்த சமஷ்டிக் கட்சி 1956 ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டின் பின்னரும் வடக்கு, கிழக்கில் அதிகப்படியான தொகுதிகளில் வெற்றி பெற்று தமிழர் தலைமையைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே.வி. செல்வநாயகம் QC அவர்கள் ,1970 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் பின்னர் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அரசியலமைப்பு நிர்ணய சபையில் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியற் சட்ட வரைவிற்குப் பின்வரும் திருத்தங்களை சமர்ப்பித்திருந்தார் .

1. இலங்கை ஒரு சமஷ்டிக் குடியரசாக பிரகடனம் செய்யப்பட வேண்டும் .

2. சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாக்கப்பட வேண்டும் .

3. இலங்கை 5 சமஷ்டி அலகுகளாக்கப்பட்டு அவற்றில் மூன்று கண்டி, கொழும்பு, தென்னிலங்கை என்று அறிவிக்கப் படவேண்டும். வட கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கான சமஷ்டி அலகும் தென்கிழக்கில் முஸ்லிம்களுக்கான சமஷ்டி அலகும் உருவாக்கப்பட வேண்டும் 4. பொருளாதார வளர்ச்சி பற்றிய வேலைத்திட்டங்கள் வரையறை செய்யப்படவேண்டும் .

5. போதனாமொழி, அரசின் பொருளாதார சமூகநலக் கொள்கைகள் என்பன அரசியற் சட்டத்தில் இணைக்கப் படவேண்டும் .

எவ்வாறாயினும் முஸ்லிம் மக்களுக்காக கோரப்பட்ட சமஸ்டி அலகை முஸ்லிம் லீக் நிராகரித்தது .

இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாக தொடர்ந்தும் விளங்க வேண்டுமென்றும் இந்தியாவின் அரசியல் சட்டத்தில் முஸ்லிம்களது உரிமை உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது போன்று இலங்கையின் புதிய அரசியற் சட்டத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தது. தமிழ் இனத்தின் சார்பில் தமிழரசுக் கட்சியினால் முன்மொழியப்பட்ட எந்த ஒரு பிரேரணையும் அரசியல் நிர்ணய சபையினால் ஏற்கப்படவில்லை. இந்நிலையில் தமிழரசுக் கட்சி அரசியற் சட்ட நிர்ணய சபை நிகழ்ச்சிகளில் இருந்து விலகிக் கொண்டது இவ்வாறான பின்னணியில் தமிழர்களது கோரிக்கைளை நிராகரித்து இலங்கையின் முதலாவது அரசியற் சட்டம் தமிழர்களுக்கான அரசியற் சட்ட நீதியை மறுத்தது.

இதன் தொடர்ச்சி கடந்த அரை நூற்றாண்டுகளாக நீடித்துச் செல்கிறது.

# கிழக்கின் குரல்



நீர்ப்பாசன குளங்கள், அணைக்கட்டுகள் புனரமைப்பு

## மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளை அதிகரிக்க விசேட வேலைத்திட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர்ப்பாசன குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை புனரமைத்து விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மண்முனை மேற்கு பிரதேசத்தில் புனரமைக்கப்பட்டுள்ள அடச்சகல் குளம் மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட கங்காணியார் குளம் உள்ளிட்ட விவசாய நீர்ப்பாசன குளங்களை பார்வையிடுவதற்காக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் அப்பகுதிகளுக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்தார்.

உலக வங்கியின் நிதியுதவியின் 'Ridep Project' ஊடாக மூன்று அடிகள் அணைக்கட்டு உயர்த்தப்பட்டு நீர் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டுள்ள மண்முனை மேற்கு அடச்சகல் குளத்தை நேரடியாக சென்று பார்வையிட்டதுடன், புனரமைக்கப்படவுள்ள மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கங்காணியார் குளத்தையும் இராஜாங்க அமைச்சர் பார்வையிட்டார்.

அத்துடன் அடச்சகல் நீர்ப்பாசன திட்டத்தின் ஊடாக தற்சமயம் 510 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில் தற்போது அணைக்கட்டு மேலதிகமாக மூன்று அடிகள் உயர்த்தப்பட்டுள்ளமையால் நீர்ப்பாசன திட்டத்தின் ஊடாக சுமார் 240 ஏக்கர் மேலதிக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளமுடியும்.

அத்தோடு மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கங்காணியார் குளத்திலிருந்து பெறப்படும் நீர்ப்பாசனம் ஊடாக 4300 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறித்த அணைக்கட்டு புனரமைக்கப்பட்டால் மேலதிகமாக 800 ஏக்கர் காணிகளில் சிறுபோக நெற்செய்கை அதிகரிக்க முடியும்.

அத்தோடு கங்காணியார் நீர்ப்பாசன திட்டத்தின் மேலதிக நீர் சேமிப்பு குளமாக பயன்படுத்தப்பட்டு வரும் புளுகுணாவை குளத்தின் அணைக்கட்டையும் உயர்த்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் முகமாக விவசாய வீதிகள், கிராமிய பாலங்கள் போன்றன முன்னுரிமை அடிப்படையில் செப்பனிடப்பட்டு வருவதோடு, இராஜாங்க அமைச்சரின் கருத்திட்டத்திற்கமைவாக நீர்ப்பாசன தரிசுகள், மதகுகள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் என்பனவும் விரைவாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

## மனித– யானை மோதல் விழிப்புணர்வூட்டுவதற்காக அம்பாறை மாவட்ட ஆதிவாசிகளுக்கு செயலமர்வு



மாளிகைக்காடு குறுப் நிருபர்

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆதிவாசிகள் அடிக்கடி காட்டு யானைகளின் மோதலுக்கு உள்ளாகி வருகின்றனர். மனித காட்டுயானை மோதலிலிருந்து ஆதிவாசி சமூகத்தை பாதுகாக்கும் நோக்கிலும் அவர்களுக்கு விழிப்புணர்வூட்டவும் ஹெல்ப் ஸ்ரீலங்கா அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் செயலமர்வுகளை நடத்தி வருகின்றது.

மாதுருஓயா தேசிய பூங்காவில் சுமார் 350 முதல் 400 யானைகள் உள்ளன. மாதுரு ஓயா பெரியகுளத்தில் நன்னீரின் பெரும் பகுதி யானைகள் நீர் அருந்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மகாவலி சிஸ்டம் சி பிரதான திட்ட வரைபில் வரையறுக்கப்பட்ட யானை வழித்தடங்களில் திசை மாறி வழியை இழந்த யானைகள் அடிக்கடி அருகில் உள்ள வஸ்கமுவ தேசிய பூங்காவிற்கு செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

யானைகள் சுதந்திரமாக திரியும் எலெகொடலீய வழித்தடம் இப்போது மனித வாழ்விடங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் உள்ள கிராமங்கள் அடிக்கடி மனித யானை மோதலுக்கு உள்ளாகின்றன.

இவ்வாறாக இந்தப் பிரதேசத்தில் சூரியபொகுண (தெஹியத்த கண்டிய) என்ற கிராமத்தில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது.

தம்பானா கிராமம் இலங்கையின் பூர்வீக ஆதிவாசி (வேடர்கள்) மக்களின் தாயகமாகும். விஸ்வகீர்த்தி ஸ்ரீ வனஸ்பதி உறுவாரிகே வன்னில அத்தோ என இலங்கை ஜனாதிபதியினால் கௌரவிக்கப்படும் சர்வதேச ரீதியில் அறியப்பட்ட தலைவரின் தலைமையில் இந்த செயலமர்வு இடம்பெற்றது.

ஆதிவாசிகள் தனது பழங்குடியினருக்கு செயலமர்வின் காரணத்தையும் நோக்கத்தையும் ஆதிவாசிகளின் மொழியில் விளக்கினார்.

காட்டு யானைகள் சுதந்திரமாக வாழும் இடங்கள் மனிதர்களால் சேனைப்பயிர்ச் செய்கை என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்படுவதாலும், நகரமயமாக்கல் போன்ற குடியேற்றத்திற்காக இயற்கைக் காடுகள் கண்டபடி அழிக்கப்படுவதாலும் யானைகளின் போக்குவரத்து வழிப்பாதை தடைப்பட்டது.

இதுவே மனித யானை மோதலுக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளதாக ஆதிவாசிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

மாளிகைக்காடு குறுப் நிருபர்

ஒட்டமாவடி ஹோட்டலொன்றில் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தடைசெய்யப்பட்ட சட்டவிரோத 800 சிகரெட்டுக்களுடன் ஹோட்டல் உரிமையாளரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படை தளபதி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனையில் ஒட்டமாவடி பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

## திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு பாராட்டுவிழா

கிண்ணியா தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றி பதவி உயர்வு பெற்று வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்று செல்லும் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் அவர்களுக்கான பிரியாவிடை மற்றும் சேவை நலன் பாராட்டு விழா திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மேலதிக அரசாங்க அதிபரின் சேவையை பாராட்டி அவருக்கு மாவட்ட அரசாங்க அதிபர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். நினைவுச் சின்னங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.



கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் (வவுனியா, மன்னார்) விவசாய அபிவிருத்தி உதவி ஆணையாளராகவும், தொழில் திணைக்களத்தில் (கொழும்பு, திருகோணமலை) உதவி தொழில் ஆணையாளராகவும், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகவும் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் கடமையாற்றியுள்ளார்.

மேலும் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபராக பதில் கடமை புரிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## மாணவர்கள் பாராட்டு விழா

பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்



கணித ஒலிம்பியாட் போட்டியில் சர்வதேசப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட பாலமுனை மின் ஹாஜ் மகா வித்தியாலய மாணவன் என். அல்ஹர் தானியல், தேசியரீதியாக நடைபெற்ற போட்டியில் பங்குபற்றி எஸ்.எம். சஹ்தான் சம்தி மற்றும் தேசிய மாணவர் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட எம்.ஆர்.அம்ரி அகமட் ஆகிய மாணவர்கள் அவர்களுக்கு பயிற்றுவித்த ஆசிரியர் எஸ்.சசிகுமார் ஆகியோரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் கே.எல். உபைத்துல்லா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சித்தி பாத்திமா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.எம். றஸ்மி, உதவிக் கல்விப் பணிப்பாளர்(கணிதம்) எம்.நாகூர்த்தம்பி உட்பட மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கவிஞர் முஜாமலாவின் இரு நூல்கள் வெளியீடு

துறைநீலாவணை நிருபர்

நிந்தவூரைச் சேர்ந்த கவிஞர் முஜாமலாவின் இரு கவிதைத் தொகுப்பு நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

கவிஞர் முஜாமலாவின் முதல் முயற்சியாக 'நீதம்' மற்றும் 'ரூஹின் சிறகுகள்' எனும் கவிதைத் தொகுப்பு நூல்களின் வெளியீட்டு விழா தென்கிழக்கு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பிரிவு, தந்திரோபாய திட்டமிடல் பிரிவின் பணிப்பாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எப்.எச்.ஏ.ஷிப்லி தலைமையில் நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தென்கிழக்கு




பல்கலைக்கழக கலை, கலாசார பீட மொழித்துறை சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

'வானம்பாடி' எனும் புனைப் பெயரிலும் அவர் எழுதி வருகின்றார்.

## சேகு முஹம்மது முஹம்மது நஸீர் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

தம்பலகாமம் குறுப் நிருபர்



திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் மீரா நகர் கிராம சேவகர் பிரிவை சேர்ந்த எஸ்.எம்.எம்.நஸீர் சமாதான நீதவானாக திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் அலுவலக உத்தியோகத்தராக கடமையாற்றும் இவர் முன்னாள் சீனக்குடா விமானப் படையகத்தின் ஊழியருமாவார்.

## கண்ணகியம்மன் வைகாசி திருக்குளிர்த்தி



காரைதீவு குறுப் நிருபர்

கிழக்கில் கண்ணகியம்மன் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கின் போது பக்தர்கள் அதிகாலை முதல் கற்பூரச்சட்டி ஏந்தி பயபக்தியுடன் நேர்கடன் செலுத்துவதை காணமுடிந்தது.

அதேவேளை ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசித் திங்கள் திருக்குளிர்த்தி பாடும் முக்கிய சடங்கு இன்று 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை நடைபெறும்.

எட்டாம் சடங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தாதியர்கள் ஆற்றி வரும் சேவையை ஒருபோதும் மறக்க முடியாது

### வைத்திய அத்தியட்சகர் டொக்டர் றஜாப்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன், அட்டாளைச்சேனை குறுப் நிருபர்கள்

மருத்துவ துறையில் தாதியர்கள் ஆற்றி வரும் சேவையை ஒருபோதும் மறக்க முடியாது என வைத்திய அத்தியட்சகர் டொக்டர் றஜாப் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை தாதியர் உத்தியோகத்தர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் "எங்கள் தாதியர்கள், எங்கள் எதிர்கால பொருளாதார சக்தி' எனும் தொனிப்பொருளில் சர்வதேச தாதியர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தாதியர்களில் 70 வீதமானவர்கள் பெண்களாகத்தான் இருக்கின்றனர். அவர்களின் இச்சேவையானது மிகவும் அளப்பரிய ஒன்றாக காணப்படுகின்றது. அவர்களுக்கென்று குடும்பம், பிள்ளைகள் என்றதொரு பாரிய சுமை இருந்தாலும் தாம் செய்கின்ற இந்த புனிதமான தாதிய தொழிலை பொறுப்புணர்ச்சியோடு செய்துவருகின்றனர்.

அதேபோல் கொவிட் காலப்பகுதியில் தாதியர்கள் சந்தித்த சவால்கள் அவர்கள் அடைந்த இன்னல்களை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. இவர்களின் அளப்பரிய சேவையூடாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு பல புகழையும் தேடித் தந்துள்ளனர். இனிவரும் காலங்களிலும் இவர்களுடைய அளப்பரிய சேவையானது வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்கு அவசியமானதாக காணப்படுகிறது. எனவே எமது தாதியர்களை இத்தினத்தில் வாழ்த்துவதிலும் பாராட்டுவதிலும் நாம் பெருமிதம் அடைகிறோம் என அவர் தெரிவித்தார். இதன்போது சுகாதார அமைச்சின் தாதிய சேவைகள் பணிப்பாளர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை தாதியர்களால் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அத்தோடு, அக்கரைப்பற்றின் முதலாவது தாதிய உத்தியோகத்தர் ஏ.மஹ்ரூப்பின் சேவையை நன்றிகூர்ந்து பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டார். பிரதம தாதிய உத்தியோகத்தர் பீ.ரீ.நௌபரின் ஒழுங்கமைப்பில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். றஜாப் தலைமையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



## அரியவகை நீல தூணா மீன் காரைதீவு ஆழ்கடல் மீனவர்களால் பிடிப்பு

மாளிகைக்காடு குறுப் நிருபர்



காரைதீவு பகுதியிலிருந்து ஆழ் கடலுக்கு மீன் பிடிக்க சென்ற மீனவர்களின் தூண்டிலில் சுமார் 49 கிலோ நிறையுடைய கோடிக்கணக்கில் பெறுமதியுள்ள நீல தூணா மற்றும் நீல ஹென்டா என அழைக்கப்படும் மிக அரியவகை மீன் பிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பாரிய மீன்களை கொள்வனவு செய்யும் நிறுவனங்களால் மட்டுமே இவ்வகை மீன்களை கொள்வனவு செய்ய முடியும் என மீனவர்கள் தெரிவித்தனர்.

# சவுதி அரேபிய ஆட்சியாளர்கள் ஆல் ஸஊத்தின் பொறுப்பின் கீழ் புனித மக்கா, மதீனா இருப்பது பெருமைக்குரியது

## இலங்கையின் முதல் ஹஜ் குழு இன்று சவுதி பயணம் ; கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வழியனுப்பும் வைபவம்

சவுதி அரேபியாவிலுள்ள புனித மக்கா, மதீனா என்பது உலக முஸ்லிம்களினால் மதிக்கப்படுகின்ற உலக முஸ்லிம்களின் பிரதான வணக்க வழிபாடுகளுடன் சம்பந்தப்பட்ட இரு முக்கிய புனித ஸ்தலங்களாகும். குறிப்பாக முஸ்லிம்களின் ஐம்பெரும் கடமைகளில் ஐந்தாவது கடமையான புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவது புனித மக்கா, மதீனாவோடு சம்பந்தப்பட்ட விடயமாகும். இக் கடமையை தன் உடலாலும் பொருளாலும் சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் வாழ் நாளில் ஒரு தடவையாவது நிறைவேற்ற வேண்டும்.

சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வை வணங்கி வழிபடவென உலகிலேயே நிர்மாணிக்கப்பட்ட முதலாவது மஸ்ஜித் தான் மக்காவிலுள்ள கஃபதுல்லாஹ்வாகும். இங்கு நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தொழுகைக்கும் ஒரு இலட்சம் நன்மைகள் கிடைக்கப்பெறும் என்று இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இரு ஹரம் ஷரீப்களின் விஸ்தரிப்புகள் என்பது உமர் (ரழி) அவர்கள் ஆட்சிக் காலம் தொடக்கம் தற்போதைய சவுதி அரசின் ஆட்சி வரை பல கட்டங்களாக இடம்பெற்றது. இருந்தாலும் சவுதி அரசின் ஆட்சியாளர்கள் சவுதி அரேபியாவை ஆட்சி செய்யத் தொடங்கிய முதலாவது மன்னர் காலத்தில் இருந்து தற்போதைய ஆட்சியாளர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் வரை இரு ஹரம் ஷரீப்களின் விஸ்தரிப்பு என்பதும், யாத்திரிகர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உட்கட்டமைப்புகளையும் செய்து கொடுப்பதும் உலகின் அனைவராலும் பாராட்டி மெச்சப்படுகின்ற விடயமாக உள்ளது. சவுதி அரேபியாவை ஆட்சி செய்யும் ஆல் ஸஊத் பரம்பரையினரின் ஆட்சிக் காலத்தில் தான் கஃபதுல்லாஹ்வின் விஸ்தரிப்பு அபிவிருத்தி பாரிய அளவில் இடம்பெற்றுள்ளது.

**ஹஜ் யாத்திரிகர்கள் முழுமையான பாதுகாப்பான சூழலிலும் மன அமைதியுடனும் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் தங்களது கடமைகளை இனிதே நிறைவேற்றிட சவுதி அரசு இரவு பகலாக தன்னலம் பாராது, அல்லாஹ்வின் விருந்தாளிகளின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு அர்ப்பணிப்புகளுடன் சேவைகளை மேற்கொண்டு வருகிறது.**

புனித மக்கா, மதீனா மஸ்ஜித்களுக்கு சவுதி அரேபிய ஆட்சியாளர்கள் ஆற்றி வரும் அளவிலா சேவைகளின் நிமித்தம் 'இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர் ஹாதிமுல் ஹரமைன் அஸ் ஷரீபைன்' என்ற பெயரைப் அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

அந்த வகையில் தற்போதைய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் இப்பெயரைப் பெற்றுள்ளார். இவர் இப்பள்ளிவாசல்களின் மேம்பாட்டுக்கும் இப்பள்ளிவாசல்களில் தங்கள் மார்க்க கடமைகளை நிறைவேற்றவரும் உலக முஸ்லிம்களுக்கும் அளப்பரிய சேவையாற்றி வருகிறார்.

அந்த வகையில் ஹஜ், உம்ரா கடமைகளை நிறைவேற்ற வேண்டிய பிரதான இடமாக புனித மக்கா விளங்குகிறது. இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றாக விளங்கும் ஹஜ்ஜை நிறைவேற்றும் தளங்களாக விளங்கும் புனித மக்கா, மதீனா சவுதி அரேபியாவில் அமைந்திருப்பது மாபெரும் வரப்பிரசாதமாகும்.

புனித மக்கா, மதீனா வரும் அனைத்து யாத்திரிகர்களின் நலன் கருதி சவுதி அரசாங்கம் சகல விதமான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்து வசதி அளித்து வருகிறது. குறிப்பாக விமானப் போக்குவரத்து வசதிகள், மக்கா, மதீனாவில் அதிநவீன சொகுசு ஹோட்டல்கள், அதி நவீன போக்குவரத்து பஸ்கள், மக்கா, மதீனா அதிநவீன சொகுசு ரயில் போக்குவரத்து வசதிகள், ஹஜ் கடமையோடு சம்பந்தப்பட்ட மினா, முஸ்தலிபா, அரபா போன்ற இடங்களிலும் அதிநவீன வசதிகளுடன் கூடிய கூடாரங்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் என அனைத்தையும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது.

**இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ், 2024 ஆம் ஆண்டு புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற உலகெங்கிலும் இருந்து புனித மக்காவுக்கு வருகை தந்து கொண்டிருக்கின்ற ஹாஜிகளை அன்போடு வரவேற்பதாகவும் அமைதியான சூழலிலும் பாதுகாப்புடனும் மன அமைதியோடும், தங்களது ஹஜ் கடமைகளை நிறைவேற்ற உத்தரவாதத்தோடு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவையில் குறிப்பிட்டுள்ளார்.**





அதன் பயனாக புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற வருடா வருடம் மூன்று மில்லியன் யாத்திரிகர்கள் மக்காவில் ஒரே நேரத்தில் ஒன்று கூடுகின்றனர். மூன்று மில்லியன் மக்கள் ஒரே இடத்தில் கூடுவதும் அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுப்பதும் இலகுவான காரியமல்ல.

இருந்த போதிலும் அனைத்து யாத்திரிகர்களுக்கும் சவுதி அரசு சகல அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து வருவதால் தான் அனைவரும் ஒரே இடத்தில் ஒன்று கூடி வணக்க வழிபாடுகளை இலகுவில் நிறைவேற்றக்கூடியதாக உள்ளது. உலகிலேயே 24 மணி நேரமும் யாத்திரிகர்களின் வணக்க வழிபாடுகளுக்காக கதவுகள் மூடப்படாமல் திறந்து வைக்கப்பட்டிருக்கும் புனித தளங்கள் தான் கஃபதுல்லாஹ்வும் மஸ்ஜிதுன் நபவியும் ஆகும்.

ஹஜ் கடமையை நிறைவேற்றவரும் அனைத்து யாத்திரிகர்களுக்கும் சகல வசதிகளையும் முன்கூட்டியே செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக உள்நாட்டு வெளிநாட்டு உம்ரா யாத்திரிகர்களைக் கூட சவுதி மட்டுப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கஃபாவிலும் மஸ்ஜிதுன் நபவியிலும் ஹஜ் யாத்திரிகர்களின் நலன் கருதி பல்லாயிரக்கணக்கான சுத்திகரிப்பு வேலையாட்களும் பல சுத்திகரிப்பு இலக்ட்ரோனிக் வாகனங்களும் 24 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் 15,000 க்கும் மேற்பட்ட மலசல கூடங்கள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு தினமும் உயர் ரக கிருமிநாசினிகள் மூலம் 5 தடவைகள் அவை சுத்தம் செய்யப்படுகிறது. மேலும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளிரூட்டப்பட்ட ஸம்ஸம் நீர்த் தாங்கிகள் பல இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளதோடு அந்நீர்த் தாங்கிகள் தினமும் பல முறை நிபுணர்களால் பரீட்சிக்கப்பட்டு வருகிறது.

மேலும் யாத்திரிகர்களின் நலன் கருதி அவர்களது பெருமதியான பொருட்களைப் பாதுகாத்து வைக்க பல்லாயிரக்கணக்கான உயர் ரக பாதுகாப்புப் பெட்டிகள் பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. மக்கா, மதீனாவின் திறந்த வெளியரங்குகளில் மார்பல்கள் வெப்பத்தைத்தணித்து குளிரைக் கொடுக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளதும் விஷேட அம்சமாகும். அத்தோடு 65 மொழிகளில் ஹஜ் கிரியைகள் மற்றும் இதர மார்க்க விடயங்கள், குர்ஆன் விளக்கங்கள், ஜும்ஆப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்படுகிறது. யாத்திரிகர்களில் நோயாளிகள் வயோதிபர்கள் ஆகியோரின் நலன் கருதி பல்லாயிரக் கணக்கான சிறு கதிரைகள் இலவசமாக விநியோகிக்கப்படுவதோடு அவர்களை ஏற்றிச் செல்லவென 500 க்கும் மேற்பட்ட இலத்திரனியல் வாகனங்களும் பயன்படுத்தப்படுகிறது.

**புனித மக்கா, மதீனா மஸ்ஜித்களுக்கு சவுதி அரேபிய ஆட்சியாளர்கள் ஆற்றிவரும் அளவிலா சேவைகளின் நிமித்தம் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர் – ஹாதிமுல் ஹரமைன் அஸ் ஷரீபைன் என்ற பெயரைப் அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். அந்த வகையில் தற்போதைய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் இப்பெயரைப் பெற்றுள்ளார்.**



மேலும் உயர் ரக சுகாதார கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் மக்கா, மதீனா மற்றும் புனித இடங்களுக்குச் செல்லும் அனைத்து யாத்திரிகர்களுக்கும் சவுதி அரசு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. மேலும் சவுதி மன்னருடைய தனிப்பட்ட செலவில் ஏழைகள், அகதிகள், உலமாக்கள், புத்திஜீவிகள் என சுமார் ஐயாயிரம் பேர் வருடா வருடம் உலகெங்கில் இருந்தும் இலவசமாக ஹஜ்ஜுக்காக புனித மக்காவுக்கு அழைத்து வரப்படுகின்றனர். இதுவும் சவுதி அரசு செய்கின்ற சேவைகளில் மிக முக்கியமான சேவையாகும்.

அதனால் ஹஜ், உம்ரா யாத்திரிகர்களுக்கு அளப்பரிய சேவைகள் வழங்கவென சவுதி அரேபியா பாரிய கட்டமைப்பு வசதிகளையும் கொண்டுள்ளது. இதன் நிமித்தம் இஸ்லாமிய கலாசார அமைச்சும் ஹஜ் விவகார அமைச்சும் அவற்றுக்கு மிகத் தகுதியான அமைச்சர்களும் மாத்திரமல்லாமல் தலைமைத்துவ சபையொன்றையும் கொண்டு இந்த அளப்பரிய சேவைகளை சவுதி முன்னெடுத்து வருகிறது.

ஹஜ், உம்ரா யாத்திரிகர்களின் நலன் கருதி சவுதி ஒவ்வொரு வருடமும் புதிய புதிய கண்டுபிடிப்புகளையும், இலகு வழிமுறைகளையும் பயன்படுத்தி யாத்திரிகளுக்கு அளப்பரிய சேவையாற்றிவரும் சவுதி அரேபிய ஆட்சியாளர்களின் கைகளில் புனித மக்கா, மதீனா இருப்பது உலக முஸ்லிம்களுக்கே பெருமையாகும்.

அந்த வகையில் இவ்வருட ஹஜ் காலம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. இம்முறையும் கடந்த வருடத்தைப் போன்று முப்பது இலட்சம் ஹஜ் யாத்திரிகர்கள் மக்காவில் ஒன்றுகூடுவர் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இலங்கையில் இருந்தும் இவ்வருடமும் 3500 பேர் ஹஜ் கடமைக்காக செல்லவிருப்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்குரிய சகல ஏற்பாடுகளையும் இலங்கையிலுள்ள சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானியும் கொழும்பிலுள்ள சவுதி தூதரகமும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் சிறப்பாக மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில் இவ்வருடத்திற்கான இலங்கையின் முதலாவது ஹஜ் யாரத்திரிகர்கள் குழு இன்று (21.05.2024) கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக புனித மக்கா நோக்கிப் பயணிக்கிறது. இவர்களை வழியனுப்பி வைக்கும் விஷேட வைபவம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இலங்கை அரசாங்கத்தின் உயர் பிரதிநிதிகள் மற்றும் சவுதிக்கான இலங்கைத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி உள்ளிட்ட பிரதிநிதிகளின் பங்குபற்றுதலோடு அதிகாலையில் இடம்பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஹஜ் யாத்திரிகர்கள் முழுமையான பாதுகாப்பான சூழலிலும் மன அமைதியுடனும் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் தங்களது கடமைகளை இனிதே நிறைவேற்றிட சவுதி அரசு இரவு பகலாக தன்னலம் பாராது,

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு அர்ப்பணிப்புகளுடன் சேவைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆகவே எல்லாம் வல்ல அல்லாஹ் சவுதி அரசைப் பொருந்திக் கொள்வதோடு அந்நாட்டு ஆட்சியாளர்களையும் பொருந்தி அவர்கள் தொடர்ந்தும் சேவை செய்ய நல்லாரோக்கியத்தை வழங்கிடப் பிரார்த்திப்போம்.



**அஷ்ஷைக் எம்.எச். ஷேஹுத்தீன் மதனி (BA)**
பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம்
கொழும்பு





# மட்டுவில் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப பிரிவு கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்



(யாழ்.விசேட நிருபர்)

யா/ மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நீண்டகாலமாக பல்வேறு காரணங்களினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கந்தவிரேதய ஆரம்ப பிரிவு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால், நேற்றையதினம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் உட்பட்ட பாடசாலை சமூகத்தினர் பலர் கலந்து கொண்டிருந்தனர். யாழ்ப்பாணம், தென்மராட்சி வலயத்தில் மிகவும் பழமைவாய்ந்த 150 ஆவது வருடத்தை நெருங்கும் வரலாற்றை கொண்ட பாடசாலைகளுள் ஒன்றான யா/ மட்டுவில் மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்று முதல் உயர்தரம் வரையிலான வகுப்புக்கள் இருந்து வந்தது. ஆனால் சில வருடங்களாக பல காரணங்களால் இப்பாடசாலையில் ஆரம்ப பிரிவு வகுப்புகள் அதிகாரிகளால் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதனையடுத்து அப்பகுதி கல்வி சமூகத்தினரும் நலன் விரும்பிகளும் பெற்றோரும் தமது பாடசாலையில் ஆரம்ப வகுப்புக்களை இடைநிறுத்தியமைக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்திருந்ததுடன் அவ்விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கும் கொண்டுவந்திருந்தனர்.

அதனடிப்படையில் அப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக பாடசாலைக்கு அமைச்சர் நேரில் சென்று ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் கல்விப்புலத்தினரின் கருத்துக்களை ஆராய்ந்தார். இந்நிலையில் குறித்த பிரச்சினை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடியாக துறைசார் தரப்பினரது கவனத்திற்கு கொண்டுசென்று மீளவும் ஆரம்ப பிரிவு வகுப்புகளை முன்னெடுத்து செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். இதையடுத்து நேற்றைய தினம் மட்டுவில் கந்தவிரேதய பாடசாலையின் ஆரம்ப பிரிவு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சம்பிரதாயபூர்வமாக மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# யோகக்கலை அடிப்படை கற்கைநெறி

(கோப்பாய் குறூப் நிருபர்)

வடமாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் காலை 8.00 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடுன்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

## வடக்கின் உதயம்

# யாழ்.நண்பர்களின் 10ஆவது வருட நிறைவு

## ஆளுநர் பங்கேற்பு



யாழ்.நண்பர்களின் 10ஆவது வருட நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

சமூக பெரியார்களை கௌரவித்து முத்திரைகள் வெளியிட்டு வைக்கப்பட்ட இந்நிகழ்வில் 'வட்டூர் இராமநாதன் புதல்வர்களின் நாதசங்கமம்' எனும் நாதஸ்வர தவில் கச்சேரி நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்,

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்நிகழ்வு அமைந்துள்ளது. ஒரு சமூகம் மீண்டெழுவதற்கான பல தேவைகள் காணப்படுகின்றன.

இன்றைய தினம் மதப்பெரியார்கள், கல்வியியலாளர்கள், கலைத்துறை சார்ந்தவர்கள் என அனைத்து தரப்பினரும் கௌரவிக்கப்பட்டமை சிறப்பான நல்லிணக்க செயற்பாடாகும். எமது செயற்பாடுகளுக்கு அயல் நாடாகிய இந்தியா பல வழிகளிலும் தன்னுடைய ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. அதேபோல எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை வடக்கில் பல திட்டங்களை மேன்மை தங்கிய ஜனாதிபதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார். பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

காணி உரிமங்கள் கையளிக்கப்படவுள்ளன. இவ்வாறாக வடக்கு மாகாண அபிவிருத்திக்கான பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் திருக்கல்யாண உற்சவம்



(மன்னார் குறூப் நிருபர்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழா கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக திருவிழா நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) இரவு 7 ஆம் நாள் விசேட திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. தொடர்ந்து உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதை தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் உள்வீதி, வெளி வீதி உலா வந்தனர்.இன்று 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர் திருவிழா மற்றும் 22 ஆம் திகதி புதன் கிழமை தீர்த்த உற்சவம் என்பன நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ வாகனம் மோதி யுவதி உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனம் மோதி யுவதியொருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த 23 வயதுடைய சுதாகரன் சாருஜா என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சைக்கிளில் பால் எடுத்து சென்ற வேளை , புத்தூர் கனகம்புளியடி வீதியில் வீரவாணி சந்திக்கு அருகில் இராணுவ வாகனம் மோதியதில் யுவதி படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்த யுவதியை அங்கிருந்தவர்கள் மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை யுவதி உயிரிழந்துள்ளார்.

யுவதியின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# சகோதரியின் பெயரில் போலி கடவுச்சீட்டு பெற்ற பெண் கைது

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தனது சகோதரியின் பெயரில் போலி கடவுச்சீட்டு மற்றும் வங்கி ஆவணங்களை பெற்ற குற்றச்சாட்டில் டென்மார்க் பிரஜையொருவரை யாழ்ப்பாண பொலிஸாரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்டு தற்போது டென்மார்க் பிராஜவுரிமை பெற்று டென்மார்க்கில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கடந்த 2015ஆம் ஆண்டளவில் தனது சகோதரியின் பெயரில் போலியான கடவுச்சீட்டை பெற்று டென்மார்க் நாட்டுக்கு சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வசித்த அவரது சகோதரி 2019ஆம் ஆண்டளவில் தனக்கு கடவுச்சீட்டு எடுப்பதற்காக விண்ணப்பித்த போது , அவரது பெயரில் ஏற்கனவே கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அவருக்கு கடவுச்சீட்டு வழங்கப்படவில்லை. இதன்போதே தனது சகோதரி தனது பெயரில் கடவுச்சீட்டு எடுத்து வெளிநாடு சென்ற விடயம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தனது தாயாரின் இறுதி கிரியைக்காக டென்மார்க்கில் இருந்து வந்தவர் , போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி தனது சகோதரியின் பெயரில் யாழ்ப்பாணத்தில் வங்கி கணக்கொன்றையும் ஆரம்பித்துள்ளார்.

இதுதொடர்பில் அறிந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சகோதரி யாழ்ப்பாண பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், டென்மார்க் பிரஜையான பெண்ணை கைது செய்து, விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# பலத்த மழை மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் வீடு சேதம்

(கம்பளை நிருபர்)



தெல்தோட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு முதல் மழை பெய்த வண்ணம் உள்ளது. இதனால் தெல்தோட்டை நூல்கந்தூர மாணிக்க தோட்டப் பகுதியிலுள்ள வீட்டுக்கு மேல் பாரிய மரமொன்று முறிந்து விழுந்துள்ளது. இதனால் வீட்டு கூரை மற்றும் சில பொருட்களும் சேதமாகியுள்ளது, வீட்டில் இருந்தவர் தெய்வாதீனமாக உயிர் தப்பித்துள்ளனர்,

தற்போது கடுமையான மழை காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

# துப்பாக்கிகளுடன் நால்வர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கிகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அரநாயக பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

கந்தகெட்டிய, புலஸ்திபுர, அரநாயக போன்ற பிரதேசங்களில் இவர்கள் யுக்திய பாதுகாப்பு தேடுதலின் கீழ் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுகஹதுர தம்பால ரம்பேவ ஆகிய பிரதேசங்களில் வசித்து வரும் இவர்கள் அனைவரும் 28, 32, 43, 53 வயதுகளையுடையவர் என தெரியவருகின்றது.

துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டு வந்த விதம் குறித்தும் விசாரணைகள் இடம் பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஊவா மாகாண கஷ்டப் பிரதேசங்களுக்கு 506 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்



(ஊவா சுழற்சி நிருபர்)

ஊவா மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற பட்டதாரி ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு ஊவா மாகாண சபையினால் 506 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. பதுளை மற்றும் மொனராகலை நூலக கேட்போர் கூடங்களில் இதுதொடர்பான நிகழ்வுகள் நடைபெற்றன.

ஊவா மாகாண சபையினால் ஆசிரியர் பரீட்சை மற்றும் பட்டதாரிகளுக்கான நடைமுறைப் பரீட்சை நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. ஊவா மாகாணத்திலுள்ள கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி ஆசிரியர்கள் தாங்கள் நியமனம் பெற்ற பாடசாலைகளில் ஐந்தாண்டுகள் பணியாற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இந்நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பதுளை நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கும் விழாவில் ஊவா மாகாண பிரதம செயலாளர் தமயந்தி பரணகம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மொனராகலை நூலகத்தில் இடம்பெற்ற ஆசிரியர் நியமன விழாவில் நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்நாயக்க மற்றும் ஊவா மாகாண செயலாளர்கள் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஊவா மாகாண கல்விச் செயலாளர் காமினி மஹிந்தபால ஜோபியாஸ் ஆலோசனைக்கமைய இந்நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# பாடசாலை மாணவி சடலமாக மீட்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்)

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து நேற்றுமுன்தினம் (19) மாலை பாடசாலை மாணவியொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். தலவாக்கலை ரத்னில்லகலையைச் சேர்ந்த பெரியசாமி டிலுக்சனா (வயது 18) என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை தோற்றவிருந்த இவர் இரவு வீட்டில் படித்துக்கொண்டிருந்ததாகவும் அதிகாலையில் மாணவி வீட்டிலிருந்து காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து மாணவி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நுவரெலியா நீதவான் சம்பவ இடத்திற்கு சென்று பரிசோதனை மேற்கொண்டதன் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

தலவாக்கலை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நிர்த்திய கலாலயாவின் 29 ஆவது ஆண்டு நிறைவு விழா



(தலவாக்கலை குறூப் நிருபர்)

நிர்த்திய கலாலயாவின் 29 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக கலை, கலாசார நிகழ்வுகள் அதன் பணிப்பாளர் திருமதி. கலாதேவி தலைமையில் இறம்பொடை சௌமிய மூர்த்தி தொண்டமான் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா வின் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் கலந்துகொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் இ.தொ.காவின் உப தலைவர் கந்தசாமி நாயுடு, கொத்மலை பிராந்தியத்துக்கான அமைப்பாளர் மூர்த்தி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், கம்பளை கல்வி வலய கோட்டக் கல்வி பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கெசல்கமுவ ஓயாவில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு; பாரிய இயந்திரம் மீட்பு

(பொகவந்தலாவ நிருபர்)

கெசல்கமுவ ஓயாவில் மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த பாரிய இயந்திரமொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

காசல் ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏந்தி செல்லும் பொகவந்தலாவ டியன்சின் கெசல்கமுவ ஓயாவில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த பாரிய இயந்திரமொன்றை பொகவந்தலாவ பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை மீட்டுள்ளனர். இதேவளை மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்தவர்கள் தப்பிசென்றுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொலிஸாரினால் மீட்கப்பட்ட இயந்திரத்தை நேற்று ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



இந்நிலையில் கெசல்கமுவ ஓயா சுத்தப்படுத்தும் நடவடிக்கை என்ற பெயரில் மாணிக்கக்கல் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்

# பொருளாதர பரிமாற்ற சட்டமூலம் புதனன்று சபையில் சமர்ப்பிக்கப்படும்

பொருளாதாரப் பரிமாற்ற சட்ட மூலம்" மற்றும் "அரச நிதி முகாமைத்துவ சட்ட மூலம் " என்பன மே 22 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என,பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதன்படி, மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்காக நாட்டின் அரச நிதியை உகந்த மட்டத்தில் முகாமைத்துவம் செய் வதை உறுதிசெய்ய "பொருளாதாரப் பரிமாற்ற சட்டமூலம்" மற்றும் "அரச நிதி முகாமைத்துவ சட்ட மூலம் " ஆகியவை சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.



இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க,

நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு சட்டமூலங்களை மே மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த சட்டமூலங்களில் ஒன்று, மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதைத் தடுப்பது தொடர்பாக முன்வைக்கப்படும் "பொருளாதார பரிமாற்றம் சட்டமூலம்"(Economic Transformation law) ஆகும்.இந்த சட்டமூலம் சர்வதேச நாணய நிதியத்தால் முன்மொழியப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்தின்படியே இந்த சட்டமூலம் முன்வைக்கப்படுகின்றது என்பதைக் கூற வேண்டும். கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் தற்போது ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிலை எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாத வகையில், நாட்டின் அரச நிதி முகாமைத்துவம் மிகவும் உகந்த நிலையில் பேணப்பட வேண்டும்.

இது தொடர்பான பொறுப்புக்கூறல் தொடர்பில் கவனம் செலுத்தி, அரச நிதியை முறையான முகாமைத்துவம் செய்வதற்காக "அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம்" எதிர்வரும் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான கூட்டு வேலைத்திட்டத்தில் இது தொடர்பில் எமக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த இரண்டு சட்ட மூலங்களும் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானவை என்பதையும் குறிப்பிட வேண்டும். இந்த இரண்டு சட்டமூலங்களிலும் பல தொழில்நுட்ப விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பொருளாதார போக்கை மாற்றாமல் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை மேலும் உறுதிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மறைந்த ஈரான் ஜனாதிபதியின் தொலைநோக்கால் கவரப்பட்டேன்

## இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு பிரதமர் அனுதாபம்



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியான் ஆகியோர் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தமை, பெரும் கவலையளிப்பதாக பிரதமர் தினேஷ்குணவர்தன அனுதாபம் தெரிவித்துள்ளார். ஈரான் பதில் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் பிரதமர் தெரிவித்துள்ளதாவது:

ஈரான் மக்களுக்கும் இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும் மறைந்த ஜனாதிபதி ரைசி ஆற்றிய சேவைகள் பாராட்டத்தக்கவை . உண்மையில், இப்ராஹிம் ரைசியின் இலங்கை விஜயம் இலங்கை மக்களுக்குப் பெரிதும் பயனளிக்கும். ஈரானின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட உமா ஓயா நீர் மின்சாரம் மற்றும் நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக அண்மையில் ரைசி இலங்கைக்கு வந்திருந்தார்.

இதன்போது நான் அவருடன் நெருக்கமாகப் பழகினேன். ஈரானினதும் அந்நாட்டு மக்களினதும் சுபீட்சம் மற்றும் உலகளாவிய அமைதி, பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான அவரது நேர்மையான தொலைநோக்கில், நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன்.

இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பிலும் எனது தனிப்பட்ட சார்பிலும் ஈரான் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் மறைந்த ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சரின் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.

இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

# அரசாங்க பாடசாலைகள் நேற்று திறக்கப்பட்டன

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கடும் மழை, சீரற்ற கால நிலைக்கு மத்தியிலும் அரசாங்க மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகள் முதலாம் தவணையின் மூன்றாம் கட்ட கற்றல் நடவடிக்கைகளுக்காக, நேற்று (20) ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கிணங்க முதலாம் தவணையின் மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் (31) வரை தொடருமென, கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, புத்தளம் மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

இதற்கான அறிவித்தலை வடமேல் மாகாண ஆளுநர் வெளியிட்டுள்ளார். காலநிலையை கருத்திற் கொண்டு பாடசாலை ஆரம்பமாகும் திகதியை தீர்மானிக்கும் பொறுப்பு பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் புத்தளம் மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவிக்கையில், நாடளாவிய ரீதியில் பெய்துவரும் பலத்த மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும், புத்தளம் மாவட்ட செயலாளர் மற்றும் வடமேல் மாகாண பிரதம செயலாளர் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் பாடசாலைகளை மூடுவதற்கான இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அதன்படி புத்தளம் வலயத்தில் 213 பாடசாலைகளும் சிலாபம் வலயத்தில் 158 பாடசாலைகளும் நேற்று மூடப்பட்டன.

அதேவேளை, நிலவும் மழையுடனான வானிலையினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் எதிர்நோக்க நேரும் அசௌகரியகள் அனர்த்த நிலைமைகள் தொடர்பில் தமது செயற்பாட்டுப் பணியகத்துக்கு அறிவிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் அறிவித்துள்ளது.

24 மணிநேரமும் இயங்கும் செயற்பாட்டு பணியகத்திற்கு அது தொடர்பான தகவல்களை வழங்க முடியும் என அந்த நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத் தெரிவித்துள்ளார்.

# ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்க நான்கு உயர் பீடங்களும் கோரிக்கை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில், கடூழிய சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அஸ்கிரிய உட்பட நான்கு பீடங்களினதும் மகாநாயக்கத் தேரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நான்கு வருடங்களுக்கு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கலபொட அத்தே ஞானசார தேரருக்கு, பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மல்வத்து, அஸ்கிரி, ராமாண்ய மற்றும் அமரபுர ஆகிய நான்கு பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் இவ்வாறு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எதிர்வரும் வெசாக் பண்டிகையையொட்டியே இவருக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.சங்கைக்குரிய கலபொட அத்தே ஞானசார தேரர் 2016 ஆம் ஆண்டு கூரகல விகாரை தொடர்பாக அறிக்கை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில், மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே அவருக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறைச்சாலை ஊழியர்கள் சகலரும் கடமைகளுக்கு சமுகமளிக்க வேண்டும்

சிறைச்சாலை ஊழியர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால், அனைத்து ஊழியர்களும் கடமைக்கு சமுகமளித்து தமக்கான நீதிமன்ற கடமைகளில் ஈடுபட வேண்டும் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும், சிறைச்சாலை ஆணையாளருமான காமினி திஸாநாயக்க நேற்று (20) பிற்பகல் தெரிவித்தார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி, சில சிறைச்சாலைகளின் உத்தியோகத்தர்கள் நேற்று நீதிமன்ற கடமைகளிலிருந்து விலகியுள்ளனர்.எனவே, நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த ஊழியர்கள் கடமைப்பட்டுள்ளதால் உத்தியோகத்தர்கள் அதிகாரிகள் தமது கடமைகளை புறக்கணிக்க வாய்ப்பில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புத்தளம் மாவட்டத்தில் கடும் மழை;

# 8780 குடும்பங்களைச் சேர்ந்த 32,710 பேர் கடும் பாதிப்பு







**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் 8780 குடும்பங்களைச் சேர்ந்த 32,710 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 9 பிரதேச செயலகப் பிரிவில் 78 கிராம சேவகர் பிரிவில் 8780 குடும்பங்களை சேர்ந்த 32,710 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தின் மஹாகும்புக்கடவல, கருவலகஸ்வெவ, மாதம்பை, முந்தல், புத்தளம், சிலாபம் மற்றும் ஆராச்சிக்கட்டுவ, கற்பிட்டி , மற்றும் வன்னாத்தவில்லு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் வாழும் மக்கள் இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 12 கிராம சேவகர் பிரிவில் 6815 குடும்பங்களைச் சேர்ந்த 25,529 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் கூறினார்.

அத்துடன், வன்னாத்தவில்லு பிரதேச செயலகத்திற்குற்பட்ட 4 கிராம சேவகர் பிரிவில் 180 குடும்பங்களைச் சேர்ந்த 636 பேரும், முந்தல் பிரதேச செயலக பிரிவிக்குற்பட்ட 20 கிராம சேவகர் பிரிவில் 48 குடும்பங்களை சேர்ந்த 302 பேரும், மஹாகும்புக்கடவல பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 8 கிராம சேவகர் பிரிவில் 59 குடும்பங்களை சேர்ந்த 187 பேரும், கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 1 கிராம சேவகர் பிரிவில் 76 குடும்பங்களை சேர்ந்த 264 பேரும், கருவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 5 கிராம சேவகர் பிரிவில் 39 குடும்பங்களை சேர்ந்த 109 பேரும், சிலாபம் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 10 கிராம சேவகர் பிரிவில் 251 குடும்பங்களை சேர்ந்த 1059 பேரும், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 14 கிராம சேவகர் பிரிவில் 491 குடும்பங்களை சேர்ந்த 1741 பேரும், மாதம்பை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 4 கிராம சேவகர் பிரிவில் 14 குடும்பங்களை சேர்ந்த 143 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, வெள்ளம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஒன்பது வீடுகளும், ஒரு வர்த்தக நிலையமும் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளன. மேலும், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் 537 குடும்பங்களைச் சேர்ந்த 1775 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்காக புத்தளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 6 பாதுகாப்பு நிலையங்களும், முந்தல் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 3 பாதுகாப்பு நிலையங்களும், மஹாகும்புக்கடவல பிரதேச செயலகத்தில் ஒரு பாதுகாப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புத்தளம் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 10 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான குடிநீர் மற்றும் சமைத்த உணவுகள் அந்தந்த பிரதேச பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையில் பிரதேச செயலக ஊழியர்கள், அரச அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினரின் ஒத்துழைப்பில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் புத்தளம் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளம் நகர சபை, புத்தளம் பிரதேச சபைகளுக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தொண்டர் அமைப்புக்களும், மஸ்ஜித் நிர்வாகிகளும், சமூக அமைப்பினர்களும் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

அத்துடன், கடந்த இரண்டு நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியிருந்தன.

இதனால், பாடசாலைகள் , அரச அலுவலகங்கள் உட்பட பல கிராமங்கள் வெள்ளத்தினால் மூழ்கின. வெள்ள அனர்த்தம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளன.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலமையினால், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு கருதி நேற்று (20) புத்தளம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குமாறு மாகாண ஆளுநர் நசீர் அஹ்மட் உத்தரவிட்டிருந்தார்.

எனினும், அசாதாரண நிலை தொடர்வதால் புத்தளம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் இன்று (21) செவ்வாய்க்கிழமையும், நாளை (22) புதன்கிழமையும் விடுமுறையை வழங்கி மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக ராஜாங்கனை , தப்போவ மற்றும் அங்கமுவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி தெரிவித்தார்.

இதன்படி இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகள் 2 அடி உயரத்திலும், அங்கமுவ நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகள் 3 அடி உயரத்திலும், தப்போவ நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகள் 8 அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள்ளன.

இதனால், இராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 1050 கன அடி நீரும், அங்கமுவ நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 1800 கன அடி நீரும், தப்போவ நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 3200 கன அடி நீரும் வெளியேறுவதாகவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# புதிய வகுப்பறை கட்டிடத்திற்கு அடிக்கல்



கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட அழுத்தென்னாவ அந்நூர் முஸ்லிம் வித்தியாலயத்தின் புதிய வகுப்பறை கட்டிடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இடைநிலைப் பாடசாலையாக தரம் உயர்த்தும் நிகழ்வும் அதிபர் என்.ஏ.எம்.அஜ்மீர் தலைமையில் (20) நடைபெற்றது. இதன்போது, அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் புதிய வகுப்பறை கட்டிடத்திற்கு அடிக்கல் நட்டிவைத்த போது பிடித்த படம்.

**(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

# குருகொடை அல் மு:ஃமினாத்தில் 25ஆம் திகதி நேர்முக பரீட்சை

அக்குரணை குருகொடை அல் முஃமினாத் மகளிர் அரபுக் கல்லூரிக்கு ஷரீஆ பிரிவிற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறும் என அதிபர் அறிவித்துள்ளார்.

சேரவிரும்பும் மாணவிகள் 2023 / 2024 ஆம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியிருப்பதோடு, அல்குர்ஆனை சரளமாக ஓதக்கூடியவராகவும், தேகாரோக்கியம் மற்றும் நன்னடத்தை உள்ளவராகவும், அரபு மொழி இஸ்லாமிய கற்கைகளில் ஆர்வமுள்ளவராகவும் இருத்தல் அவசியமாகும்.

க.பொ.த. சா/தர வகுப்பில் இறுதி தவணை பெறுபேற்றறிக்கை, பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, இணை பாடவிதான சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அதிபர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் மேலதி தகவல்களுக்கு 0773786538 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## போதைப் பொருளுடன்... (01ஆம் பக்கத் தொடர்)

சேர்ந்தவராவார். 57 வயதுடைய இப்பெண், தமது பயணப்பையில் சூசகமாக இந்த போதைப் பொருளை மறைத்து வைத்து கடத்தி வந்ததாக, சுங்கத் திணைக்களத்தின் போதைப் பொருள்தடுப்புபிரிவுஅதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய, சுற்றுலாப் பயணியாக இலங்கைக்கு வருகை தந்ததாக தெரிவித்து விமான நிலையத்தின் வெளிச்செல்லும் முனையத்தினூடாக அவர், மேற்படி போதைப் பொருளை வெளியே கொண்டு செல்ல முனைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இப்பெண் இவ்வாறு 2 கிலோ 450 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை பாகிஸ்தானிலிருந்து கடத்தி வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பாரதம்
## சமகால நடப்புகள்

# சிறுபான்மை மக்களுக்கு எதிராக ஒரு வார்த்தையும் நான் பேசவில்லை!



'சிறுபான்மையினருக்கு எதிராக இதுவரை நான் ஒருவார்த்தைக் கூட பேசியதில்லை' என பிரதமர் மோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு பிரதமர் மோடி பேட்டி அளித்துள்ளார்.

"அம்பேத்கர் முதல் நேரு வரை மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது. காங்கிரசின் வாக்கு வங்கி அரசியலைத்தான், நான் எதிர்த்து வருகிறேன். சிறுபான்மையினருக்கு எதிராக நான் ஒரு வார்த்தை கூட இதுவரை பேசியதில்லை. சிறுபான்மையினருக்கு எதிராக பா.ஜ.க ஒரு நாளும் செயல்பட்டதில்லை" என்றார் மோடி.

"அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்களின் நோக்கத்தை சிதைக்கும் காங்கிரஸ் முயற்சியை மக்களிடையே நான் அம்பலப்படுத்துகிறேன். இந்த முறை தென் மாநிலங்களில் பா.ஜ.க மிகப்பெரிய கட்சியாக உருவெடுக்கும். தே.ஜ. கூட்டணி 400 தொகுதிகளில் வெற்றி பெறும். தென் மாநிலங்களில் பா.ஜ., மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் அதிக தொகுதிகளில் வெல்லும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"பா.ஜ., அரசை மூன்றாவது முறையாக மீண்டும், ஆட்சிக்கு கொண்டு வர மக்கள் அனைவரும் விரும்புகின்றனர். ஒடிசாவின் மகன் அல்லது மகளை மட்டுமே பா.ஜ.க முதல்வராக்கும். ஒடிசாவில் ஜூன் 10 ஆம் திகதி பா.ஜ.க ஆட்சியின் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

என்னைப் பொறுத்தவரை அரசியலமைப்புச் சட்டமே ஆட்சிக்கான மிகப்பெரிய வேதம். அரசியல்வாதியாகவும், மக்கள் பிரதிநிதியாகவும் எனக்கு அரசியல் சட்டம்தான் வழிகாட்டி".

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# இந்தியத் தேர்தலில் உற்சாகத்துடன் வாக்களித்த சினிமா பிரபலங்கள்!





மகாராஷ்டிராவில் நேற்று கடைசி கட்ட மக்களவைத் தேர்தல் நடந்த போது இந்திய சினிமா பிரபலங்கள் பலர் உற்சாகத்துடன் வாக்களித்தனர். இத் தேர்தலில் நேற்று காலையில் இருந்து மக்கள் உற்சாகத்துடன் வாக்களித்தனர்.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் மும்பையில் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்தனர். சில வாக்குச்சாவடியில் நிழலுக்காக பந்தல் போடப்பட்டு இருந்தது. பொலிவுட் நடிகை தீபிகா படுகோனே தனது கணவர் ரன்வீ ர் சிங் துணையுடன் பாந்தி ராவில் வாக்களித்தார். தீபிகா படுகோனே கர்ப்பமாக இருப்பதாக அறிவித்த பிறகு இப்போதுதான் வெளியில் வந்தார். அவரை பாதுகாப்பாக கணவர் ரன்வீர் சிங் வாக்குச்சாவடிக்குள் அழைத்து சென்றார்.அவர்கள் வாக்குச்சாவடிக்கு வந்து சென்ற வீடியோ சோசியல் மீடியாவில் வைரலாக பரவியது.

நடிகர் தர்மேந்திரா தனியே வந்து வாக்களித்தார். அவரின் மனைவி ஹேமாமாலினி தனது மகள் ஈஷா தியோலுடன் வந்து வாக்களித்தார். நடிகர் சுனில் ஷெட்டி, ஆமீர்கான் மகள் இரா கான், ஜுனைத் கான், தயாரிப்பாளர் டேவிட் தவான், நடிகர் வருண் தவான், தயாரிப்பாளர் போனி கபூர், அவரது மகள் குஷி கபூர் ஆகியோரும் பிற்பகலுக்குள் வாக்களித்தனர்.

இது தவிர, மகாராஷ்டிரா நவநிர்மான் சேனா ராஜ் தாக்கரே, முதல்வர் ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் குடும்பத்துடன் வந்து வாக்களித்தார்கள். நடிகை கௌகர் கான் வாக்களிக்க வந்தார். ஆனால் அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லை. இதனால் தேர்தல் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். மேலும் முன்னாள் முதல்வர் உத்தவ் தாக்கரேவும் தனது குடும்பத்தினருடன் வந்து வாக்களித்தார்.

# விண்வெளிக்கு சுற்றுலா சென்ற இந்தியாவின் முதலாவது பயணி!



இந்தியாவின் முதலாவது விண்வெளிச் சுற்றுலாப் பயணி என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார் ஆந்திராவைச் சேர்ந்த கோபிசந்த் தோட்டகுரா.

சோதனை முறையில் 2001 ஆம் ஆண்டு விண்வெளிச் சுற்றுலாப் பயணம் தொடங்கியது. அமெரிக்கத் தொழிலதிபரான டென்னிஸ் டிட்டோ முதல் விண்வெளிச் சுற்றுலாப் பயணியாக விண்வெளிக்குச் சென்று வந்தார். அதாவது பூமியிலிருந்து 60 கிலோமீட்டர் உயரத்தில் துணைச் சுற்றுப்பாதை வரை சென்று வந்தனர். இப்படித்தான் இந்த விண்வெளிச் சுற்றுலாப் பயணம் ஆரம்பித்தது.

இந்த விண்வெளிச் சுற்றுலாப் பயணம் என்பது பூமியிலிருந்து 60_100 கிலோ மீட்டர் உயரத்தில் பூமியின் சுற்று வட்டப்பாதை அல்லது துணைச் சுற்று வட்டப்பாதை வரை பயணிப்பதுதான். இதன் மூலம் சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து பூமியை, நட்சத்திரங்களைக் காணலாம். எதிர்காலத்தில் இது நிலா, செவ்வாய் என கிரகங்களுக்குச் செல்லும் முழுமையான விண்வெளிச் சுற்றுலாவாக மேம்படுத்துவதற்கான சோதனைகள் நடைபெற்று வருகின்றன. உலகப் பணக்காரர்களில் ஒருவரும், 'அமேசான்' நிறுவனத்தின் நிறுவனருமான ஜெஃப் பெசோஸ் 'புளூ ஆர்ஜின்' என்ற விண்வெளிச் சுற்றுலா நிறுவனத்தை 2000 ஆம் ஆண்டில் 24 ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்தார். இந்த விண்வெளிச் சுற்றலாப் பயணத்தை சோதனை முறையில் செயல்படுத்திவந்த இந்நிறுவனம் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளரான ஆலன் ஷெப்பர்ட் பெயரில் 'நியூ ஷெப்பர்ட்' என்ற பிரத்தியேக விண்வெளி சுற்றுலா ரொக்கெட்டை வடிவமைத்துள்ளது. இக்குழுவில் இடம்பெற்றிருக்கும் ஆந்திராவைச் சேர்ந்த கோபி தொடாகுரா, விண்வெளிச் சுற்றுலா சென்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இந்த மகிழ்ச்சியான தருணம் பற்றிப் பேசியிருக்கும் அவர், "இது என்னுடைய வாழ்நாள் கனவு. விண்வெளிச் சுற்றுலாத் திட்டம், ரொக்கெட் பயணம், அதன் செயல்பாடுகள், பூமியின் கண்கொள்ளாக் காட்சி ஆகியவற்றைப் பார்த்து அனுபவிப்பதற்காக இந்தப் பயணத்தை மேற்கொள்கிறேன்" என்று தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறார்.

# ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிமன்றம்!



மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பற்றி அவதூறு கருத்து தெரிவித்த வழக்கில் ஆஜராகாமல், தொடர்ந்து விலக்கு அளிக்கக்கோரியதால், காங்கிரஸ் எம்.பி. ராகுலுக்கு 1,000 ரூபா அபராதம் விதித்து ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2018 இல் நடந்த காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் எம்.பியான ராகுல், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பற்றி அவதூறு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பாக பா.ஜ.க பிரமுகர் பிரதாப் காதியார் ஜார்க்கண்ட் நீதிமன்றத்தில் ராகுலுக்கு எதிராக, 10 கோடி ரூபா நஷ்டஈடு கேட்டு அவதூறு வழக்கு தொடுத்தார்.

இந்த வழக்கில் கடந்த பெப்ரவரியில் ராகுலுக்கு எதிராக பிணையில் வெளியே வர முடியாத பிடியாணையை நீதிமன்றம் பிறப்பித்தது. அப்போது, தான் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கும்படி ராகுல் மனு தாக்கல் செய்தார். வழக்கின் விசாரணையின்போது ராகுல் தரப்பில் தொடர்ந்து ஆஜராகாமல் விலக்கு அளிக்கக் கோரியதால், அவருக்கு 1,000 ரூபா அபராதம் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

தீ விபத்தினால் சேதமடைந்த

# பொத்குல் ரஜமகா விகாரையின் சேதங்களை ஆளுநர் பார்வையிட்டார்





திடீர் தீவிபத்தினால் சேதமடைந்த தளுபொதகம வரலாற்று முக்கியத்துவமிக்க புராதன பொத்குல் ரஜமகா விகாரையின் சேதங்களை ஆளுநர் நஸீர் அஹமட் நேற்று (20) நேரில் சென்று பார்வையிட்டார்

கி.பி. 1702ம் ஆண்டளவில் கீர்த்தி ஸ்ரீ ராஜங்க மன்னன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட தளபொதகம புராதன பொத்குல் விகாரையின் பிக்குமார் விடுதி கடந்த 18ம் திகதி திடீர் தீவிபத்தினால் சேதமடைந்தது

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விகாரையானது, 1886ம் ஆண்டு புனித திரிபிடகம் பாதுகாக்கப்பட்ட எட்டு விகாரைகளில் ஒன்றாகும் என்று வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திடீர் தீ விபத்தினால் சேதமடைந்த தளுபொதகம புராண பொத்குல் விகாரையின் சேதங்களை ஆளுநர் நஸீர் அஹமட் நேரில் பார்வையிட்டார்.

விகாரையின் விகாராதிபதி சாஸ்திரபதி வெலிபிடியே பஞ்ஞாசார தேரரைச் சந்தித்து , தீயினால் ஏற்பட்ட சேதங்களைக் கேட்டறிந்து கொண்டார்.

தீ விபத்தினால் ஏராளமான புத்தகங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் நாசமாகி உள்ளதாகவும், விகாரையின் சீரமைப்பிற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கௌரவ ஆளுநர் அவர்கள் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறித்து நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும் தேரர் குறிப்பிட்டார்.

விகாரையின் சேதங்களை சீரமைப்பதற்குத் தேவையான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த கௌரவ ஆளுநர், சேதமதிப்பீடு மற்றும் சீரமைப்பு பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டு அறிக்கை ஒன்றையும் உடனடியாக தமக்குப் பெற்றுத் தருமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில் மட்டுமன்றி தேவையேற்பட்டால் ஜனாதிபதி நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொடுக்கவும் தான் நடவடிக்கை மேற்கொள்வதாக கௌரவ ஆளுநர் நஸீர் அஹமட் இதன்போது உறுதியளித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன, வடமேல் மாகாண பிரதம செயலாளர் தீபிகா குணரத்ன உள்ளிட்ட பலரும் இதன்போது சமூகமளித்திருந்தனர்.





தேசிய படை வீரர் நினைவேந்தல் நிகழ்வு காலி நகரில் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெற்றது. நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த முப்படையினருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.
30 வருடங்கள் இடம்பெற்ற கொடூர யுத்தத்தின் தென் மாகாணத்தைச் சேர்ந்த 3671 போர் வீரர்கள் உயிரிழந்ததுடன் 4943 பேர் காயமடைந்தனர். இந் நிகழ்வில் காலி மாவட்ட இணைப்புக் குழுத்தலைவர் சம்பத் அதுகோரல, தென் மாகாண பிரதம செயலாளர் சட்டத்தரணி சுமித் அலஹகோன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.
படம் வெலிகம தினகரன் நிருபர்

# சட்டவிரோத மதுபானத்துடன் உப பொலிஸ் பரிசோதகர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

திறப்பனை பொலிஸ் பகுதியில் சட்டவிரோத மதுபானம் மற்றும் மதுபானம் தயாரிக்கும் உபகரணங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரை திறப்பனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த உபபொலிஸ் பரிசோதகர் கவரக்குளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருபவர் என பொலிஸார் தெரிவித்தனர்.அநுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் இவரை அவரது வீட்டில் வைத்து கைது செய்துள்ளனர்.

அவர் தங்கியிருந்த வீட்டில் சட்டவிரோதமாக காய்ச்சப்பட்ட மதுபானம் எரிவாயு அடுப்பு அதனைக் காய்ச்ச பயன்படுத்திய செப்புச் சுருள் என்பனவைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம், தில்லையடி

# முஸ்லிம் வித்தியாலயத்திற்கு புதிதாக இரு வகுப்பறை கட்டிடம்

## அலிசப்ரி ரஹீம் எம்.பி நிதியுதவி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு இரண்டு வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணித்துக் கொடுக்க புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

புத்தளம் தில்லையடி அரசினர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக வகுப்பறை பற்றாக்குறையால் மாணவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக பாடசாலையின் அதிபர், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்டோர் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிடம் வகுப்பறைக் கட்டடம் ஒன்றை பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

குறித்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் 20 இலட்சம் பெறுமதியான இரண்டு வகுப்பறைகள் அடங்கிய புதிய கட்டிடம் ஒன்றை அமைத்துத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, தில்லையடி மு.ம. வித்தியாலயத்தில் புதிய கட்டடத்தை நிர்மாணிக்க பொருத்தமான இடமொன்றினை தெரிவு செய்யும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளரும், தில்லையடி பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளருமான எச். அமீர் அலி ஆசிரியர் மற்றும் புத்தளம் நகரசபை முன்னாள் உறுப்பினர் நகுலேஷ்வரன், ஊடக செயலாளர் எம்.எம். நௌபர் உள்ளிட்டோர் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

# காட்டுப்பகுதிக்குள் இருந்து சடலமொன்று மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

நிகவெரட்டிய கந்தேகெதர காட்டுப்பகுதிக்குள் இருந்து ஆண் ஒருவரின் சடலம் (19) மீட்கப்பட்டுள்ளதாக நிகவெரட்டிய தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.நிகவெரட்டிய, ஹூலுகல்ல பகுதியைச் சேர்ந்த டபிள்யூ.எம்.ருவன் சதுரிக (வயது 45) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

### களுத்துறை பிராந்திய பிரதான பொறியியலாளருக்கு பாதசாரிகள் கடவை மற்றும் வீதித் தடங்களை அடையாளமிடுதல்

| பொதி இலக்கம் | வேலை விபரம் |
|---|---|
| RDA/KD/CE/ RMTF/EEK/ PK 01 | களுத்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், களுத்துறை பிராந்திய பிரதான பொறியியலாளருக்கு அழிந்துபோன பாதசாரிகள் கடவை மற்றும் தடங்களுக்கு தேர்மோபிளாஸ்டிக் அடையாளமிடுதல் - பொதி 1 |
| RDA/KD/CE/ RMTF/EEK/ PK 02 | களுத்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், களுத்துறை பிராந்திய பிரதான பொறியியலாளருக்கு அழிந்துபோன பாதசாரிகள் கடவை மற்றும் தடங்களுக்கு தேர்மோபிளாஸ்டிக் அடையாளமிடுதல் - பொதி 2 |
| RDA/KD/CE/ RMTF/EEH/ PK 01 | ஹொரணை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், களுத்துறை பிராந்திய பிரதான பொறியியலாளருக்கு அழிந்துபோன பாதசாரிகள் கடவை மற்றும் தடங்களுக்கு தேர்மோபிளாஸ்டிக் அடையாளமிடுதல் - பொதி 1 |
| RDA/KD/CE/ RMTF/EEH/ PK 02 | ஹொரணை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், களுத்துறை பிராந்திய பிரதான பொறியியலாளருக்கு அழிந்துபோன பாதசாரிகள் கடவை மற்றும் தடங்களுக்கு தேர்மோபிளாஸ்டிக் அடையாளமிடுதல் - பொதி 2 |
| RDA/KD/CE/ RMTF/EEA/ PK 01 | அகலவத்தை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், களுத்துறை பிராந்திய பிரதான பொறியியலாளருக்கு அழிந்துபோன பாதசாரிகள் கடவை மற்றும் தடங்களுக்கு தேர்மோபிளாஸ்டிக் அடையாளமிடுதல் - பொதி 1 |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 மே 21ஆம் திகதி முதல் 2024 ஜூன் 06ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு/ களுத்துறை பிராந்திய பிரதான பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் www.rda.gov.lk அல்லது mohsl.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, களுத்துறை.**
**தொலைபேசி: 0342222500, 0342222900**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

### 1500 கி.மீ. திட்டத்தின் கீழ் மோட்டார் வாகனம் மற்றும் பாதுகாப்பு நிலைமையில் வீதிகளை புனரமைத்தல்

| பொதி இலக்கம் | வேலை விபரம் | தேவையான CIDA தரப் பதிவு |
|---|---|---|
| RDA/SP/1500KM/ WP/146 | மாலேவன கணேஷ்வர நாஹிமி மாவத்தைக்கு sub grade and laying ஏற்பாடு செய்தல் | C6 / C7 |
| RDA/SP/1500KM/ WP/147 | வீரகல மாதுரு சமயநாயக்க மாவத்தைக்கு sub grade and laying ஏற்பாடு செய்தல் | C6 / C7 |
| RDA/KD/CE/ ASL/2024/04 | களுத்துறை, களுத்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் 1500 கி.மீ. திட்டத்தின் அஸ்போல்ட் பரப்புதல் | - |
| RDA/KD/CE/ ASL/2024/05 | களுத்துறை, ஹொரண நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் 1500 கி.மீ. திட்டத்தின் அஸ்போல்ட் பரப்புதல் | |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 மே 21ஆம் திகதி முதல் 2024 ஜூன் 06ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு / களுத்துறை பிராந்திய பிரதான பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் www.rda.gov.lk அல்லது mohsl.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை, களுத்துறை.**
**தொலைபேசி: 0342222500, 0342222900**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மாவட்ட செயலாளர் அலுவலகம்
### எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்ட, கொழும்பு

**ஒப்பந்த இலக்கம்: DIST.CMB/ACC12/PRO/DCB-1/2024**

01. கொழும்பு மாவட்ட செயலாளர் அலுவலகத்திற்காக மாவட்ட பெறுகைக் குழு, பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இசைக் கருவிகளின் கொள்வனவுக்காக தகுதி பெற்ற விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்கோரல் இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் மூலம் நிர்வகிக்கப்படும் தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறையை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதோடு விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அனைத்து தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.

03. விசாரனை மற்றும் ஆவணங்களை பரீட்சிப்பதற்கு 2024 ஜூன் 10 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00க்கு இடையே தொலைபேசி இலக்கம் 0112-368153 என்ற பெறுகை அதிகாரி நந்திக்கா பீரிஸ்/ ஹர்ஷனி ஜயலத் அவர்களை அழையுங்கள்.

04. மேலும் 2024 ஜூன் 10 ஆம் திகதி பி.ப. 3.00க்கு முன்னர் மீளளிக்கப்படாத 1000 ரூபா விண்ணப்பக் கட்டணம் ஒன்றின் அடிப்படையில் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் 09 ஆவது மாடியின் கணக்கு பிரிவில் பெறுகை அதிகாரி நந்திக்கா பீரிஸ் அவர்களிடம் வர்த்தக பதிவு ஆவணத்தின் பிரதி ஒன்றுடன் எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்த பின் விலைமனுதாரர்களுக்கு முழுமையான விலைமனு ஆவணத் தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய முடியும் என்பதோடு குறித்த விலைமனு ஆவணத்தை கூறுவிலையுடன் 2024 ஜூன் 11 ஆம் திகதி நண்பகல் 12.00க்கு முன்னர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "இசைக் கருவிகளுக்கான விலைமனுக்கள் என்று குறிப்பிட்டு, மாவட்ட செயலாளர் அலுவலக தொகுதி, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு வருகை தந்து 09 ஆவது மாடியில், கணக்குப் பிரிவில் உள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதை மேற்கொள்ள முடியும்.

05. விலைமனு ஆவணங்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற உடன் மேல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்களை திறக்கும் குழுவினால் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். (தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்)

06. அனைத்து விலைமனுக்களும் திறக்கப்பட்ட திகதியில் இருந்து 91 நாட்கள் (2024 செப்டெம்பர் 09 வரை) வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும், விலைமனு ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைய இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் பெற்றுக்கொண்ட ரூபா 250,000.00 (ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்) நிபந்தனையற்ற வங்கி பிணை ஒன்றை கொண்டதாக விலைமனு பிணை ஒன்றை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலாளர் அலுவலக தொகுதி, கொழும்பு 05 க்கு 2024 ஒக்டோபர் 07 ஆம் திகதி வரை செல்லுபடியான வகையில் இருத்தல் வேண்டும்.

07. மாவட்ட பெறுகைக் குழுவுக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்த ஒரு நேரத்திலும் எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பதற்கு அல்லது நிராகரிப்பதற்கு (கட்டாயப்படுத்தலுக்கு உள்ளான விலைமனுதாரருக்கு அல்லது விலைமனுதாரர்களுக்கு என்ற ஒரு கடப்பாடு இன்றி அல்லது அறிவுறுத்தும் கடப்பாடும் இன்றி) உரிமை உள்ளது.

08. மேலுள்ள ஒப்பந்தம் சார்ந்த முகவரியானது,

**தலைவர்,**
**மாவட்ட பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலாளர் அலுவலகம்,**
**எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்ட, கொழும்பு 05**
**தொலைபேசி 0112369134**
**தொலைநகல் 0112369019**

# VACANCIES

## EXTENSION OF THE CLOSING DATE OF THE APPLICATION
### RECRUITMENT OF PROJECT STAFF FOR MINISTRY OF IRRIGATION

- Further to the paper advertisement published on 05 May 2024 in Sunday Observer on above vacancy advertisement, it is hereby informed that the closing date of the vacancy advertisement has been extended up to 29th May 2024 for the following posts.

| No. | PS Category | Designation | No. of Position | Recruitment Basis | Applicable Circular |
|---|---|---|---|---|---|
| 01 | PS 3 | Senior Programming Specialist (Monitoring, Evaluation and Learning) | 01 | Contract | MSD Circular 1/2019 |
| 02 | PS 3 | Procurement and Contract Management Specialist | 01 | Contract | |
| 03 | PS 5 | Social & Environment Safeguard Officer | 01 | Contract | |
| 04 | PS 5 | Communication Officer | 01 | Contract | |
| 05 | PS 6 | Project Secretary | 01 | Contract | |

Applications should be forwarded by registered post **on or before 29th May 2024** to reach the address given below and indicate the post applied for, on the top left-hand corner of the envelope.

Other details given in the paper advertisement published on 05 May 2024 regarding the above subject remain unchanged.

For more information, log on to the website – **www.irrigationmin.gov.lk** and the Ministry of Finance website to refer to the above-mentioned circular.

Project Director
Climate Resilience Multiphase Programmatic Approach (CResMPA)
No. 11, Jawatte Road, Colombo 05,

**Secretary,**
**Ministry of Irrigation**

Date : 20.05.2024





உங்களுக்கு மிகவும் வசதியான, நட்புறவுடனான, வினைத்திறனுடனான சேவையை உறுதி செய்து கொள்ளும் நோக்கில் லேக் ஹவுஸின் புதிய விளம்பர நிலையம் இன்று 2024 மே மாதம் 21ஆம் திகதி இல. 72, ஹைலெவல் வீதி, மஹரகமையில் திறக்கப்படவுள்ளது....

Daily News | தினகரன் | SUNDAY OBSERVER | வாரமஞ்சரி | adz.lk

பத்திரிகைகளில் பிரசுரித்துக்கொள்ள வேண்டிய அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களின் சகல விளம்பரங்களையும் சிறு விளம்பரங்கள் மற்றும் இணையதளத்திற்கான விளம்பரங்களையும் இந்த நிலையத்தின் ஊடாக மிகவும் இலகுவாக பிரசுரித்துக்கொள்ளலாம்.

- வாகன தரிப்பிட வசதி
- வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதி

LAKE HOUSE

லேக் ஹவுஸ் விளம்பர நிலையம்,
இல. 72, ஹைலெவல் வீதி, மஹரகம.
தொலைபேசி: 011 2828 114 / 071 9879094
maharagama.advt@lakehouse.lk

வார நாட்களில் (அரச விடுமுறை நாட்கள் தவிர) மு.ப. 8.30 முதல் பி.ப. 5.00 மணி வரை திறந்திருக்கும்.

www.adz.lk
it's what you want

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adz it's what you want Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want




- Auto Focus

adz Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368

E-mail adzsuo@gmail.com

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)

## பலவீனமான பாலங்கள் தொடர்பான அறிக்கைகளுக்கு விலைமனுக்களை அழைத்தல்

[IFB No.: RDA/PD/UVA(W)/GOSL(WB)/2024/01]

மேலேயுள்ள IFB இலக்கத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் தெமோதர ஸ்பிரிங் வெலி (Spring Valley) வீதியில் (B-097) 13/6 பாலத்திற்கான அணுகுவழிகளை நிர்மாணிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் (ஊவா மாகாணம்) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலுக்காக 2024.05.21 ஆம் திகதியிலிருந்து 2024.06.11 ஆம் திகதியன்று வரையும் வீஅஅ இன் www.rda.gov.lk என்ற இணையபக்கத்தை பார்வையிடும்படி அல்லது 057-2222170/ 057-2222171 என்ற தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மாகாண பணிப்பாளர் (ஊவா மாகாணம்),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் திருத்தம்

**குறிப்பிலக்கம்:** KDS/YNU/4/1/LD/F/567

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் கொண்ட காணி பொதுமக்களின் தேவையொன்றுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2017.02.08 ஆந் திகதிய இல. 2005/19 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தின் 1 A - 5 A வரையான பகுதியையும் 2024.02.22 ஆம் திகதிய 2372/20 திருத்தப் பத்திரத்தின் 1 - A பிரிவையும் பார்வையிடவும்.

**உப அட்டவணை**

காணித்துண்டு இல: காணித்துண்டு இல. 52 என்று காட்டப்படுவதோடு அது ஆ.வ. மஹ/6554ன் காணித்துண்டு இல. 1 - 47 வரையும் 49 - 52 வரையும் என திருத்தம் செய்கின்றேன். காணித்துண்டு 48 நீக்கப்படல் வேண்டும்.

**கையொப்பம்**
**எஸ்.எம்.சீ. குணரத்ன,**
**பிரதேச செயலாளர் மற்றும்**
**காணி சுவீகரிப்பு அதிகாரி,**
**யட்டிநுவர**

**2024, மே மாதம் 16 ஆம் திகதி**
**யட்டிநுவர பிரதேச செயலகத்தில்**




சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்




**ஜீப்புகள், பிக்கப்புகள்**
விற்பனைக்கு

HY-1490 Nissan x-trail 2001 அதியுயர் விலைக்கு. வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0714 542958. 033505

PQ-37 1 8 Tata 207 cab 2 0 11 அதியுயர் விலைக்கு . வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0714 542958. 033503

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## பெறுகை அறிவித்தல்

### எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை - சப்ரகமுவ மாகாணம்

01. கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக எம்பிலிப்பிட்டிய - பிரதேச சபையின் செயலாளரால் 2024.06.11 மு.ப 10.15 வரை கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல. | வேலை விடயம் | அண்ணளவான மதிப்பீட்டு வேலைப் பெறுமதி (ரூ.மி) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி (ரூ) | ஒப்பந்தப் பதிவுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | எம்பிலிப்பிட்டிய பிரதேச சபைக் கட்டிடத்தின் முதலாம் மாடி நிர்மாணம் | 45.11 | 7500.00 | 452,000.00 | C5 மற்றும் C4 |

02. இக் கேள்வி கோரல் திறந்த போட்டி பெறுகை செயற்பாட்டின் கீழ் இடம்பெறுவதுடன், இவ் வேலை ரூ.மி. 50 இற்கு குறைவான படியால் அரச நிதி சுற்றுநிருப இல. 2016/0411 (மற்றும்) 2016/04111 (இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த) CIDA (தரப்படுத்தல் முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிட நிர்மாணத்திற்காக) கேள்விதாரர் ஒருவரை தேர்ந்தெடுக்கப்படுதல் நடைபெறும்.

03. 2024.05.21 முதல் 2024.06.10 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை மேற்கண்டவாறு கட்டணங்களைச் செலுத்தி எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. சகல கேள்விதாரர்களும் இக் கைத்தொழிலுக்காக மேற்படி கேள்வி பிணை முறி பெறுமதியுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணை முறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றை 2024.06.11 முதல் 2024.10.07 வரை செல்லுபடியாகுமாறு “செயலாளர், பிரதேச சபை, எம்பிலிப்பிட்டிய” பயனாளியாக பெயர் குறிப்பிடப்பட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறி மூலம் அல்லது குறித்த கைத்தொழிலின் பெயரில் கேள்விப் பிணைமுறித் தொகையாக பிரதேச சபையில் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை எம்பிலிப்பிட்டிய பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது தொ.பே.இலக்கம் 047 - 2261275 மூலம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படுபவருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.06.11 மு.ப. 10.15 இற்கு அல்லது அதற்கு முன்பு எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் கைதொழிலுடன் சம்பந்தப்பட்ட நகல் பிரதியை வேறு உறைகளில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

07. 2024.06.11 மு.ப. 10.30 இற்கு எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

08. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது அரைவாசியாக ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.

09. சகல கேள்விகளும் 2024.09.09 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**2024.05.20ம் திகதி**

**செயலாளர்,**
**பெறுகைக் குழு,**
**எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை,**
**எம்பிலிப்பிட்டிய.**

கமத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சு
## தேசிய உணவு மேம்பாட்டு சபை
(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)

NFPB

### திறந்த விலைமனுக்கோரல் - அரிசி கொள்வனவு செய்தல்

கமத்தொழில் அமைச்சின் கீழ் செயல்படுத்தப்படும் எமது சபையினால் பாடசாலை மதிய உணவுத் திட்டத்திற்காக அரிசி வழங்குவதற்காக பின்வரும் விவரக்குறிப்புகளின் கீழ் **250 மெ.தொ.250** உள்நாட்டு நாட்டரிசியை (வேகவைத்த) (Steam Nadu) கொள்வனவு செய்வ-தற்கான விலைமனுக்கோரல்.

| | |
|---|---|
| அரிசியல்லாத வேறு வெளிப்பொருள் (அதிகபட்ச எடையின் நிறை %) | 1 |
| ஈரப்பதம் (அதிகபட்ச எடையின் நிறை %) | 12 |
| பிற கலவைகள் (அதிகபட்ச எடையின் நிறை %) | 1 |
| உடைந்த அரிசி (அதிகபட்ச எடையின் நிறை %) | 5 |
| நெல் சதவீதம் (தானியம்/கிலோ அளவு) | 0.5 |

பாடசாலை மதிய உணவுத் செயற்திட்டத்தின் கீழ், அரிசி கொள்வனவு செய்யப்படுவதுடன் உயர்தர அரிசி வழங்கப்பட வேண்டும் மேலும் வழங்கப்படும் அரிசி சபையின் களஞ்சிய சாலையில் சரிபார்த்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படும், மேலும் அரிசி நிபந்தனைகள் மீறப்பட்டு தரமின்றி வழங்கப்படும் அரிசி களஞ்சியசாலையால் ஏற்றுக்கொள்ளப்படாது.

கோரலை பெறும் வழங்குனர் ஒரே நேரத்தில் 10-25 தொண்களுக்கு இடையில் வழங்க வேண்டும், மேலும் மீதமுள்ள இருப்புகளை பகுதியளவில் வழங்கலாம். அரிசி வழங்கப்படும் போது 25 கிலோ பைகளில் (பை எடையுடன்) வழங்கப்பட வேண்டும். கோரலை பெறும் வழங்குனர், கோரலை பெற்ற நாளிலிருந்து **105 நாட்களுக்கு** செல்லுபடியாகும் அரிசி இருப்பு மதிப்பில் 5% வங்கி உத்தரவாதத்தை வழங்க வேண்டும், மேலும் பண உத்தரவாதத்தையும் வைப்பு செய்ய வேண்டும்.

பதிவு செய்வதற்காக முன்வைக்கும் **ரூபா.1,000.00** கட்டணத்தை தலைமை அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் செலுத்தி விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ள முடியும். அல்லது விண்ணப்பம் மற்றும் அறிவுறுத்தல் படிவத்தினை **www.nfpb.lk** எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். பதிவுக்கட்டணத்தை இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையத்தின் நிதிப்பிரிவிற்கு **“இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்”** எனும் பெயரில் இலங்கை வங்கி பொரளை கிளையில் **கணக்கு இலக்கம் 194125** இற்கு வைப்புச்செய்து அந்த பற்றுச்சீட்டுடன், முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் முதற் பிரதியை பதிவுத்தபாலின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள **2024.05.30** ஆம் திகதி **பி.ப.2.30** மணிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க, பணிப்பாளர் குழுவின் கூட்ட அறையில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடல் வேண்டும்.

விலைமனுக்கோரலை சமர்ப்பிக்கும் போது நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம் **ரூ.470,000/-** அல்லது **ரூ.300,000/-** பண உத்தரவாதம் **105 நாட்களுக்கு** செல்லுபடியாகும் வகையில் வைப்பு செய்யப்பட வேண்டும். சமர்ப்பிக்க வேண்டிய வங்கி உத்தரவாதத்தின் படிவத்தை மனு ஆவணத்துடன் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுக்கோரல் ஏற்றுகொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர் மனுக்கள் உடனடியாக திறக்கப்படும் மேலும் வழங்குனர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளலாம். காலதாமதமாக கிடைக்கப்பெறும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சமர்ப்பிக்கப்படும் மனு இடப்பட்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அரிசி வழங்களுக்கான விலைமனுக்கோரல் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும் - 011-2580194

**தேசிய உணவு மேம்பாட்டு சபை**
இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்ட.
தொலைபேசி : 011 2506895, பெக்ஸ் : 011 2506907

SELACINE

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **Grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the work(s) stated in the Table below.

2. The **Chairman, Local Authority Procurement Committee, Local Development Support Project (LDSP) on** behalf of the **Valikamam East Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) stated in the Table below.

| No | Contract No | Contract Name | Estimated Cost (Rs. Mn) Without VAT | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | **LDSP/NP/ JAF/VEPS /2024/PT3/ 01(I)** | CONTINUATION OF BALANCE WORK CONSTRUCTION OF FISH MARKET AND MEAT STALL AT PUTTUR-STAGE-II(COMPLETION WORKS OF LDSP) (LANDSCAPING WORK) | 4.96 | C8 or above BUILDING | 60 | 63 Days | 50,000.00 | 11-Sep-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

5. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Schedule) in the Bidding Document.

6. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur, (T.P No: 021 205 8867)** and inspect the bidding documents at **Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur,** from 21-**may-2024** until 11-**june-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days.

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur** from 21-**may-2024** until 11-**june-2024** between **09:00 Hrs.** to **15:00 Hrs.** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.3,000.00**. The method of payment will be **by cash.**

8. Bids (Original and Copy) shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee (LAPC), Local Development Support Project (LDSP), Valikamam East Pradeshiya Sabha , Point Pedro Road , Puttur, Jaffna** on or before **10.30** Hrs on **12-june-2024** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9. The Bid shall be valid up to 63 days after the deadline for Bid submission. All bids shall be accompanied by a Bid Security as stated in the Table above.

10. The Pre-Bid meeting will be held at Valikamam East Pradeshiya Sabha -Head Office, Point Pedro Road – Puttur on 28th may 2024 at 10.00 hrs, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Local Development Support Project (LDSP),**
**Valikamam East Pradeshiya Sabha , Puttur.**

**21.05.2024**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கி.மீ. 1,500 வீதி செயற்திட்டங்களுக்கான விலைமனுக்கோரல் (IFB) (மேல் மாகாணம்)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளுடன்) ரூ.மில்லியன்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரு) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/SP/1500KM/ WP/KAL/156 | கலஹேன சோமசிரி கடை வீதியை கடந்து கட்டுஹேன வரையான வீதியை மேம்படுத்தல் | 26.35 | C5 மற்றும் C4 | 350,000.00 | 91 |
| RDA/SP/1500KM/ WP/KAL/187 | முங்ஹேன பன்னை முதல் அனந்தகம புது மெதுர வரையான வீதியை மேம்படுத்தல் | 25.56 | C5 மற்றும் C4 | 350,000.00 | 91 |
| RDA/SP/1500KM/ WP/KAL/201 | அம்பகஹகும்புர அமுஹேன பெப்பிலியாவத்த சுனாமி வீடுகள் மில்லகசுதுமுல்ல மற்றும் மினுவாங்கொட பாடசாலை வரை பெப்பிலியாவத்த வீதியை மேம்படுத்தல் | 38.68 | C5 மற்றும் C4 | 550,000.00 | 91 |
| RDA/SP/1500KM/ WP/GAM/191 | பூகொட குமரிமுல்ல தேவாலயம் மற்றும் கிராமத்திற்கு உட்செல்லும் கரகல மாவத்தை வீதியை மேம்படுத்தல் | 27.38 | C5 மற்றும் C4 | 400,000.00 | 91 |
| RDA/SP/1500KM/ WP/GAM/209 | புபுதுகம பிரதான வீதியை மேம்படுத்தல் | 59.60 | C4 மற்றும் அதற்கு மேல் | 850,000.00 | 91 |
| RDA/SP/1500KM/ WP/COL/202 | மாலபல்ல மிஹிந்து மாவத்தை வீதியை மேம்படுத்தல் (Balance work) | 26.27 | C5 மற்றும் C4 | 350,000.00 | 91 |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.05.18** ஆம் திகதி முதல் **2024.06.10** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)

**அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவு இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலையின் வருமானத்திலிருந்து நிதியிடப்பட்டது**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் | ஒப்பந்த இலக்கம் மற்றும் அதிவேக நெடுஞ்சாலை | வாகன இனம் மற்றும் எண்ணிக்கை |
|---|---|---|
| பராமரிப்பு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் | RDA/EOM&M/PRC/2024/MNT/06 தென்திசை அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பு | தொழிலாளர்களின் போக்குவரத்திற்கான ட்ரக் - 01<br>ரிப்பர் ட்ரக் - 02 |
| தண்ணீர் பவுசர்களை வாடகைக்கு அமர்த்துதல் | RDA/EOM&M/PRC/2024/MNT/11 தென்திசை அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பு | தண்ணீர் பவுசர் - 02 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள ஒப்பந்தங்களுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.05.21 ஆம் திகதியிலிருந்து 2024.06.04 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையபக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**EOM&M பிரிவின் பெறுகைக் குழுவின் பிரதி பணிப்பாளர் நாயகம்,**
**பிரதி பணிப்பாளர் நாயகம், EOM&M பிரிவு மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

## மக்கள் வங்கி
### பிராந்திய தலைமைக் காரியாலயம் - புத்தளம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட 07.06.2024 வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் திகதிகள் 08.06.2024 & 09.06.2024**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | வென்னப்புவ |
|---|---|
| **கிளைகள்** | புத்தளம், சிலாபம், வென்னப்புவ, நாத்தாண்டிய, கல்பிட்டிய, மாதம்பை, ஆனமடு, தங்கொட்டுவ, மஹவெவ, மாரவில |
| **சேவை மையங்கள்** | மதுரங்குளிய, சிலாபம் மீன்பிடித்தளம், ஆரச்சிக்கட்டுவ, உடப்புவ, பொலவத்த, லுனுவில, உல்ஹிதியாவ, கொட்டாரமுல்ல, வலிப்பென்னாகஹமுல்ல, நாரவில, நுரைச்சோலை, ஆண்டிகம, தொடுவாவா |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**புத்தளம்**
**தொலைபேசி இல. 032-2253301**

www.peoplesbank.lk
PEOPLE'S BANK
Pride of the Nation

## மக்கள் வங்கி
### பிராந்திய தலைமைக் காரியாலயம் - வன்னி

**மீட்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏலவிற்பனை**

மக்கள் வங்கி வன்னிப் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / மற்றும் சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 03.06.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

**ஏலவிற்பனை நிகழும் தினம் - 04.06.2024**

| ஏலவிற்பனை நிகழும் இடம் | பிராந்திய காரியாலயம், வன்னி, வவுனியா |
|---|---|
| **கிளைகள்** | முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன், செட்டிக்குளம் |
| **சேவை மையங்கள்** | புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வவுனியா நகரம், நெடுங்கேணி, பேசாலை, கிளிநொச்சி நகரம், பளை, விசுவமடு, மல்லாவி, கனகராயன்குளம், நானாட்டான், சிலாவத்துறை |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏலவிற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம், இல.9, 1/1, புகையிரத நிலைய வீதி, வவுனியா, வன்னி. தொலைபேசி இல : 024 2225054 / 024-2222972

www.peoplesbank.lk
PEOPLE'S BANK
Pride of the Nation

## மக்கள் வங்கி
### பிராந்திய தலைமைக் காரியாலயம் – கொழும்பு கிழக்கு
### மீட்கப்படாத அடகு நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி கொழும்பு கிழக்கு பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டு 07.06.2024 திகதி வரை மீட்கப்படாததும் புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

**ஏலவிற்பனை செய்யப்படும் திகதிகள் 08.06.2024 மற்றும் 09.06.2024**

| ஏலவிற்பனை செய்யப்படும் இடங்கள் | பத்தரமுல்ல | கங்கொடவில |
|---|---|---|
| கிளைகள் | அதுருகிரிய, பத்தரமுல்ல, கொலொன்னாவ, கொட்டிகாவத்த, கடுவெல. | மஹரகம, கொட்டாவ, நுகேகொட நகரம், கங்கொடவில, நுகேகொட, பிட்டகோட்டே |
| சேவை நிலையங்கள் | தலுவத்துகொட, மாலபே, ஹோகந்தர, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், வெல்லம்பிட்டிய, கொத்தட்டுவ, முல்லேரியா புதிய நகரம், நவகமுவ, பண்டாரவத்த. | பன்னிப்பிட்டிய, பமுனுவ ஹபரக்கட, மத்தேகொட, கொஹுவல தெல்கந்த, ஜயவர்தனபுர அம்புல்தெனிய, நாவல, ராஜகிரிய, அதுல்கோட்டே, தலபத்பிடிய. |

இந்த ஏலவிற்பனையை மறு அறிவித்தல் இன்றி இரத்துச் செய்ய, ஏலவிற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல. 177A, உயர் மட்ட வீதி (High Level Road), நுகேகொட**
**தொலைபேசி இல. 0112812260/0112854189**

PEOPLE'S BANK
Pride of the Nation

## பெறுகை அறிவித்தல்
### சுகாதார சேவைகள் திணைக்களம் (மே.மா)
### கொழும்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்

எமது பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| லொட் இல. | உருப்படிகள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| லொட் 01 | மேசைக் கணனி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | 1,500.00 |
| லொட் 02 | மடிக் கணனி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் | 1,500.00 |
| லொட் 03 | பெயர்ப் பலகைகளை வழங்கி பொருத்துதல் | 1,000.00 |
| லொட் 04 | சடல குளிர்சாதனத்தை வழங்கி பொருத்துதல் | 1,500.00 |

கேள்வி ஆவணங்களை 2024-05-21ஆம் திகதி முதல் 2024-06-12ஆம் திகதி வரை வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.45 மணி வரை லொட் இலக்கங்களுக்கு இயைபுடைய மீளளிக்கப்படாத கட்டணத்தை கொழும்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தேவையாயின் கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04ஆம் லொட் இலக்கத்திற்கு இயைபான கேள்வி முன்னோடிக் கூட்டம் 2024-06-10ஆம் திகதி அவிசாவளை ஆதார வைத்தியசாலையில் இடம்பெறும்.

பூரணப்படுத்திய இரு நகல்களிலான கேள்வி ஆவணங்களை (மூலப் பிரதி மற்றம் நகல் பிரதியென) முத்திரைக் குறி பொறித்து இந்த அலுவலகத்தின் நிர்வாக அலுவலரின் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் தவிசாளர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. 1287, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்யலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘ லொட் இலக்கம் (......) வழங்குவதற்கான கேள்விகள் - 2024’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2024-06-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் 2024-06-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இவ்வலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கொழும்பு.**
**த.பெ. இல. 1287, புதிய செயலகக் கட்டிடம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு-10**

**தொலைபேசி: 011-2452006**
**011-2452022**

## இலங்கை வங்கி
### மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு அதற்கடுத்த கூட்டிலுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டிலுள்ள திகதியிலும் அதே கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கிளையிலும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.)

| இலங்கை வங்கிக் கிளை | நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | மீட்பதற்கான இறுதித் திகதி | ஏல விற்பனைத் திகதியும் இடமும் |
|---|---|---|---|
| நுகேகொட அ.மே.கி<br>மகரகம மே.கி<br>பத்தரமுல்ல அ.மே.கி<br>விஜேராம சந்திக்கிளை<br>தலவத்துகொட<br>பிட்டகோட்டே<br>கடுவெல<br>பொரலஸ்கமுவ<br>பெலவத்த<br>ராஜகிரிய மே.கி<br>அத்துருகிரிய<br>மாலபே<br>ஹங்வெல்ல<br>கொட்டாவ | 2023.03.07ஆம் திகதி வரை 12 மாதங்களுக்கும் 2023. 06.07வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் | 2024.06.07 | கடுவெல கிளை 2024.06.08 மற்றும் 2024.06.09 |
| தெகிவளை அ.மே.கி<br>மொரட்டுவ அ.மே.கி<br>கட்டுபத்த மே.கி<br>இரத்மலானை மே.கி<br>கல்கிசை<br>மொரட்டுமுல்ல<br>ஹொரண மே.கி<br>ஹோமாகம மே.கி<br>ஹோமாகம - ITUM<br>மத்தேகொட<br>மீகொட<br>பாதுக்க<br>இங்கிரிய<br>கெஸ்பேவ<br>கோனபொல<br>பண்டாரகம<br>பிலியந்தல மே.கி | 2023.03.07ஆம் திகதி வரை 12 மாதங்களுக்கும் 2023.06.07வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் | 2024.06.07 | தெகிவளை மேற்தரக் கிளை 2024.06.08 மற்றும் 2024.06.09 |
| களுத்துறை அ.மே.கி<br>பாணந்துறை மே.கி<br>பாணந்துறை நகரம்<br>கெசல்வத்த<br>பேருவளை<br>தொடங்கொட<br>மத்துகம மே.கி<br>தர்கா நகரம்<br>வாத்துவ<br>கட்டுக்குருந்த<br>போம்புவல<br>அகலவத்த<br>பதுரலிய<br>புலத்சிங்கல<br>அளுத்கம<br>பெலவத்த நகரக்கிளை<br>களுத்துறை மாவட்டச் செயலகம் - உப கிளை | 2023.03.07ஆம் திகதி வரை 12 மாதங்களுக்கும் 2023. 06.07வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் | 2024.06.07 | களுத்துறை அதிமேற்தரக் கிளை 2024.06.08 மற்றும் 2024.06.09 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏல விற்பனைகளை இரத்துச் செய்யும், பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

**இலங்கை வங்கி**
**பிரதிப் பொது முகாமையாளர்**
**அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளைக் கடன் செயற்பாட்டு - பிரிவு II**
**தலைமை அலுவலகம், கொழும்பு 01.**

**தொலைபேசி - 0112399568/ 0112204545**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## 1964 இல. 28 இன் கீழான நிலம் கையகப்படுத்தல் (திருத்தச்) சட்டத்தின் கீழான நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (அத்தியாயம் 460) பிரிவு 7(1) ன் கீழான அறிவிப்பு

**குறிப்பு எண்: KDS/PHT/4/6/3/2**
**காணி அமைச்சின் இல: 4-3/7/2013/HW/598**

கண்டி கிரிமெடிய வீதி அபிவிருத்திக்காக நிலம் கையகப்படுத்தலுக்காக இல 2114/72 16 மார்ச் 2019 திகதியிடப்பட்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்கண்ட அறிவிப்பில் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட மு.பி.மஹ 6791 துண்டு 15 மீள் அளத்தல் செயற்பாட்டிற்கு உட்படுத்த வேண்டி இருப்பதனால் திட்ட வரைவின் பின்வரும் காணித்துண்டு இலக்கங்கள் மீள் கணக்கெடுப்பு செய்யப்பட வேண்டியிருந்ததால் அந்த காணித்துண்டு இலக்கங்களை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக புதிய காணித்துண்டு இலக்கங்கள் மற்றும் விஸ்தீரணம்களைக் கொண்டு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்வதற்கு 2024/02/29ஆம் இலக்க 2373/35ஆம் திகதியிடப்பட்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (iii) பகுதியை பார்வையிடவும்.

**எச்.கே.சாகரிகா தில்ஹானி,**
**பிரதேச செயலாளர் மற்றும்**
**நிலம் கையகப்படுத்தும் அதிகாரி,**
**பாத்தஹேவாஹெட்ட.**

**2024 மே மாதம் 13 நாள்**
**பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலகத்தில் இருந்து**

## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி
### பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **04/06/2024**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல.462/A, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.15, அலகு 07, துன்னாலை வீதி, நெல்லியடி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **05/06/2024**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **06/06/2024**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.235, புதிய காலி வீதி, அம்பலாங்கொட.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

Sunday Observer adz it's what you want
தினகரன் வாரமஞ்சரி
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

| Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words) | | |
|---|---|---|
| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# இந்திய பிரீமியர் லீக் தொடரின் பிளே ஓப் சுற்று இன்று ஆரம்பம்

இந்திய பிரீமியர் லீக் தொடரின் ஆரம்ப சுற்றுப் போட்டிகள் நிறைவடைந்த நிலையில் இன்று (21) பிளோ ஓப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. முதல் போட்டியில் இன்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகள் அஹமதாபத்தில் மோதவுள்ளன.

எட்டு வாரங்கள் நீடித்த ஐ.பி.எல். ஆரம்ப சுற்றில் நடந்த 70 போட்டிகளை தொடர்ந்து புள்ளிப் பட்டியலில் முதல் நான்கு இடங்களை பிடித்த முறையே கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சன்ரைசஸ் ஹைதராபாத், ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் பிளே ஓப் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன.

இதில் முதல் இரு இடங்களை பிடித்த அணிகளுக்கு இடையிலான முதல் பிளே ஓப் போட்டி தகுதிகாண் ஆட்டமாகவே நடைபெறுகிறது. இதில் தோற்கும் அணிக்கு இறுதிப் போட்டிக்கு முன்னேற மற்றொரு வாய்ப்பு கிடைக்கும். வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

இந்நிலையில் நாளை அஹமதாபாத்தில் நடைபெறும் இரண்டாவது பிளே ஓப் ஆட்டம் நொக் அவுட் போட்டியாகவே இடம் பெறும். ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுக்கு இடையிலான இந்தப் போட்டியில் தோற்கும் அணி வெளியேறுவதோடு வெற்றி பெறும் அணி முதல் தகுதிகாண் போட்டியில் தோற்ற அணியுடன் இரண்டாவது தகுதிகாண் போட்டியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (24) பலப்பரீட்சை நடத்தும்.



இரண்டாவது தகுதிகாண் போட்டியில் வெல்லும் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் என்பதோடு ஐ.பி.எல். இறுதிப் போட்டி எதிர்வரும் மே 26 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது.

# எல்.பி.எல். ஏலம் இன்று

லங்கா பிரீமியர் லீக் தொடருக்கான வீரர்கள் ஏலம் இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.



இந்த வீரர்கள் ஏலத்தில் 420 வீரர்கள் இடம்பெற்றிருப்பதோடு இவர்களில் 154 இலங்கை வீரர்கள் மற்றும் எஞ்சிய 266 பேரும் வெளிநாட்டு வீரர்கள் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்து.

ஏலத்துக்கு முன்னர் வீரர்களுடன் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தத்திற்கு செல்ல அணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இன்றைய வீரர்கள் ஏலத்தில் அணிகளுக்கு 500,000 டொலர்களை பயன்படுத்த முடியும். இதில் அணி ஒன்று வீரர்களை தக்கவைக்கும் பட்சத்தில் இந்த ஏலத் தொகையில் இருந்து குறைக்கப்படுவதோடு தொடர்ந்து எஞ்சிய பணத்துடனேயே ஏலத்தில் நுழைய முடியும்.

# மாகாண சம்பியனானது அக்கரைப்பற்று ஹிஜ்றா

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



டயலாக் வலையமைப்பினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்றா விளையாட்டுக் கழகம் கிழக்கு மாகாண சம்பியன் பட்டத்தை வென்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளது.

அம்பாறை உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை (18) நடைபெற்ற மாகாண மட்ட இறுதிப்போட்டியில் அம்பாறை அணியை 2 – 0 என ஹிஜ்றா அணி வீழ்த்தியது.

## சர்வதேச செய்திகள்



# ரபாவில் படை நடவடிக்கையை விரிவுபடுத்த இஸ்ரேல் உறுதி: 810,000 பேர் வெளியேற்றம்

### மற்றொரு மருத்துவமனையில் முற்றுகை

காசாவின் வடக்கில் ஜபலியா மற்றும் தெற்கில் ரபா நகரங்களில் இஸ்ரேலிய படை மற்றும் பலஸ்தீன போராளிகளுக்கு இடையே உக்கிர மோதல் நீடித்து வருவதோடு காசா வெங்கும் இஸ்ரேல் நடத்தி வரும் தீவிர தாக்குதல்களில் மேலும் பல பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு காசாவில் உள்ள பைத் லஹியா மற்றும் காசா நகரின் ஷெய்க் அல் ரத்வானில் உள்ள வீடுகள் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல்களில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தெற்கில் ரபாவுக்கு அருகில் உள்ள தால் அல் சுல்தான் பகுதியில் அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது மூவர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

மறுபுறம் ஜபலியா அகதி முகாமில் இஸ்ரேல் தொடர்ந்து உக்கிர தாக்குதல்களை நடத்தி வருவதோடு பலஸ்தீன போராளிகளும் அங்கு கடும் சண்டையிட்டு வருகின்றனர்.

ஜபலியாவில் இஸ்ரேலிய துருப்புகளுடன் சண்டையிட்டு வருவதாக காசாவை தளமாகக் கொண்ட இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் ஆயுதப் பிரிவான அல் குத்ஸ் தெரிவித்துள்ளது. இமாத் அகில் பள்ளிவாசலுக்கு அருகில் இடம்பெற்ற மோதலில் படையினர் கொல்லப்பட்டும் பலர் காயத்திற்கும் உள்ளானதாக அந்தக் குழு டெலிகிராமில் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு காசாவில் உள்ள அல் அவ்தா மருத்துவமனையை இஸ்ரேலிய டாங்கிகள் சுற்றி வளைத்து அங்குள்ள பணியாளர்கள் மற்றும் நோயாளர்கள் சிக்கி இருக்கும் நிலையில் அவர்களின் நிலை குறித்து அச்சம் அதிகரித்துள்ளது. அந்த மருத்துவமனையின் விநியோகங்களும் தீர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஒரு வாரத்திற்கு முன்னர் காசாவுக்கான உதவிகள் வரும் எகிப்துடனான ரபா எல்லைக் கடவையை கைப்பற்றிய இஸ்ரேலியப் படை அதனை மூடியிருக்கும் நிலையில் மற்றொரு எல்லைக் கடவையான கெரம் ஷலோமும் மூடப்பட்டிருப்பதால் காசாவுக்கான உதவிகள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தெற்கு காசாவில் படை நடவடிக்கையை மேலும் விரிவுபடுத்தவுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட், அங்கு சென்றுள்ள வெள்ளை மாளியை பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுல்லிவானிடம் தெரிவித்துள்ளார்.

'ஹமாஸை அகற்றுவதை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் பணயக்கைதிகளை மீட்பதற்கு ரபாவில் தரைவழி நடவடிக்கையை நாம் விரிவுபடுத்தவுள்ளோம்' என்று கல்லன்ட் அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரபாவில் வெளியேற்ற நடவடிக்கைகளில் மாற்றங்கள் செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காசாவில் பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாக இருந்த எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவில் இஸ்ரேல் தரைவழி நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் அங்கிருந்து மக்கள் மீண்டும் ஒருமுறை வெளியேறி வருகின்றனர். கடந்த இரண்டு வாரங்களில் ரபாவில் இருந்து 810,000க்கும் அதிகமானவர்கள் வெளியேறி இருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

'ஒவ்வொரு முறையும் மக்கள் வெளியேறும்போதும் அவர்கள் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்கின்றனர். பாதுகாப்புக்காக மக்கள் அனைத்தையும் விட்டு விட்டு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். ஆனால் அங்கு பாதுகாப்பான பிரதேசம் எதுவும் இல்லை' என்று அந்த ஐ.நா. நிறுவனம் எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஐந்து மாதங்களுக்கு முன்னர் தெற்கு நகரான கான் யூனிஸில் தமது வீட்டை விட்டு குடும்பத்தினருடன் ரபாவை நோக்கி வெளியேறிய மாஜித் ஒமர் என்பவர் மீண்டும் தமது வீட்டுக்கே திரும்பிய நிலையில் 'காசாவின் எந்த இடமும் பாதுகாப்பானதாக இல்லை' என்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். 'எமது குழந்தைகள், பேரக் குழந்தைகள் மற்றும் மகள்மாரை அழைத்துக் கொண்டு திரும்பி வந்து எமது வீட்டின் இடிபாடுகளுக்கு மேல் வசிக்கிறோம். ஏனென்றால் அடைக்கலம் பெறுவதற்கு இங்கு எந்த இடமில்லை' என்று ஒமர் குறிப்பிட்டார்.

# நெதன்யாகுவுக்கு பிடியாணை



போர் குற்றச்சாட்டுக்காக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் காசாவின் ஹமாஸ் தலைவர் யெஹ்யா சின்வார் மீது பிடியாணை பிறப்பிப்பதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்குத் தொடுநர் விண்ணப்பித்துள்ளார்.

2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் போர் குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு இந்த இருவரும் பொறுப்புக் கூறுவதற்கான நியாயமான பின்னணிகள் இருப்பதாக தலைமை வழக்குத்தொடுநரான கரீம் கான் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் மற்றும் ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மைல் ஹனியே மற்றும் ஹமாஸ் ஆயுதப் பிரிவுத் தலைவர் முகமது தயிப் அகியோரும் தேடப்படுவோரில் உள்ளக்கப்பட்டுள்ளனர். ஹேகை தளமாகக் கொண்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பகுதிகளில் இஸ்ரேலின் செயற்பாடுகள் தொடர்பில் கடந்த மூன்று ஆண்டுகளாக விசாரணை நடத்தி வருவதோடு அண்மைக் காலத்தில் அது ஹமாஸ் தொடர்பிலும் விசாரணை நடத்துகிறது.

# ஈரானின் இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார் மொஹமது மொக்பர்

ஹெலிகொப்டர் விபத்தொன்றில் கொல்லப்பட்ட ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மரணத்திற்கு ஈரானில் ஐந்து நாள் துக்க தினத்தை அறிவித்திருக்கும் அந்நாட்டு உயர் மட்டத் தலைவர் அல் கமனெய், துணை ஜனாதிபதி மொஹமது மொக்பர் இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்படுவதை உறுதி செய்துள்ளார்.

இதன்படி ஈரானின் அடுத்த ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான தேர்தல் அதிகபட்சம் 50 நாட்களுக்கு நடத்தப்படவுள்ளது.

'ஐந்து நாள் பொது துக்கதினத்தை அறிவித்துக் கொள்வதோடு அன்புக்குரிய ஈரானிய மக்களுக்கு எனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்' என கமனெய் அறிவித்ததாக ஈரானின் உத்தியோக பூர்வ செய்தி நிறுவனமான இர்னா குறிப்பிட்டுள்ளது.

'நிறைவேற்றுப் பிரிவை (இடைக்கால ஜனாதிபதி) மொக்பர் நிர்வகிப்பார் என்பதோடு அதிகபட்சமாக 50 நாட்களுக்குள் ஒரு புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க சட்டமன்ற மற்றும் நீதித்துறைக் கிளைகளின் தலைவர்களுடன் இணைந்து ஏற்பாடுகளை மேற்கொள்ள அவர் கடமைப்பட்டுள்ளார்' என்றும்





உயர்மட்டத் தலைவரின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரானிய அரசியலமைப்பின் 131 ஆவது சரத்துக்கு அமைய, முதல் துணை ஜனாதிபதி, பாராளுமன்ற சபாநாயகர் மற்றும் நீதித்துறை தலைவர் ஆகியோர் அடங்கிய கவுன்சில் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான வழியை தயார் செய்ய வேண்டும்.

ரைசியை போன்றே மொக்பரும் நாட்டின் உச்ச அதிகாரம் பெற்ற கமனெயுடன் நெருக்கமானவராவார். 2021 ஆம் ஆண்டு ரைசி ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டபோதே மொக்பர் துணை ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். ஈரானில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருந்த நிலையில் ரைசி தனது இரண்டாவது தவணைக்காக போட்டியிடவிருந்தார்.

1981 தொடக்கம் அனைத்து ஈரானிய ஜனாதிபதிகளும் தமது இரண்டு தவணைகளையும் பூர்த்தி செய்த நிலையில் அந்தத் தேர்தல் பற்றி பெரிதாக அவதானம் செலுத்தப்படாமல் இருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதியின் திடீர் மரணம் அந்நாட்டு அரசியல் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஈரான் இஸ்லாமிய புரட்சிக்குப் பின்னர் ஜனாதிபதி ஒருவர் தனது பதவிக் காலத்தை பூர்த்தி செய்யாத இரண்டு சந்தர்ப்பங்களே இதற்கு முன்னர் பதிவாகி இருந்தன.

1981 இல் அப்துல்ஹசன் பனிசதிர் நம்பிக்கையில்லா தீர்மானத்தில் வெளியேற்றப்பட்டதோடு அதே ஆண்டில் முஹமது அலி ரஜாயி படுகொலை செய்யப்பட்டார்.

வடக்கு ஈரானின் கிழக்கு அசர்பைஜான் மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ரைசி சென்ற விமானம் விபத்துக்குள்ளானதில் அவருடன் ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹொஸைன் அமீராப்தொல்லாஹியம், மாகாண ஆளுநர் உட்பட பல அதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் ஹொஸைனின் மரணத்தை அடுத்து பிரதி வெளியுறவு அமைச்சர் அலி பகரி கானி, பதில் வெளியுறவு அமைச்சராக அந்நாட்டு அமைச்சரவை நியமித்துள்ளது. அவர் 2021 தொடக்கம் ஈரானின் பிரதி வெளியுறவு அமைச்சராக செயற்பட்டு வருகிறார்.

கானி 2007 மற்றும் 2013 இற்கு இடையே ஈரானின் உயர் தேசிய பாதுகாப்பு கௌன்ஸிலின் பிரதிச் செயலாளராக செயற்பட்டு வந்தவராவார்.

# சவூதி மன்னருக்கு நுரையீரல் அழற்சி



சவூதி அரேபிய மன்னர் சல்மான் நுரையீரல் அழற்சியால் பாதிக்கப்பட்டு ஜித்தாவில் உள்ள அல் சலாம் மாளிகையில் சிகிச்சை பெறுவதாக அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அழற்சி குறையும் வரை 88 வயதான மன்னருக்கு நுண்ணுயிர் எதிர்ப்பு சிகிச்சை அளிக்கப்படுவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னரின் உடல் நிலை காரணமாக முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மான், நேற்று இடம்பெறவிருந்த தனது ஜப்பான் விஜயத்தையும் ஒத்திவைத்திருப்பதாக ஜப்பானின் தலைமை அமைச்சரவை செயலாளர் யொஷிமாசா ஹயாஷி தெரிவித்துள்ளார்.

மன்னர் சல்மான் அதிக காய்ச்சல் மற்றும் மூட்டு வலி காரணமாக அல் சலாம் மாளிகையில் உள்ள அரச குடும்ப மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இரண்டரை ஆண்டுகள் முடிக்குரிய இளவரசராக இருந்த மன்னர் சல்மான் கடந்த 2015 ஆம் ஆண்டு உலகின் முன்னணி எண்ணெய் ஏற்றுமதி நாடான சவூதியின் ஆட்சியாளராக முடிசூடிக்கொண்டார்.

# இந்திய கடற்படை கப்பலுக்கு வரவேற்பு

வியட்நாம் நாட்டின் ஆழ்கடல் விரிகுடாவான கம் ரன்க்கிற்கு பயணித்துள்ள இந்திய கடற்படைக் கப்பலுக்கு பெரு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஐ.என்.எஸ். கில்தான் என்ற இந்திய கடற்படை கப்பலுக்கே வியட்நாமின் மக்கள் கடற்படை அங்குள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து இந்த வரவேற்பை அளித்துள்ளது.

இந்தியாவுக்கும் வியட்நாமுக்கும் இடையிலான நீண்ட கால நட்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே இந்த விஜயம் அமைந்துள்ளதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் மேம்படுத்தும் வகையில் எமது கடற்படைக் கப்பல் வியட்நாமுக்கு பயணித்ததாக இந்திய கடற்படை எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.